குமரகுருபரர் காட்டியவழி



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

கழக வெளியீடு : ௪௨௩.

குமரகுருபரர் :: :: காட்டியவழி

கழகப் புலமையாளர்
வித்துவான்
பெ. பழனிவேல் பிள்ளை அவர்கள்
எழுதியது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை.

First Edition : Oct. 1946.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS,
PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD.,
TIRUNELVELI : : MADRAS.

Printed by S. Viswanathan at the Central Art Press, G.T., Madras—
Q. H. No. MS. 161/C—Q. H. No. MS. 95/B.

பதிப்புரை.

தமிழ்மொழி மறுமலர்ச்சி பெற்றுவரும் இந்நாளில், தமிழுலகில் பலப்பல வகை நூல்கள் தோன்றிப், பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையுமாந் தன்மை வாய்ந்த நந்தமிழ் மொழிக்கு, ஆக்கமளித்து விளக்கந் தருதல் இயல்பே. புதுமை நலஞ் சிறக்க, நூல்கள், காலவகையில் வளர்ச்சியுற்ற பல கலைத் துறைகளிலும் இயலும். இங்ஙனம் புதுப் புதுக் கருத்துக்களையும் பிறநாட்டு வளர்ச்சியுற்ற கலைகளையும் விரும்பிக்கொண்டு காலத்துக் கேற்ப நந்தமிழ் மொழியை வளம்படுத்துவது இன்றியமையாதது போலவே, பழம் பண்பாட்டை யுணர்ந்து போற்றும் வகையில் நம் பண்டைப் பெருந் தமிழ்ப் புலவோர் தம் அறிவாற் கண்டெழுதிய அரும்பெரும் நூல் நலங்களைப் பலவகைத் துறையில் ஆய்ந்தெழுதிப் பயன் கோடல், கலைநலங் காணும் நாகரிக மக்கட் கூட்டத்திற்கு இன்றியமையாக் கடப்பாடாகும். இவ்விரு வகை முயற்சியிலும் பிற நாட்டார் பலப்பல நூல்கள் இயற்றித், தம் மொழியையும், தம்மையும் யாரும் போற்றுமாறு ஒழுகுகின்றனர்.

புலமை நலஞ் சான்ற அறிவோர் நூல்களை ஆராயும் நூல் வகையுள் ஒன்றாகக் **குமரகுருபரர் காட்டியவழி** என்னும் இந் நூல் எழுகின்றது. இது குமரகுருபரர் நீதிநெறி விளக்க மென்னும் நூலால் மக்கட்கு வழங்கிய அறிவுரைகளை ஆய்ந்து, அந்நூல்நலங் காண எழுந்தது; எளிய நடையில் இயன்றது. இங்ஙனம் பண்டைப்புலவோர் நூல்நலங் காணும் முறையில் மிகச் சில நூல்களே எழுந்துள்ளன. **கழகப் புலமையாளர் வித்துவான் பெ. பழனிவேல பிள்ளை** இயற்றிய இச்சிறு நூலையும் விரும்பி ஏற்றுத், தமிழ் ஆக்கவேலையில் மக்கள் பெரிதும் துணைபுரிவாராக! இவ்வகை நூல்கள் மாணவ உலகத்துக்குப் பெரும் பயன் அளிக்கும் என்னுந் துணிபுடையோம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்.

குமரகுருபரர் காட்டியவழி

க. தோற்றுவாய்

ஒரு நாட்டு மக்களின் தன்மையையும், உயர்ந்த பண்புகளையும் அம் மக்கள் மொழியில் அமைந்து விளங்கும் நூல்களாலேயே அறியலாம். நூல்களெல்லாம், அந்நாட்டில் தோன்றிய அறிவிற் சிறந்த பெரியோர்கள், மற்றை மக்கள் வாழ்க்கை முறையில் அறிந்து கடைப் பிடிக்க வேண்டி உரைத்த, உண்மைகள் பொதிந்த அறிவுரைகளைக் கொண்டுள்ள மணிக் கலங்கள் அன்றோ! அப் பெரியோர்கள் அன்றோ தாங்களும் வாழ்க்கைப் பயனை யுணர்ந்தவர்களாய்ப், பிறரையும் வாழ்க்கையைப் பயனுடைய வழியில் செலுத்துமாறு செய்கின்றனர். ஒரு நாட்டு முன்னேற்றமும், அறிவிற் சிறந்த அந்நாட்டுப் பெரியார்களா லன்றோ அமைகின்றது.

ஆகவே, ஒரு நாடு, அந் நாட்டுப் பெரியோர்களும் அவர் இயற்றிய நூல்களுமே வழிகாட்டியாக அமையக், காலப்போக்கில் மேன்மேலும் முன்னேறிக் கொண்டு செல்கிறது. இத்தகைப் பல பெரியோர்களும் அப் பெரியோர் இயற்றிய பல நூல்களும் பெறாத நாடும், உலகில் முன்னேற்றம் அடையாமல் தாழ் நிலையே எய்தும் என்க.

இனி, நந் தமிழ் நாட்டை நோக்கின், இத் தமிழ் நாட்டில் பழங்கால முதல் அறிவிற் சிறந்த பெரியோர்களுக்கும் அவர் இயற்றிய நூல்களுக்கும் குறைவில்லை. நந் தமிழ் நாட்டில் முதற் சங்கம், இடைச்

சங்கம், கடைச் சங்கம் என்று மூன்று சங்கங்கள் தோன்றி நிலை பெற்றிருந்தன என்பதும், அச் சங்கங்களில் வீற்றிருந்து தமிழ் ஆராய்வாராய்ப் புலவர் மிகப் பலர் விளங்கி யிருந்தனர் என்பதும், அவர் இயற்றிய நூல்களும் பலவகைப்பட்டன என்பதும், அவற்றுள்ளும் பிற பழந்தமிழ் நூலுள்ளும் இறந்தன போக இருப்பன எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை நூல்களும், சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை என்னும் தமிழ் வளம் பழுத்த விழுமிய நூல்களும் பிறவும் என்பதும் அறியப்பட்டனவே.

சங்க காலம் முதற்கொண்டு தமிழ்ப் பெரியோர் செய்த நூல்கள் பல துறையிலும் அமைந்தவாயினும், மக்கள் தம் வாழ்க்கையை நன்னெறியில் செலுத்துமாறு வலியுறுத்துக் கூறுவனவா யமைந்த, மக்கள் ஒழுக்க நெறியாம், அறநெறியைக் கூறும் நூல்களே பலவாம். இதனால் தமிழர், வாழ்க்கையை நெறியறிந்து செலுத்த நினைந்து, ஒழுக்க நெறியையே குறிக் கோளாகக் கொண்டு, அவ் வழியிலே தலைநிற்பதில் முயன்று, வாழ்க்கைப் பயனை அடைதற்கே நின்றனர் என்பது தெளியப்படும்.

இத்தகைய அறநெறியைக் கூறுவனவேயாய் அமைந்தனவே நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி என்னும் பதினெண் கீழ்க்கணக்கில் அமைந்த நூல்கள் பலவுமாம்.

இவற்றுள் வள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்ற செந்தமிழ் நூலே அறநெறி

பலவற்றையும் தன்னுட் கொண்டதாய் அறநெறிகளை மக்கள் மனங்கொள்ளுமாறு வலியுறுத்துத் தெளித்துக் கூறுவதாய் முடிமணி போன்று விளங்குவது.

இதற்குப் பின்னரும், இத்தகைய அறநெறி கூறும் நூல்கள் ஒவ்வொரு வகையில் சிறப்புடையவாய்ப் பல எழுந்தன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நறுந்தொகை, நன்னெறி என்பனவெல்லாம் இப்பொருள் கூறி எழுந்தனவே. ஆத்திசூடி முதலிய சில நூல்கள், ஔவை என்னும் தமிழ் மூதாட்டியாரால் இளஞ்சிறார்க்கு ஏற்பச் செய்யப்பட்டன என்பதை யாவரும் அறிவர்.

இம் முறையில், பிற்காலத்தே திருக்குறளுக்கு ஒத்த சிறப்பினை யுடையதாய் எழுந்தது, "நீதிநெறி விளக்கம்" என்னும் அரிய செந்தமிழ் நூலாகும். இதை இயற்றியவர், உலகத்துப் பொருள்களின் தன்மையை உள்ளவா றுணர்ந்து, முற்றத் துறந்த முனிவராய் விளங்கிய குமர குருபர அடிகள் என்பார்.

அடிகள் காலம்

இவ்வடிகள் பதினேழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் பெருந் துறவியாயும், அருந்தமிழ்ப் புலவராயும், சிவநெறிச் செல்வராயும் விளங்கி யிருந்தவர். அக்காலத்தில் தமிழ்நாடு நாயக்க மன்னர் ஆட்சியில் அமைந்திருந்தது. இவர் நாளில் மதுரையிலிருந்து அரசுபுரிந்தவர் திருமலை நாயக்கர் என்பவர். இவரும் சமயப்பற்று வாய்ந்தவராய் இருந்தமையின் அடிகளின் நண்பராயும் அமைந்திருந்தனர்.

அக்கால நாட்டுநிலை

அக் காலங்களில் அடிக்கடி உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்தவாயினும் மக்கள் கல்வியும் செல்வமும் நிறைந்து வாழ்ந்து வந்தனர். ஆயினும் அவ்வப் பொழுது ஆட்சிபுரியும் அரசர்களது தன்மையைப் பொறுத்து நாட்டு நிலையும் ஒரு சிறிது உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தது. இக்காலத்திலே வாணிகத்தின் நிமித்தம் வந்த போர்ச்சுக்கீசியரும் டச்சுக்காரரும், நாயக்க மன்னர்களுக்கு அடங்கித் தமிழ் நாட்டின்கீழ் கடற்றுறைப் பக்கங்களில் சில பகுதிகளுக்குரிமை பூண்டிருந்ததோடு தங்கள் சமயத்தைப் பரப்புதலிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

அடிகள் வாழ்க்கைக் குறிப்பு

குமரகுருபரர் திருநெல்வேலிச் சில்லாவில் தாமிர வர்ணி ஆற்றங் கரையில் அமைந்துள்ள ஸ்ரீ வைகுண்டம் என்னும் சிற்றூரைச் சேர்ந்த கைலாயபுரததில் பிறந்தவர்; வேளாண்குடியினர்; சிறுவயதில் ஊமையாயிருந்து திருச்செந்தில் முருகனருளால் பேசப் பெற்றவர்.

இவர் காலத்துத் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து ஞான ஆசிரியராய் ஞானமணி விளக்காய் விளங்கியிருந்த மாசிலாமணி தேசிகரின் பெருமையைக் கேள்வியுற்று, அவரைத் தம் ஞானாசிரியராகக் கொண்டு அவரிடத்து ஞானங் கேட்டுத் துறவு பூண்டவர்.

பின் காசி சென்று அங்கு அரசு செய்திருந்த மகமதிய மன்னனிடம் தம் அறிவு வன்மையாலும்

சொற்றிறத்தாலும் நண்பராய், அவனிடம் இடம் பெற்று வாங்கி ஒரு மடம் சமைத்து, அங்கிருந்து கொண்டு கோவில் வழிபாடு செய்வித்தும் சிறந்த அறங்களை இயற்றியும் விளங்கி யிருந்தவர்.

இவர், கடவுண் மாட் டெழுந்த ஆரா அன்பி ஞல் பல திருத்தலங்கட்குச் சென்று வழிபட்டுக் கந்தர் கலிவெண்பா, கைலைக் கலம்பகம், மீனுக்ஷி யம்மை பிள்ளைத் தமிழ், திருவாரூர் நான்மணி மாலை, முத்துக் குமரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும் மணிக் கோவை, காசிக் கலம்பகம் முதலிய தமிழ் வளம் பழுத்த விழுமிய நூல்களைச் செய்தவர்.

'நீதிநெறி விளக்கம்' என்னும் நூல் திருமலை நாயக் கர் விருப்பத்திற் கிணங்க செய்யப்பட்ட தென்பர்.

அரைசரும் குடிகளும் அம்ம வேறலர்
உரைசெயின் உயிர்உலாம் உடல மாவரால்,

என்பவாதலின், நாடு நலம்பெற அரசர்க்கும் மக்கட் கும் சிறந்த அறிவுரைகளை இந் நாலுள் எடுத்துக் கூறுகின்றனர்.

இவ்வடிகள் கூறும் உலகியல் ஒழுக்கத்தினையும், அறநெறி யியற்கையினையும், அவற்றை வகுத் துணர்த்து மாற்றையும், அவர்தம் உள்ளக்கிடக்கை யையும் உணர்தல் வாழ்க்கை நலம்பெற விழையும் தமிழ்மக்கட்கு வேண்டுவதாகலின், அவற்றை ஆராய்ந் துணர்தலும் நமது கடமையாயிற்று.

உ. நூற் பொருளும் பகுப்பும்

அடிகள் தாம் சிறந்ததென் றுணர்ந்தனவும் மக்கள் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தக்கனவுமான உயர்ந்த ஒழுகலாறுகளையே சுருங்கிய முறையில் தம் நூலுள் எடுத்துக் கூறுகின்றனர். இவ்வொழுக லாற்றையே நீதி என்ற சொல்லால் குறித்தனர். 'நீதி' என்ற சொற்குப் பொருள், 'உலகத்தோடு பொருந்துதல்' என்றே, "நயனின்று நன்றி பயக்கும்" என்ற குறளின் விளக்க உரையில் உரைத்தனர் பரிமேலழகரும். உலகத்தொடு பொருந்தலாவது உலகியல் உணர்தலும் அறநெறி யறிதலுமன்றே; உலகம் என்பது சிறப்பாக உயர்ந்தோரையே குறிக்குமாதலின்.

உலகியல் ஒழுக்கமாவது பொருளீட்டிப் பலரோடுங் கலந்து வாழும் முறையாகும். அறநெறியொழுக்கமாவது மனமொழி மெய்கள் தூயனாய், ஈதல் முதலிய நல்லியல்பு பொருந்தி, அவ்வுலகியலை மேம்பட நடத்தலாகும். ஆகவே உலகியலும் அறநெறியும் பிணைந்து ஒன்றாய் நிற்பன. இவ்வுலகியலொழுக்கமும் அறநெறி யொழுக்கமும் இந் நூலுள் கூறப்படும். இவையே மக்களொழுக்கமாய் மக்கள் வாழ்க்கை நெறியாகும். இவற்றின் மாறுபட்டு, உலகியல் உணராமையும் மறநெறி நிற்றலும் மக்க ளியற்கைக்கு மாறுபட்ட விலங்கியற்கையாம் என்க.

மக்கள் வாழ்க்கை நெறியாம் உலகியலையும் அறநெறியையும் ஒருவனுக்கு அறிவுறுத்துவதுதானும் கல்வியே யன்றிப் பிறிதில்லை. கற்று அறிவிற் சிறந்தார், உலகியல் உணர்ந்து ஒழுகி அறநெறி நின்று,

செயற்கருஞ் செயல்களைச் செய்து புகழ் மேம்பட்டு விளங்குவதும், கல்லாக் கயவர், உலகியல் உணராது, அறநெறிக்கு மாறான மறநெறி நின்று, சிறந்த செயல் மேற் கொள்ளாது விலங்கினங்கள் போன்று உண்டு உறங்கிக் காலங் கழிப்பதும் பெரும்பான்மையாக உலகில் காணப்படுவனவே. ஆதலின் கல்வியே மக்களுக்கு உண்மை வாழ்க்கை நெறியைப் புகட்டுவதென்பது துணியப்படுமன்றோ?

> விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்

என்ற பொய்யில் புலவன் பொருளுரையையும் நோக்குக.

இது கருதியே உலகநடை யுணர்ந்து நடக்க வேண்டிய மக்களுக்கு அதை யுணர்த்தும் கல்வியை விரித்துத் தம் நூலின் முதற்கண் கூறுவாராயினர். மேலும் கல்வியைப்பற்றிய முதற் செய்யுளிலேயே,

> அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்

என்று உலக நடையில் மக்கள் குறிக்கோளான அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கையும் கல்வியே கொடுக்குமென்றுங் கூறியதுங் காண்க. கல்வி யறிவால் அறநெறி யுணர்தலும், அவ்வறிவாலேயே பலவகைத் தொழிற்றுறைகளைத் தெரிந்து பொருளீட்டலும், அவ்வறி வுடைமையால் தானும் அப்பொருள் கொண்டு வகையறிந்து இன்புற்றும் தன்னைச் சேர்ந்தாரையும் பிறரையும் இன்புறுத்தியும் வாழ்தலும், அவ்வறிவாலேயே வீட்டு நெறியைக் கடைப்பிடித்தலும் இயலுவனவன்றே.

உலகநடை யறிந்தொழுகுதற் கேதுவான கல்வியைக் கூறியவர், பின் அவ்வுலக நடை உலகில் நிலை பிறழாது காக்கவல்ல அரசியல் கூறினர். அரசனில்லாவிடத்து உலகியல் கெட்டுத் தீயோர் மறநெறியே மிகுந்து நாடு குன்றுமன்றே ?

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றும்

என்று மணிமேகலை கூறுமாற்றையும் நோக்குக. மடவார் கற்புக்கெடின் உலகியல் ஏது? இல்லறமென்னும் நல்லறமேது? மாதவர் நோன்புக்குத் தடைநேரின் துறவறமேது?

மேலும், மன்னன் எவ்வழி அவ்வழி குடிகளாதலின், அரசியல் மேன்மையாலேயே உலக நடையில் மக்களும் சிறந்து விளங்குவர்.

இகல்மன்னன் சீர்வழிப் பட்டதே மன்பதை
[மற்றென்செய்யும்
சீர்வழிப் பட்ட புணை

என்று அடிகளும் இதைத் தாமேயும் தம் நூலகத்தே உணர்த்துகின்றனர்.

உலக நடையை அறிவுறுத்துங் கல்வியையும் உலக நடை நிலைபிறழாது காக்கவல்ல அரசியலையும் கூறியபின், அறநெறி வழாத உலகியலொழுக்கத்தைச் சிறப்பாக எடுத்து உணர்த்துகின்றார்.

முயற்சியின்றி உலகியல் இல்லையாகையால் அம்முயற்சியின் மேன்மையையே முன்னர்க் கூறிப் பின் வினையாடற் றன்மையைக் கூறுகிறார்.

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு

என்பதும் மெய்ம்மொழி யன்றோ? பின், மேற்கொண்ட வினைக்கண் பகை நேர்ந்துழிப் பகையோம்பும் திறத்தையும், எச்செயலிலும் மனமொழி மெய் தூயனாய் இருத்தற் றன்மையினையும், பொருளீட்டு மாற்றையும், பொருளை ஈத்துவக்கும் இன்பத்தினையும், அதனோடு தொடர்புடைய இன்சொலின் மேன்மையையும் செல்வாக்கின் பயனையும் கூறுகிறார்.

இவற்றின்பின் உலகநடை இறந்தொழுகும் தீயோர் இயற்கைகள் சில கூறுகிறார்.

கடைசியாக உலக நடையின் மறு பக்கமான துறவோர் இயற்கை கூறி நூலை முடிக்கின்றனர்.

இங்ஙனம் சிறந்த அறநெறியே இடையிடை விரவ மக்கள் மேற்கொள்ளத் தகுந்த உலகியலுக்கே வழி காட்டினராய் உலகியல் ஒழுக்கமும் அறநெறி இயற்கையும் என்று பகுத்துணருமாறு உலகநடையை அறிவுறுத்தும் கல்வியையும், உலக நடை பிறழாது காக்கவல்ல அரசியலையும், உலக நடையையும், அதன் மறுபக்கமான துறவையும் அடிகள் வகுத்துக் கூறினர் என்க.

இனி, வாழ்க்கை நெறியைப் புகட்டும் கல்வி, ஒருவனது இளமைப் பருவத்தேயே பயிலத் தக்கதும் ஆகும். அடுத்துக் கூறப்படும் அரசியல் உலகியல் இரண்டும் பொருளொடு தொடர்புடையனவாய் இளமைப் பருவம் கழிந்து வாழ்க்கையில் தலைப்படுங்கால் பொருந்துவன. கடைசியில் கூறப்படும்

துறவு விட்டு நெறியாய் அமைந்து வாழ்க்கையில் முடிந்த பயனைத் தலைக்கூட்டும். அடிகள் கூறியவை இம்முறையும் பொருந்தியிருப்பது காண்க.

நூற்பொருளும் கடவுள் வாழ்த்தும்

இனி, நூல் நுதல் பொருளெல்லாம் குறிப்பால் தன்னகத்தடக்கி நிற்றலும் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமாதலின் இந்நூல் நுதல் பொருளையும் இந் நூலின் மங்கல வாழ்த்துக் குறிக்கின்றது.

இந் நூலின் மங்கல வாழ்த்து,

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று

என்பது. இச் செய்யுளை அடிகள் தம் நூலுககு மங்கல வாழ்த்தாக அமைத்ததோடு, மக்கள் யாவரும் இறைவனை வணங்கிப் பயன்பெற வேண்டும் என்ற இன்றியமையாக் கடப்பாட்டையும் காரணங் காட்டி வற்புறுத்துகின்றார்.

இளமை நீரில் உண்டாகும் குமிழியை ஒத்தது[1]. செல்வம் நீரில் சுருண்டு சுருண்டு எழுகின்ற அலையை ஒத்தது. உடல் நீரில் எழுதும் எழுத்தை யொத்தது. இளமை செல்வம், உடல் என்றவற்றின் நிலையற்ற தன்மையை யுணர்ந்து, இவற்றை அழியக்கூடிய உலக இன்பத்துக்கே பயன்படுத்தாமல், இவற்றால் என்றும் அழியா இன்பமாகிய வீட்டின்பத்துக்கு வழி

1. உருவகம் உவமையின் வேறுருவேயாதலின் உவமை வாய் பாட்டால் கூறப்பட்டது.

தேடுவீராய், இறைவனை அன்புசெய்து வணங்குவீராக என்று கூறுகின்றார் அடிகள்.

உலக இன்பம் நிலையற்றது என்று கூற வந்தவர், உடலோடு இளமை செல்வம் என்ற இரண்டையும் உடன் கூறினமை சிந்திக்கத் தக்கது. உடலிருந்தும் இளமையே உடலுக்கு வலியைக் கொடுத்து உடலைத் தொழிலுறச் செய்வதால், அச் சிறப்புத் தோன்ற அவ் விளமையை உடன் கூறினார். மேலும் இளமையே மக்களை இன்பத் துறையிலும் இழுத்துச் செல்வதென்பதை "இளமை மீதூர இன்பத் துறையினில் எளிய ரானார்" என்று தம் பெரிய புராணத்தில் சேக்கிழார் உணர்த்துமாற்றையும் காண்க. இவ் வுலகத்து உடல் பெற்றானொருவன் தான் இன்புறுவதற்கு உறு கருவியாய்க் கொண்டு தேடுவது செல்வத்தையே ஆதலால் அச் சிறப்பு நோக்கி அச் செல்வத்தையும் உடன் கூறினார்.

அறிவு நலஞ் சான்ற தமிழ்ப் பெரியோர் இயற்றிய பழந்தமிழ் நூல்களினும் அப்பெரியோர் இம் மூன்றையுமே ஒருங்கு கூறி நிலையாமையை உணர்த்துதல் காணத்தக்கது. எடுத்துக் காட்டாக ஐம் பெருங் காப்பியத்துள் ஒன்றாய் அமைந்து அறநெறியை வகுத்துரைப்பதையும் ஒரு பெரு நோக்காகக் கொண்ட மணிமேகலை யென்னும் மாண்புடை நூலுள்,

> இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
> வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா.
> ....
> மிக்க அறமே விழுத்துணை யாவது

என்று இம் மூன்றன் நிலேயாமையே எடுத்துக் கூறி யிருப்பதுங் காண்க.

இனிக், காப்பியத்துள் தலே சிறந்த காப்பியமா யதும், தங்நாட் டரசைத் துறந்து அந்தமில் இன்பத்து அழியா வீட்டரசை எய்துமாறு துறவு பூண்டொழு கிய இளங்கோ வடிகளால் இயற்றப் பெற்றதுமான சிலப்பதிகார மென்னும் சிறப்புடை நூலுள்,

உரு கெழு மரபின் அயிரை மண்ணி
இரு கடல் நீரும் ஆடினே யாயினும்
சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ யாயினும்
மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் மருங்கின்
செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்
கண்டனே யல்லேயோ காவல் வேந்தே
இளமை நில்லா தென்பதை எடுத்திங்கு
உணர்வுடை மாக்கட் குரைக்க வேண்டா
திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனே

என்று இம் மூன்றன் நிலேயாமையுமே எடுத்துக் கூறி யிருப்பது காணத்தக்கது.

இம் மங்கல வாழ்த்தால் இளமை, செல்வம், உடல் என்றவற்றின் நிலேயாமையைக் கூறி மக்களே இறைவனிடம் ஆற்றுப்படுத்தியவர், இம் மூன்றையும் பயனுடையவாய்ச் செய்து கொண்டொழுகி இறை வனே யடையும் வழியையே விரித்து, இந்நூன் முழு துங் கூறுகின்றனர் என்று கொள்க.

இளமையைப் பயனுடையதாகச் செய்ய அப் பருவத்தில் ஒருவனுல் கல்வியே கற்கப்படவேண்டும் என்றுணர்த்துவராய் அக் கல்வியின் மேம்பாட்டை முதலில் விரித்துரைக்கின்ருர்; இரண்டாவதாகப் பொருளின் துணைக் காரணமான அரசியல் கூறியும், அப்பொருள் துணைக்கொண்டு மேற்கொள்ளத் தக்க அறநெறி வழாத உலகியல் ஒழுக்கங் கூறியும் சென்றனர். கடைசியாக உடற்பயனுக அடைய வேண்டுவது அழியா வீட்டின்பமே யாதலின் அதனை யடைதற்குரிய சிறந்த வழியாக துறவறத்தைக் கூறி முடித்தார். இங்ஙனம் நூலில் விரித்துச் சொல்லக் கருதிய பொருளுக்கு ஒரு தோற்றுவாயாக, இம் மங்கல வாழ்த்து அமைந்ததும் நோக்கத் தக்கது.

௩. அடிகள் கண்ட மக்களியற்கை

அடிகள் மக்களுக்காம் ஒழுக்க நெறியாகக் கூறுவனவற்றை நோக்கப் புகுமுன், உலக மக்கள் பலரின் பொதுவான இயற்கையை உணர்ந்து குறிப்பன அறியத் தக்கன. உலகோரின் பொதுவான குணத்தைப்,

> பரபரப்பி ேனுடே பலபல செய்துஆங்கு
> இரவுபகல் பாழுக்கிறைப்ப

என்று கூறுகின்றனர்.

மக்கள் பலர் எக்காலமும் ஓடியாடி வருந்தி யுழைப்பதை அடிகள் உரைக்கின்ருர். ஆயினும் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி, சிறந்த பயன் கருதியன்றித் தம் வயிற்றென்றைக் கருதியே உணவு தேடுவதாக முடிகின்றது என்பதை யுணர்த்துகின்ருர். மக்கள் உணவு தேடுவதற்குரிய முயற்சியைச்

செய்வதோடு மற்றும் பெரும்பகுதியாகத் தமக்கும் பிறர்க்கும் நிலைத்த நன்மையைக் கொடுக்கக்கூடிய வழியில் முயலவேண்டுமென்பது அடிகள் கருத்து. சிறந்த அறவழிகளில் நிற்பதே என்றும் நிலைத்த பயனைக் கொடுப்பதாகும். பெண்டிர் மக்களோடு இன்புற்று வேறெச்சிறந்த செயலிலும் ஈடுபடாமல் வாழ்க்கையைக் கழிப்பது வறிதே கழிப்பதாகவேயாகும். ஆதலின் அறச் செயலில் முயல்வது நெல்லுக் கிறைப்பதாகவும், அங்ஙனமாகாது தமக்கும் தம்மைச் சேர்ந்தார்க்கும் மட்டும் பொருள் தேடியே நுகர்ந்து வாழ்க்கைப் பயன் பெறுதுபோதல் புல்லுக் கிறைப்பதாகவும் அமையு மென்றனர்.

இது குறித்தே மற்ருே ரிடத்தும்,

சிற்றின்பம் சின்னீர தாயினும் அஃதுற்ருர்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப

என்று கூறி, உலக இன்பமே நோக்கமாகக் கொண்டு உழல்கின்றவர் சிறந்த புகழையும் நிலைத்த இன்பத்தையும் தரும் அறவழியில் தலைப்படார் என்று பல மக்களின் இயற்கையான அறியாமையைக் கூறினுர்.

மேலும் இத்தகையோர் தம்முட லிடத்தே மிகுதியும் பற்று வைப்பாராய், அவ்வுடலையே பெரிதாக மதித்து, அவ்வுடல் வருத்தத்துக்கும் உடலழிவுக்கும் அஞ்சிச், சிறந்த காரியங்களில் ஈடுபடார் என்பர். மக்களின் உடற்பற்றைப்,

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளி வுன்னி மெய் விதிர்ப்பர்

என்று கூறினர்.

உடலின் தன்மையை எடுத்துக் கூறியது பெரிதும் உணரத்தக்கது. தம்முடலில் புண்ணுண்டாகி அதில் புழுவும் புழுக்கப் பெற்று முடைநாற்றம் வீசினும், அத்தகைய உடலையுங் கூடத் துறத்தற்கு மக்கள் சிலர் அஞ்சுகின்றனர், என்று அவர் தன்மையை விளக்கமாக எடுத்துரைத்தார். இத்தகைய உடற் பற்றுடையார் சிறந்த காரியங்களில் தலைப்படுவரோ? மானங் குறைய வந்துழி உயிரிழப்பரோ? பிறர் துயர் துடைக்கத் தம் உடலை வருத்துவரோ? சிறந்த காரியங்களைச் செய்த வழியன்றோ சிறப்பை யடையலாம். அழியும் உடலிடத்து அளவு கடந்த பற்றுடையார் சிறந்த காரியங்களைச் செய்து அழியாப் புகழுடம்பை எங்ஙனம் பெறுவர். இங்ஙனம் உடலில் மட்டும் அளவு கடந்த பற்றோடு, தோன்றியது முதல் இறக்கின்றவரை உடலோம்புதற்கே வருந்தி, நாளைக் கழிக்கின்றனர் மக்கள் என்றனர்.

இனிச், சில மக்களின் செயல்களைக் குறிப்பிட்டுரைக்கின்றார். சில மக்கள், உலகில் உண்மை நிலையுணர்வதில்லை; உணர்ந்தோரையும் தகமதித்து நடப்பதில்லை. உலகத்துப் பொருளொன்றே சிறந்ததெனக் கொண்டு, அது தேடுதலிலேயே தம் முயற்சியைச் செய்து, வேறு நிலையான புகழும் இன்பமும் கொடுக்கும் அறச் செயலில் ஈடுபடாராய், மேலும் உலகத்துப் பொருளுடையாரையே சூழ்ந்து, அவரிடத்துத் தம் குறையிரப்பாராய், அவர் ஏவிய செய்தொழுகுவர். அவர் உலோபியாய் இருப்பினும் பாரார். இதை அடிகள்

> இவறன்மை கண்டும் உடையாரை யாரும்
> குறையிரந்தும் குற்றேவல் செய்ப

என்றுணர்த்துகின்றனர்.

மேலும் இம் மக்கள் செல்வமற்றவராய் நற்குணக் குன்றனைய ஒருவரைக் காணின் அவர்களைச் சேர்கின்றார்களில்லை; அவரிடத்து இன்சொல்லோடு பேசுகின்றார் தானும் இல்லை; மேலும் அவரிடத்து வன்சொல் வழங்கி அவரை அவமதித்துப் புறக்கணிக்கின்றனர். இத் தன்மையையும் அடிகள்,

இன்சொலன் தாழ்நடையன் ஆயினும்ஒன் றில்லானேல்
வன்சொலின் அல்லது வாய்திறவா

என்று கூறினர்.

இன்சொல்லும் பணிவும் உடையராய குணச் செல்வர் பொருளற்றவழி அவரிடம் இன்முகந் தானுங் காட்டாது வன்சொல் கூறி அவமதிக்கின்றவர்கள், செல்வன் ஒருவன், இன்முகமும் இன்சொல்லுங் காட்டாது தன்னைச் சார்ந்தவரிடத் தெல்லாம் கொடுஞ் சொல் வழங்கிச் செருக்கொடு திரிந்தானயினும் அவன் செவ்வியை எதிர்நோக்கி யிருக்கின்றனர்.

என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற

என்ற இச் செய்தியையும் அடிகள் உணர்த்தினர்.

இங்ஙனம் உண்மை யறியாமல் ஒழுகுவது அவர்களது அறியாமையைத் தவிர வேறென்ன? மக்களது அவ் வறியாமையையும் அடிகள் கூறுகின்றார்.

நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு

"'காக்கை வெளி'தென்றும், 'தாய்க்கொலை நல்ல' தென்றும் தெளிந்த பொருளை அறிவு மயக்கத்தால் கூறும் மக்களும் உண்"டென்று மக்கள் அறியாமை யின் மிகுதியை நன்கெடுத்துக் கூறினர்.

இனி இவ்வறிவற்ருேர் செயலாக மேலும் கூறுவ தாவது :—

இகழின் இகழ்ந்துஆங்கு இறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப.

செல்வனே அரசனே ஒன்றை இகழ்ந்தானுயின் அறி வற்ற இம் மக்கள் நல்லது தீயது என்று பாராது தாமும் இகழ்கின்றனர். அவன் ஒன்றைப் புகழ்ந்தா னுயின் தாமும் புகழ்கின்ருர்கள்.

இங்ஙனம் அறிவற்றவர், அவர்கள் செய்வது தீய காரியங்களே யாயினும், அவற்றையும் தாமே செய்ததாகக் கூறிச் செருக்கியும் திரிகின்றனர்.

அல்லன செய்யினும் ஆகுலங் கூழாக்கொண்டு
ஒல்காதார் வாய்விட் டுலம்புப. (ஆகுலம்=ஆரவாரம்)

இம் மக்கள் ஆரவாரத்தையே பெரிதாக மதிக்கின்ற னர். 'வாய்விட்டு உலம்புப' என்று அவரது இழிசெய லைத் தெளிய உணர்த்தியவாறு காண்க.

இனி, இம் மக்களின் பொதுவான மற்ருேர் இயற்கையை அடிகள் கூறுவதும் காணத் தக்கது.

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வார்.

மக்கள்பலர் தாம் மகிழ்ந்திருக்க விரும்புகின்றனர். அங்ஙனம் மகிழ அவர்கள் மேற்கொள்ளும் முறை. பிறர் பழியையெல்லாம் பலர்க்கு எடுத்துச் சொல்லி

நகுவதாம். இத்தகையோர் பலரை உலகிற் காண லாம். பிறர் தீமை கூறி மகிழ்வதே அவர் இயற்கை யாய் இருக்கிறது. கீழோர் பலர் ஒன்று சேர்ந்து எளியான் ஒருவனைத் தம்மகத்தே கொண்டு அவனை இழித்துக் கூறி நகையாடுவர்; அவனைத் துன்புறுத்தி யும் மகிழ்வர்.

> தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
> துன்னற்க தீவினைப் பால்

என்ற மெய்ம்மொழியை அவர்கள் உணர்ந்தார்க ளில்லை. இவர்களுடைய செய்கை, 'ஒருவன் உடலின் நடுக்கத்தை நோக்கி மகிழும் பொருட்டு அவனுடைய கன்னத்தில் அறைந்து காணுவதை ஒத்தது' என்றும், 'அவர்கள் பெரியோர்களால் அஞ்சி நீங்கப்படுவர்' என்றுங் கூறினர் அடிகள்.

> மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக்
> கொல்வான்போல்
> கைவிதிர்த்து அஞ்சப் படும்.

இனி, மக்களின் மற்றொரு கொடுந் தீச்செயலையும் உணர்த்துவது காண்க.

> இடைதெரிந்து அச்சுறுத்து வஞ்சித்து எளியார்
> உடைமைகொண்டு ஏமாப்பார்......

செல்வன் ஒருவன் மேலும் மேலும் செல்வந் தொகுக் கவே முயல்கின்றான். இதற்கவன் மேற்கொள்ளும் வழி, தன்னினும் எளியார் பொருளைக் கொள்வதே. இதற்கு அவர்கள் சோர்வு பார்க்கின்றான். அவர் களைத் தன் வலிமை காரணமாக அச்சுறுத்துகின் றான். பல சூழ்ச்சிகளையும் வஞ்சனையும் மேற்கொண்டு பொருளைக் கவர்கின்றான். இம் முறையில் அவன்

தீநெறியில் ஈட்டிய பொருள், மேலும் தீய வழியி லேயே சென்று அவனுக்கு மேலும் மேலும் தீமையே தரும் என்பதை அவன் உணரான். ஈட்டற்குத் தீய வழியைக் கொண்டவன் மனம், செலவிடற்கு நல் வழியை நாடுமோ ?

இத்தகைய மக்களெல்லாரும் சிறந்த அறிவு வாய்க்கப் பெருது, நகைத்துப் பொழுது போக்கும் மக்கட் பதர் என்பது அடிகள் கருத்து.

போக்கறு கல்வி புலம்மிக்கார் பாலன்றி
மீக்கொள் நகையினர் வாய்ச்சேரா

என்றவிடத்து, உலகத்து மக்களைப் 'புலம் மிக்கார்' என்றும் 'மீக்கொள் நகையினர்' என்றும் இருவகை யினராகப் பிரித்தமை காண்க.

௪. உலகியல் ஒழுக்கம்

அடிகள் பெருந் துறவியாயினும், உலகிய லறிஞ ராய், உலகியலுக்கு வேண்டிய சிறந்த அறிவுரைகளைத் தம் நூலுள் கூறிச் செல்வது பெரிதும் உணரற்குரி யது. இவற்றுள் சிறந்தனவற்றை மட்டும் நோக்கு வோம்.

உலகியலில் பொருளே மேம்பட்டதென்பதை அடிகள் மக்களுக்கு வலியுறுத்திக் கூறுகின்றனர். கற்றோர் தாமும் பொருளுடைமையாலேயே சிறப் புறுவர் என்றுணர்த்துகின்றனர்.

எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்ப்பா டிலவாம்—மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்

என்பது அடிகள் கூறுமாறு.

சிறந்த உவமை கூறி அக் கருத்தைத் தெள்ளி தின் உணர்த்தினர். இல்லறமென்னும் நல்லறத்தைப் பூண்டோனுக்கு வாய்த்த மனைவி நற்குணமிலளாய வழி, அவன் மேற்கொண்ட அறத்தைத் தன் மனம் விரும்பியவாறு விளக்கமுற இயற்றல் முடியுமோ? அவன் அறச்செயலெல்லாம் தீக்குண மனைவியின் தொடர்பால் தடைப்பட்டுக் குன்றுமே யன்றோ? இதேபோல் கற்றோனிடத்தும் வறுமை தங்கிய வழி, அவ் வறுமையின் கொடுமையால், தான் கற்ற கல்வி யும் விளக்கம் பெறாது குன்றப் பெறுவ னன்றோ? வறுமை எதையும் அழிக்கு மொரு வாளே யாகும் என்றுணர்க.

பொருளீட்ட வேண்டி அரச காரியம் பார்த்தலின் மேன்மையையும் மக்கட்கு உரைக்கின்றனர்.

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலம் காண்டும்என்(று) எள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை யெல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்

என்று கூறினர்.

அரச காரியம் பார்த்தலால் சிறந்த ஊதியம் கிடைக்காமற் போயினும், அதனால் மனஞ் சோர்ந்து தொழிலை விடலாகா தென்றனர். நெடுநாளைய உழைப்பு முடிவில் அரசனால் மதிக்கப்பட்டுப் பெரும் பயனையும் கொடுக்குமென்றனர்.

இனி, மக்கள் அரச மதிப்பைப் பெறலின் மேன்மையையும், அரசன் மக்களைத் தக மதிக்க வேண்டும் முறைமையையும் அறிவுறுத்துகின்றார்.

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையின் ஏக்கழுத்த மிக்குடைய—மாகொல்
பகைமுகத்த வெள்வேலான் பார்வையில் தீட்டும்
நகைமுகத்த நன்கு மதிப்பு.

இவ் வரச மதிப்பையே மக்கள் பலர் விரும்புவ ராதலின், தகுதி யறிந்து மதித்தலை அரசன் மக்கள் மாட்டுச் செய்யவேண்டுமென்று கூறியதோடு, மக்கள் இம் மதிப்பையே நிறைந்த செல்வம் பெறலைவிட மேலானதாகக் கருதவேண்டு மென்றுங் குறித்தார். பொருள், அளவு கருதி வரையறுக்கப்படல்போல இம் மதிப்பின் பெருமை வரையறுக்கப்படாது பல நலனையும் எய்துவிக்கு மன்றே ?

இனி, உலகியலில் ஒருவரோ டொருவர் பழகும் முறையும் சிறந்த ஒன்ருதலால், அது குறித்தும் அடிகள் கூறுகின்றனர். மக்களுக்குப், பொதுவான அரசன் தன்மையைக் கூறி, அவனேடு பழகுமாற்றையுங் கூறுகின்ருர்.

அரசனின் பொதுவான குணமாக,

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே இறைமாண்டார்க்கு ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை யவர்க்கு (ஆர்வலர்=அன்பர்)

என்று கூறினர்.

இத்தகைய மன்னிடத்துப் பழகுமாற்றைக்,

கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க—ஒவ்வொருகால்
எண்மைய னேனும் அரியன் பெரிதம்மா
கண்ணிலன் உள்வெயர்ப்பி னன்

(எண்மையன்=நணுகுதற்கு எளியன்,
கண்ணிலன்=கண்ணேட்ட மில்லாதவன்)

என்று கூறினர்.

இங்ஙனமே, மக்களதியற்கை உணர்ந்து நடக்குமாறு அரசனுக்கும் கூறுகின்றனர்.

மக்களின் பொதுவான குணமாக,

இகழின் இகழ்ந்துஆங்(கு) இறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப—இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதை மற்றென்செயும்
நீர்வழிப் பட்ட புணை (இறைமகன்=அரசன்)

என்று கூறி, மக்களிடத்து அரசனொழுகு மாற்றை,

ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு

(கோது=குற்றம், முதுக்குறைவு=பேரறிவு)

என்று அறிவுறுத்துகின்றார்.

இனி, மக்கள் உலகியலில் பலரொடு பழகு முறையில், பலராலும் மதிக்கப்பட விளங்கற்கும் ஓருபாயங் கூறுகின்றார்.

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமல் நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

மூன்று காரியங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றார். முதலாவது, 'தம்மைச் சூழ்ந்தோருடைய நல்லியல்புகளை யெல்லாம் பலரிடத்துஞ் சொல்லிப் புகழவேண்டு'மென்றனர். இரண்டாவது, 'சூழ்ந்தோரிடம் காணப்படும் தீய வியல்புகளை யாருமறியாவாறு தம் மனத்தகத்தேயே பொதிந்து ஒழுகவேண்டு'மென்றார். மூன்றாவதாக, 'யாரிடத்தும்

அடக்கமாகப் பழகவேண்டு'மென்றனர். இங்ஙன மாயவழி அவரைப் பலரும் விரும்பி நண்புபாராட்டிப் புகழ்வரே யன்றி வேருவரோ ?

இனி, 'உலகியலில் செல்வாக்குற்ற மேலோர் தம் செல்வாக்கால், எளியோர்க்கு உற்ற குறைகளை முடித்து வாழவேண்டும் கடப்பாட்டினராதல் வேண்டு'மென்றும், 'அங்ஙனம் செய்யாதோர் நல்வினை நடைபெருவாறு தடுத்த கொடுமையோரே' என்றுங் கூறினர்.

சொல்வன்மை யுண்டெனில் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கம் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். (வாக்கு=செல்வாக்கு)

தன் மாட்டு அமைந்த இச் செல்வாக்கால் பலர்க்கு வேண்டிய நன்மையைச் செய்யும் திறமை யிருந்தும், அதனுல் பிறர் பயனடையாவாறு அவன் வீணே கழிந்தாணுயின், அவன் பிறர் நன்மை யடைதலை விரும்பாதவனுக வன்ஞே ஆயினுன். இது நல்வினை கோறலே யன்ஞே ? ஆகவே அவன் பெரும் பாவியாவன் என்று கூறினுர்.

இவற்கு மாருக உலகில் மற்ருெரு வகையினரு மிருக்கின்ருர்கள் என்றும், அங்ஙனம் இருத்தலும் ஆகாதென்றும் குறிப்பிடுகின்ருர். ஒருவர் அருங் காரியம் முடித்தற்கு வலிமையற்றவரா யிருப்பர். அவரிடம் ஒரு நண்பர் வந்து தமக்கு வேண்டிய சில காரியங்களை முடித்துத் தரும்படி கேட்பர். அங்ஙனம் கேட்டவளவில், தம்மால் அக்காரியம் முடித்தற்கியலாதென்று கூறின், தம் நண்பர் துன்புறுவர் என்று நினைந்து

"நாம் முடித்துத் தருவோம்" என்பர். கடைசியில் காரியம் முடிவுபெருது தம் நண்பர் வருந்துவர். தம் மால் அக்காரியம் முடிக்க வியலாதென்று கூறியிருப் பின் அந் நண்பர் வேறு யாரைக் கொண்டேனும் அக் காரியம் முடிக்கப் பெற்றிருப்ப ரன்ருே? அந் நண்ப ரின் பெரிய வருத்தத்துக்குக் காரணம், தாம் வலிமை யிலரா யிருந்தும் வலிமை யுடையார் போன்று கூறி யதே யன்ருே! இதை அடிகள்,

செயக்கடவ அல்லனவும் செய்தும்மன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னும்

என்று கூறினர்.

அந் நண்பர், அங்ஙனம் கூறியதற்கான காரணத் தையும் அடிகள் தெளிய உணர்த்திஞர். அவர், தம்மால் முடியாதென்று கூறின் தம் நண்பன் மனம் வருந்துமே என்று எண்ணிய 'போலிக் கண்ணேட் டமே' அந் நண்பனைப் பெருந் துன்பத்துக் குள்ளாக்கி யது என்று குறித்தனர். இக் கண்ணேட்டத்துக்கு அவர் கூறிய உவமையும் மிகப் பொருந்தியது.

செயிர்த்துரைப்பின்
நெஞ்சு நோம்என்று தலைதுமிப்பான் தன்னளிபோல்

என்று உவமை கூறினர்.

'தாம் தம் நண்பனிடம் சினந்துரைத்தால் அவன் மனம் நோவுமே யென்று அவன் தலையை வெட்டி வீழ்த்திவிடுவது போன்றிருக்கிற'தென்று கூறினர். இவையெல்லாம் உலகியல் உணர்ந்த உரவோரின் அறிவுரைக ளன்ருே?

ரு. அறமுணர்த்திய திறம்

அடிகள், அறங்களை வள்ளுவர் போன்று பலபடப் பகுத்து விரித்துக்கூருது, உலகியலைச் சார்த்திச் சிறந்த அறங்களையே கூறிச் செல்கின்றனர்.

அறத்தை அங்ஙனம் பொதுவகையாகக் கூறுபவர், முதலாவதாக அறத்தைப் புகட்டும் கல்வியை விரித்துக் கூறிக், கற்ருேர்க்கு வேண்டிய சிறந்த குணமாக அடக்கத்தையும், ஒழுக்கத்தையும் விதந்தெடுத்துக் கூறினர்.

இரண்டாவதாக, அறத்தை உலகில் நிலைபெறச் செய்யும் அரசியலைக் கூறி, அரசன் கடமைகளையும் அவனுக்கு வேண்டிய சிறந்த குணமாக அறிவுடைமை, செருக்கின்மை, கொடை, அருள், மானம், வீரம் என்பவற்றையும் சிறந்தெடுத்துக் கூறினர்.

மூன்ருவதாக, மக்கட்கு அறநெறியையே விதந்து கூறப்புகுந்து, மக்கட்கு வேண்டிய சிறந்த குணமாக ஆள்வினையுடைமை, வினையாடல், பகைத்திறம் தெறுதல் என்ற மூன்ருலும் மக்களின் வினை செயல் மேம்பாட்டைக் கூறிப், பின் அறத்தை வகுத்துக் கூறினர்.

அறத்தை யுணர்த்துபவர், அறமாவது மனமொழி மெய்களின் தூய்மையே என்று கூறுவாராய் முதலாவதாக,

மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தெவையும் தீயவே யாகும்—எனைத்துணையும்
தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்

என்று கூறி மனத்தூயோர் தன்மையை யுணர்த்தியும்,

இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னுர்
கனியும் மொழியும் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்

என்று கூறி மொழித்தூயோர் தன்மையை யுணர்த்தியும், பின் மனமொழி மெய்களின் தூய்மையை ஒரு சேரக் கூறுவாராய்ப்,

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யில்
புலமைந்துங் காத்து மன மாசகற்றும்
நலமன்றே நல்லா றெனல்

என்று முடித்தும் காட்டினர்.

"சொல்லின்கண் பொய், கோட்சொல், வன்சொல், பயனில்சொல் என்ற நான்கும் பொருந்தாதிருக்க வேண்டு"மென்று கூறினர். "மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐந்தும் தீய வழியிற் செல்லாமல் காக்க வேண்டு"மென்று மெய்த் தூயராந் தன்மையைக் கூறினுர். "மனத்தின்கண், 'எவ்வகைப்பட்ட மாசும்'. புகாமல் காக்கவேண்டும்" என்று கூறினுர்.

இங்ஙனம் மறநெறி கடிந்த அறநெறியை எஞ்சாமல் சுருங்கக் கூறிய தன்மைக் கேற்பக், கீழ்க் காணப் படும் மணிமேகலை யடிகள் மறநெறியை வகுத்துக் கூறுமாறு காண்க.

தீவினை யென்பது யாதென வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீ விழைவு
உலையா உடம்பிற் றோன்றுவ மூன்றும்

பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று
உள்ளந் தன்னின் உருப்பன மூன்றும் எனப்
பத்து வகையால்.

(வெஃகல்=பிறர் பொருளை வெளவ்வக் கருதல். வெகுளல் =சினங் கொள்ளல். பொல்லாக் காட்சி=உண்மை யறியா மயக்கம்.)

இவையே மக்களால் நீக்கத்தக்க பெரும்பான்மையான தீக்குணங்களாம். இவை கூறவே, இவற்றைச் சார்ந்த மற்றைத் தீக்குணங்களும் அடங்கும்.

இங்ஙனம் அடிகள், மறங் கடிந்த அறநெறியைத் வகுத்துக் கூறியதற் கேற்ப வள்ளுவரும்,

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

என்று தொகுத்துக் கூறியதும் உணரத் தக்கது.

இங்ஙனம் மனமொழி மெய்களின் தூய்மையைக் கூறி, அறநெறி தழைத்தற்காம் பொருளை ஈட்டு மாற்றை அடிகள் கூறுகின்றனர். "குலவுயர்ச்சி பெறும் முறையிலும், உண்மை முறையிலும், மேற்கொண்ட தவத்திற்கு அழிவில்லா முறையிலும், தன்னுரிமை யழியா முறையிலும், கடமையை உணர்ந்தும் தன் நிலைமைக்குத் தக அறநெறியே முயற்சி மேற்கொண்டு பொருளீட்ட வேண்டு"மென்று பொருளீட்டுங்காலத்து அறநெறியைக் கூறுகின்றனர்.

இதன்பின், இப்பொருட் பயனாக ஈகையைக் கூறினர். 'ஈதலறம்' என்று சிறப்பித்துச் சொல்லப் படுவதாய் அறத்துக்கெல்லாம் முதலாய் அமைவது ஈதலே யன்றோ!

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு

என்பதும் பொய்யாமொழி யன்றோ !

அடிகள், பொருளிட்டியான் ஈதற் குணத்தை யுடையனுயே இருத்தல் வேண்டும் என்றும், அங்ஙன மல்லாவிடத்து அவன் பொருள்அற்றவனுய் இருத் தலே நல்லது என்றும் கூறுகின்முர்,

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான்.

(கண்ணறையன்=கண்ணோட்டமில்லாதவன்)

இனி, ஈகைக்குப் பின், அவ் வீகைக்கு இன்றி யமையாத அங்கமா யமையும் இன்சொல்லின் மேன் மையைக் கூறினர். ஈகை யிருந்தும் இன்சொல் இல தாய வழி, ஈகை பயன் பெருதன்றோ. இதனுலன்றோ வள்ளுவரும்,

முகத்தா னமர்ந்துஇனிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம்

என்று 'அறம், பொருளின் கண்ண தன்று; மனங் கலந்த இன்சொலினதே' என்று கூறினர்.

பொருளின்மையால் ஈதல் மேற்கொள்ளா ராயி னும், இவ் வின்சொல் தானும் கூறுதற்கு மக்கள் மனம் விரும்பாக் கொடுமையை,

ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓஓ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனல் வாய்ப்பூட் டிடப்படின்மற்(று)
ஆஅ இவரென்செய் வார்.

(நல்கூர்தல்=வறுமை யடைதல்)

என்றுணர்த்தினுர் அடிகள்.

அவர் அங்ஙனம் இருத்தற்குக் காரணம், "அவர் செய்த தீவினை அவரைத் தடுப்பதாலேயே" என்று குறித்தமை காண்க.

> இனிய உளவாக வின்னாத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

அன்றோ?

இங்ஙனம் இல்லறத்தோர்க்கான அறநெறிகளைக் கூறிக்கொண்டு வந்தவர், கடைசியாக அவர்களால் பெரிதும் கடியத் தக்கதும், எவ்வறத்தையும் அழிக்கும் கொடுந் தீச் செயலாவதுமான பிறன்மனை நயத்தலைக் கூறி முடித்தார். கடைசியாகத் துறவறத்தை ஒருவகையாக விரித்துரைத்தார். ஆகவே, இங்ஙனமாக அடக்கம், ஒழுக்கம், அறிவுடைமை, கொடை, அருள், மானம், வீரம், ஈகை, இன்சொல், பிறன்மனை நயவாமை, துறவு என்ற இவைகளைச் சிறந்தெடுத்துக் கூறி, "மனமொழி மெய்களின் தூய்மையே அறமாவது" என்று உணர்த்தினர் அடிகள் என்க.

௬. நூலிற்பயின்றுரைத்த மேலோர் மூவர்

அடிகள், தம் நூலுள் பல விடங்களிலும் இல்லறம் விளங்கித் தோன்றற்குக் காரணமான பெண்டிர் கற்பின் சிறப்பையும், உலகத்தை அறவழியில் ஒழுக்கவல்ல துறவோர் இயற்கையினையும் உவமை வாயிலாகவும், பிறவாறுங் கூறிச் செல்கின்றனர்.

கற்புடை மனைவியாலேயே இல்லறம் விளங்கித் தோன்றுமென்பதை,

—மனைத்தக்காள்

> மாண்பிலள் ஆயின் மணமக்ன் நல்லறம்
> பூண்ட புலப்படா போல்

என்ற விடத்துக் குறித்துள்ளமை காண்க. மாண்பு என்பது, கற்பை முதற் குணமாகக் கொண்ட நற்குண நற்செய்கைகளை யன்றோ குறிப்பது.

பெண்டிர்க்குக் கற்பே இன்றியமையாக் குண மென்பதை யுணர்த்தியே,

கல்வியே கற்புடைப் பெண்டிர்,
கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினுள்
பெற்றுக் கொடுத்த தலைமகன் போல்

என்று பெண்டிரோடு கற்பையும் தொடர்பு படுத்தியே கூறிச் சென்றனர்.

கற்பின் மகளிரின் கொடுமையைக்,

கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே

என்றவிடத்து உவமையாக அமைத்து உணர்த்தினர்.

கற்புடை மனைவி கணவனொடு பொருந்தி ஒழுகு மாற்றைக்,

குலமகட்குத் தெய்வம் கொழுநனே

என்ற எடுத்துக் காட்டுவமையால் கூறி, கணவனைத் தெய்வமாகவே கொண்டு ஒழுகவேண்டுங் கடப்பாட்டை உணர்த்தினர்.

இங்ஙனம் கணவனையே தெய்வமாகக் கொண்டு ஒழுகும் கற்புடையாள், அக் கணவன் இறந்தவிடத்து இவ்வுலகத்து உயிர் வாழற்கு விரும்பாள் என்ற தன்மையைக்,

கலனழிந்த கற்புடைப் பெண்டிரும் ....
....
.... அஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூ டினும்

என்றவிடத்து ஒப்புமைக் கூட்ட அணியுள் வைத்துக் கூறினர்.

மேலும், இக் கற்புப் பெண்களுக்கு இன்றியமை யாக் குணமென்பதை உணர்த்திப், பெண்களுக்கு வேண்டிய குணங்களைச் சொல்லவந்த விடத்துக்,

கற்புடுத்(து) அன்பு முடித்துநாண் மெய்ப் பூசி

என்று, கற்பை, என்றும் உடலைவிட்டு நீங்காததும், நீங்குமிடத்துப் பெரியதோர் இழிவு புலப்பட நீங்கு வதுமான ஆடையாகக் குறித்தமையுங் காண்க.

இக் கற்பின் மேன்மை குறித்தன்றே வள்ளு வரும்,

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்

என்று கூறினர்.

இனித், துறவோர் இயற்கை கூறுமாற்றை நோக்குவோம்.

துறவோர், காமப் பகையைக் கடிந்த பெருமை யினர் என்பதை,

அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை

என்று உவமையாக அமைத்துக் கூறினர்.

'அனைத்துலகும் சொல்லொன்றின் வயப்படுத்தக் கூடியவர்' என்று அவர் பெருமையை உணர்த்திய வாறு காண்க.

துறவோர் தம்மாசிரியரையே கடவுளாகக் கொண்டு வழிபடவேண்டு மென்பதை,

அறவோர்க்கு
அடிகளே தெய்வம்

என்ற எடுத்துக் காட்டுவமையில் விளங்க வைத்தார்.

துறவோர் உடற்பயன் பெற்றனராதலின் சாவுக் கஞ்சார் என்று கூறுவார்,

ஐந்து
புலனெருங்கப் பொய்யொழிந் தாரும் ....
.... அஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூ டினும்

என்று ஒப்புமைக் கூட்ட அணியுள் வைத்துக் கூறினர்.

இவர் உடலோம்பலின் பொருட்டுத் தவத்திற்குக் குறை நேர ஒழுகலாகா தென்பார்,

தவம்விற்று ஆங்கு ....
ஊனோம்பும் வாழ்வும் ....
தானோம்பிக் காத்தல் நலை

என்றார்.

வள்ளுவரும் இத் துறவோர் இவ் உலகத்து மேம்பட்டு நிற்றலை,

இருமை வகைதெரிந்(து) ஈண்(டு)அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு

என்று கூறினர் அன்றோ?

இவ் விருவர்களோடு தொடர்பு படுத்தி உலகத்துச் சிறந்தோனாகிய அரசனையும் கூறுகின்றார் அடிகள்.

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை

என்று அவ் விருவரோடு அரசனையும் தொடர்பு படுத்திக் கூறியது காண்க.

மற்றோ ரிடத்தும் இதுபோலவே,

கலனழிந்த கற்புடைப் பெண்டிரும் ஐந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும்—கொலைநாட்டில்
மொய்ம்புடை வீரரும் அஞ்சார் முரண்மறவி
தும்பை முடிசூ டினும்

என்று இம் மூவரையுமே ஒரு சேரக் கூறினர். இச் செய்யுளுக்கு முன்னும் பின்னும் அரசரைப்பற்றியே கூறப்பட்டிருப்பதால், வீரர் என்பது அரசரையே உணர்த்தும் என்க.

இங்ஙனம், கற்புடைப் பெண்டிரும் துறவோரும் அரசருமே உலகில் மேம்பட்டோர் என்பதும், அவரா லேயே உலகம் நன்னிலை பெறும் என்பதும், அவர் நிலைகெடின் உலகும் நிலைகெடும் என்பதும் உண்மை புணர்ந்தார் உரைஎன் றுணர்க.

செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய் நன்னா டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன்

(அலத்தற்காலை=வறுமைக்காலம்)

என்று மணிமேகலை இதை யுணர்த்துவதும் காண்க.

நாட்டில் வறுமை மிகுந்ததற்குக் காரணமாகச் செங்கோல் கோடுதலும், தவம் பிழைத்தலும், கற்புக் கெடுதலும் கூறப்பட்டமை உணர்க. மேலும், செங் கோல் கோடிய வழி, நல்லோர் துன்புற அல்லோர் தீய செயல் பெருகுதலும், துறவோரின் தூய துற

வொழுக்கமில்லையாயின், உலகம் உண்மை யுணராது நெறி தவறிச் செல்லலும், பெண்கள் கற்புக் குறைந்த வழிக் கொலையும், பொய்யும், வஞ்சமும் நாட்டில் நிலை பெறுதலும் இயலுவனவன்றே? ஆகவே, இச் சிறப்பு நோக்கி இத்தகைச் சிறந்த மூவர் இயற்கையையும் தம் நூலுள் பல விடங்களிலும் குறித்துச் சென்றனர் என்க.

எ. சிறந்தெடுத்தோதிய அருங் குணம்

அடிகள் எக்குணத்தினும் அடக்கத்தையே பல விடத்தும் விதந்து கூறுகின்றனர். அடக்கம் நன்மையிற் கொண்டு செலுத்தலும், அதற்கு மாமுய செருக்குத் தீமையிற் புகுத்தலும் உலகில் காணப்படுவன வன்றே? இது குறித்தன்றே வள்ளுவரும்,

> காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
> அதனினூங் கில்லை யுயிர்க்கு

என்று கூறி, அடக்கத்தையே தலையாய செல்வமாக உணர்த்தினர். மேலும், இவ்வடக்கம் என்னும் ஒரு குணத்தைக் கொண்டோரிடத்தில் எல்லா அறமும் நிலைபெறும் என்றும் கூறுவர்.

> கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
> அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

என்றது காண்க.

அடிகள் இவ் வடக்கத்தின் இன்றியமையாமை நோக்கி, அடக்கத்தைக் கல்வியுடையோனுக்கும், செல்வனுக்கும், அறவழி நிற்போனுக்கும், துறவிக்கு மாகப் பலவிடத்தும் எடுத்துக் கூறுகின்ரூர்.

முதலாவதாகக், கற்ரூர் அடக்கமின்றிச் செருக்கி இருப்பின், அவர் கற்றதனுற் பயனற்றவரே யாவர்.

கற்றலால் அறிவின் விரிவை யறிந்து, தாம் கற்றறிந்தது அம்முழுதையும் நோக்கச் சிறிதே என்றுணர்ந்து, கற்றவழி அடங்கி ஒழுகலன்றே ஒருவர்க்கு வேண்டுவது. அங்ஙனமன்றிக், கற்றதனுல் செருக்கித் திரிவாராயின், அவர் அறிவின் விரிவை யுணர்ந்தவராவரோ? உணர்ந்தனராயின் செருக்கித் திரிவரோ? அவர் அறியாதோரே. இதனுல் அன்ருே 'அறிவோர்க் கழகு கற்றுணர்ந்தடங்கல்' என்று கூறினர் தமிழ்ப் பெரியார். செருக்குத் தியசெயத் தூண்டுதலும், அடக்கம் நன்மையிற் செலுத்தலும் கண்கூடு ஆதலின், கற்ருேன் அடக்கம் மேற்கொண்டு நல்லொழுக்க நெறியில் நில்லானுயின், அவன் கற்றதனுற் பயன்பெற்றவனுவானே? அவன் கல்லாதானே.

இது குறித்தே அடிகள்,

முற்றும் உணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க

என்றும்,

கற்ருரை நோக்கிக் கருத்தழிக—கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநா மென்று

என்றும் கூறினர்.

இனி, இவ்வடக்கம் செல்வர்க்கும் இன்றியமையாதது என்று கூற வந்தவர், அரசியல் கூறுகின்ற இடத்தே எதிர்மறைமுகத்தால் செல்வச் செருக்கின் தீமையைக் கூறி யுணர்த்துகின்ருர்.

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினல் தாழ்வார்க்கு—அணியது
இளையாள் முயக்கெனினும் சேய்த்தன்றே மூத்தாள்
புணர்முலைப் போகங் கொளல்

என்று கூறுகின்றனர்.

'தம்மால் பணியத்தக்க பெரியோர் தம் வீட்டு வாயிலில் நிற்கத், தம் செல்வச் செருக்கால் அவரை எதிர்கொண்டழைத்து வேண்டுவன புரிதற்குக் காலந் தாழ்ப்பாராயின், அவர் அங்ஙிலை இருத்தற்குக் காரணமான செல்வம் விரைவில் கெடும்' என்று கூறினர். மேலும், இவ்வடக்கம் செல்வர்க்கே மற்றோர் செல்வம் போன்றிருந்து, அச் செல்வத்தை மிகுத்துக் காட்டும். இது பற்றியன்றே வள்ளுவரும்,

> எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வந் தகைத்து

என்று கூறினர்.

கல்வியும் பொருளும் உடையார் இவ்வடக்கம் உளதாய வழியே செல்வரென்று மதிக்கப்படுவரென்றும், இஃதிலதாய வழி அவ்விரண்டையும் பெற்றும் பயனிலராய்ச், செல்வராய் மதிக்கப்படாரென்றும் அடிகள் கூறுகின்றனர்.

> கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
> செல்வமும் செல்வ மெனப்படும்—இல்லார்
> குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
> தலைவணங்கித் தாழப் பெறின்

என்பது அவர் கூறுமாறு.

இனி, நல்லற நெறி நிற்போரும், தாம் அறநெறி நிற்றலால் தருக்கி இருப்பாராயின், அதன் பயனையும் எய்தா தொழிவர் என்று கூறுகின்றார் அடிகள். தருக்கி இருத்தலால், அவர் செயல் தந்நலங் கருதிய ஆரவாரச் செயலாய் மதிக்கப்படுமன்றிப், பிறர் நலங் கருதிய அறச்செயலாகாதன்றே. மேலும், அத் தருக்குத் தீமையையும் கொடுக்குமென்றுங் கூறுகின்றனர்.

விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையும் தீதே—புலப்பகையை
வென்றனம் நல்லொழுக்கில் நின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.

இச் செய்யுளில் நல்லற நெறி நிற்போரையும் துறவியையும் குறித்தார். சிறந்த அறக் கருமங்களை இயற்றி, அவற்றை மனத்துட்கொண்டு தருக்குக் கொள்ளாதிருத்தலே வேண்டும். இம்மனநிலை வாய்ப்பதும் அரிதே என்றும், அங்ஙனம் இருப்போரே மிக மேலான குணமுடையோரென்றும் குறிக்கின்றார்.

பிறர்பிறர் செய்பபோல் செய்தக்க செய்(து)ஆங்கு
அறிமடம் பூண்டுநிற்பா ரார்?

என்று அடிகள் கூறுவது காண்க.

இனி, இவ்வடக்கமிலான் தற்புகழ்ச்சியின் இழிவினை எடுத்துக் கூறியும், அடக்கத்தின் உயர்வை யுணர்த்தின ரடிகள் ;

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்

என்றனர்.

ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வது, தன்னை எல்லோரும் உயர்வாக நினைக்கவேண்டுமென்று கருதியன்றோ? ஆயின், அவன் அங்ஙனம் தற்புகழ்ச்சி செய்யும்போது, அவனைப்பற்றி அறிவுடையோர் நினைப்பது அவன் உயர்ச்சியாகுமோ? அங்ஙனம் அவன் கூறுவதால், அறிவோர் அவனை தாழ்ந்தோனாகவே மதிப்பர் என்பதை அவன் உணரான். அவன் தன்னை உயர்த்திக் கூறிக்கொள்ளும்

சொல்லே, அவன் தாழ்ந்தோன் என்பதைக் குறித்துக் கொண்டிருக்கிறது. உண்மையில் உயர்ந்தோர் செயற்கரிய செய்து, 'இதுவே மக்கட் பண்'பென்று அடங்கியிருப்பர். அங்ஙனமாகாது தற்புகழ்வோன், மக்கட்டன்மை யுணராத விலங்கறிவினனே யாவன் என்க. உண்மையில் உயர்ந்தோர், தாம் மேம்பட்டிருப்பினும், இன்னும் மேல்நிலைக்குச் செல்லக் கூடிய நெறியை யறிந்தவராதலின், அது நோக்கி அடக்கம் மேற்கொண்டு மேன்மை யடைவதும், அங்ஙனமாகாதோர், தாம் சிறிய காரியஞ் செய்யினும் அதையே பெரிதாக மதித்து, மேலும் செயற்கருஞ் செயல் செய்ய வழியும் அறியாராய், வலியுமிலாராய் இருத்தலின் தாழ்ந்தோராவதும் விளக்கமன்றே?

தற்புகழ்ச்சி, அவன் எண்ணியாங்கு உயர்வைக் கொடுக்காது தாழ்ச்சியைக் கொடுக்கும் என்பதைத் 'தீ யெரியும் பொருட்டு நீரைச் சொரிந்தால் போன்றது' என்று உவமை கூறி உணர்த்தினர் அடிகள். அடக்கமே பிறரால் உணரப்பட்டுப் பெருமை தருமென்றும் உணர்த்துவாராய், அதை மற்றைய அடிகளில் கூறுகின்றார்.

—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ(து) இன்பம்
நயவாமை யன்றே நலம்.

இனி, இவ்வடக்கந்தானும் உயர்ந்தோர்க்கே அமையும் பெருங் குணம் என்பதையும் அறிவுறுத்துகின்றார்.

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப

என்று கூறுமாறு காண்க.

அறிவிற் சிறந்தோரிடத்து அறிவிலான் ஒருவன், தான் அறிவிற் சிறந்தான் போன்றும் தருக்கியும் சில கூறிய வழி, அதுகேட்ட அறிவுடையாரும், தாம் அவனினும் சிறந்தாரென்பதைக் குறித்து, அவனின் மேம்பட்டுச் சில சொற் கூறின், அது பயனின்றியே முடியுமன்றோ? மேலும், அங்ஙனம் கூறுவது தன்னையும் அக் கீழோனோடு ஒப்பித்துக் கொண்டதாகவே முடியும். ஆதலின், அறிவுடையோர் அவ்விடத்துத் தாழ்ந்தே செல்வர். அங்ஙனம் தாழ்ந்து செல்லலே அவரது உயர்வையுங் குறிக்கும். இது குறித்தன்றே வள்ளுவரும்,

> சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
> துலையல்லார் கண்ணுங் கொளல்

என்று கூறித், தமக்குக் கீழோனோரிடம் எதிர்த்து வழக்காடித் தம்மையும் அவரோடு ஒப்பித்துக் கொள்ளாமல், தாம் தோற்றாராகக் கொண்டு அடங்கி, அதனன் மேம்படலே "நிறைந்த குண[1]"முடையோர்க் கடையாளம் என்றுணர்த்தினர். ஆகவே, அடக்கம் என்ற இப் பெருங் குணத்தையே எல்லாக் குணங்களும் நிறைந்ததற்கோ ரடையாளமாகக்—'கட்டளையாகக்'* —குறித்தாரென்றால், இவ்வடக்கத்தின் உயர்வைச் சொல்லவும் வேண்டுமோ? இதற்கு அடிகள் கூறிய உவமையும் மிகப் பொருந்தியது.

> —தூக்கின்
> மெலியது மேன்மே லெழுச்செல்லச் செல்ல
> வலிதன்றே தாழுந் துலைக்கு.

துலாக் கோலில் வலிவு குறைந்த தட்டு மேலே போக, வலிய தட்டன்றோ தாழ்கின்றது.

---

[1]சால்பு. *கட்டளை=உரைகல்.

அ. கல்வியும் கற்பும் சிறந்தோர் இல்லறம்

இனி, உலகத்துப் பெரும்பான்மையானதும், 'அற னெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதுமான இல்லறத்தைக் குறித்து அடி கள் கூறியவற்றைக் காண்போம்.

இல்லற நெறி நிற்போனுக்குச் சிறந்து வேண்டப் படும் முதற் குணமாக அடிகள் கூறுவது கல்வியுடை மையாம். துறவறத்திற்கு முதற்படியாக நிற்பது இல்லற மாதலாலும், அறநெறியை யுணர்த்துவது கல்வியேயாதலாலும், கல்வியுடைமையைக் கூறினர்.

> உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
> களர்அனையர் கல்லா தவர்

என்பது பொய்யாமொழி யன்றோ? ஆதலின், இல் லற நெறி நிற்போனுக்குக் கல்வி இன்றி யமையாத தாயிற்று. கல்வி கற்காதவர் அறநெறி நில்லாரோ வெனின், நின்றாராயினும், நிறைந்த அறிவால் உணர்ந்து அறஞ் செய்தலே வலியுடையதாம்; அறி வின்றிச் செய்வோர் நெகிழ்தலும் கூடும். இது கருதி யன்றே சிவப்பிரகாசரும்,

> பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
> மன்னும் அறங்கள் வலியிலவே—நன்னுதால்
> காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
> தாழொன் றிலதாயிற் றான்

என்றனர்.

இனி, இவ்வில்லற நெறி நிற்போன் இயற்றும் அறத்துக்குத் துணை, அவன் மனைவியேயாம். இவ ளுக்கு வேண்டும் சிறந்த குணமாக அடிகள் கூறுவது கற்பாகும். இவளுக்குக் கல்வி வேண்டுவதன்றோ

வெனின், கற்பே முதன்மையான குணமாக அடிகள் கூறினர்; கணவனுக்குப் பிறன்மனை நோக்காத பேராண்மையும் வேண்டுவது போல, மனைவிக்குக் கல்வியும் வேண்டுவதே. மனைவிக்குக் கல்வியிருந்தும் கற்பிலதாய வழி, எத்துணை மிகுந்த கல்வியாயினும் இலதாய் ஒழிதலால் கற்பே சிறந்ததாயிற்று. கற்புடைய மனைவியாலேயே கணவன் பூண்ட அறங்களும் சிறந்து தோன்றும்.

மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்

என்றவிடத்து, மனைவி நற்குண நற்செய்கை இலளாயின், கணவன் மேற்கொண்ட நல்லறம் விளங்கித் தோன்றாதென்று தெரித்தனர் அடிகள். மாண்பு என்பது கற்பை முதற் குணமாகக் கொண்டதன்றோ?

இனி, இவ்வில்லறத்திற்கு மேலும் விளக்கத்தைக் கொடுப்போர் அறிவுடைப் புதல்வர்களாவர். இல்லற வாழ்க்கையின் சிறந்த ஒரு குறிக்கோள் நற்புதல்வனைப் பெறுதலன்றே. இல்லற நெறி நின்று பல அறங்களையுஞ் செய்தவன் இறந்த பின்னும், அவன் மகனன்றே அறங்களை மேலும் செய்து, தந்தையின் புகழை மிகுவித்துத், தந்தையின் தீவினையை யழிக்கின்றான்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

என்று கூறி வள்ளுவரும், தந்தை தீவினை தேய்தற்குக் காரணமான நல்வினைகளைச் செய்யும் புதல்வர் என்று குறிப்பித்தார்.

கணவனுக்குக் கல்வி வேண்டுவதென்பதையும், அவனுக்குத் துணையாயமையும் மனைவிக்குக் கற்பே சிறந்ததென்பதையும், அவர்கள் பூண்ட இல்லறத்திற்கு விளக்கத்தைக் கொடுப்போன் புதல்வனே என்பதையும்,

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்

என்ற அடிகளில் ஒருங்கு குறிப்பித்தார் அடிகள்.

இனி, இல்லறநெறி நிற்போன் அறத்தை வகைபெறச் செய்தற்கு வேண்டுவதாகக் குறிப்பிடப்படுவது செல்வமேயாம்.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்(கு)
இவ்வுலக மில்லாகி யாங்கு

என்று வள்ளுவரும் மொழிந்தனரன்றோ.

......நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று

என்று கூறி, இல்லறம் பூண்டோன் நற்குணமுடையனாயினும், அவன் உலகிற் பல நற்செய்கை மேற்கொளற்குச் செல்வமே துணையாவதென்பதை அடிகள் உணர்த்தினார். அஃதில தாயவழி அவன் நல் நினைவுகள் மனத்தகத்தே பயனின்றி அடங்கிக் கிடக்க வேண்டுவனவே என்றும் குறிப்பித்தார்.

ஆகவே, இல்லற நெறி நிற்போன் அறச்செயலுக்குத் துணையாக மனைவியும், அவன் செயலை அவன் இறந்த பின்னும் விளக்கமுற நடத்தப் புதல்வனும், அவன் அறச் செயல் நடைபெறற்குச் செல்வமும் வேண்டும். இக்கருத்தைக், கல்விச் சிறப்பு உணர்த்துகின்ற விடத்தே,

கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே ஈர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையாம்

என்று கூறி, இல்லறத்தானுக்கு இன்றியமையா மனைவி, புதல்வன், செல்வம் என்ற மூன்றையும் ஒரு சேர அமைத்திருப்பதிலிருந்தும் அறியலாம்.

இனிக், கணவனும் மனைவியும் புதல்வரும் கலந்து வாழும் கடப்பாட்டினைக்,

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்

என்ற அடிகளில் தெரிவிக்கின்றார். மனைவி கணவனை யும், புதல்வர் தாய் தந்தையரையும் கடவுளராகக் கொண்டொழுக வேண்டுமென்று கூறுகின்றனர்; அங்ஙனங் கொண்டாலே நல்லொழுக்கம் வளர்ந்து அவர்களை நலத்தின்கண் எய்துவிக்குமாதலின். மேலும் கணவனும் தாய்தந்தையரும், தம்மை மனைவி யும் புதல்வரும் கடவுளாகக் கருதற் கேற்பத், தாம் இல்லறமாம் நல்லற நெறியினின்று தவறாது, பிறர்க்கு ஒழுக்க நெறிகளைக் கற்பிக்கும் அறிவுமேம்பட்ட சீலர் களாயிருத்தல் வேண்டும்.

இனி, இல்லறத்தோன் செய்யத்தக்க சிறந்த அற மாக அடிகள் குறிப்பிடுவது ஈதலறத்தையேயாம்.

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல

என்று கூறுகின்றார் அடிகள். இல்லறத்தானுக்குச் செல்வம் இன்றியமையாததென்று கூறியவர், அச் செல்வப் பயன் வள்ளன்மையே என்று கூறி, இல்லறத் தானுக்குத் தலைமையான அறநெறியைக் கூறினார்.

இக் கருத்துப் பற்றியன்றே ஆன்றோரும், "ஈதல் அறம்" என்றும்,

> அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
> பெற்றான் பொருள்வைப் புழி

என்றும் கூறினர்.

இனி, இல்லறத்தோன் காதலின்பம் துய்க்கும் முறையையும் அடிகள் கூறுகின்றார்.

> கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
> தருமமும் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
> இன்னலமும் குன்றாமே ஏரிளங் கொம்பனார்
> நன்னலம் துய்த்தல் நலம்.

இக் காமவின்பம் மக்களை அளவு கடந்து தன் மாட்டு இழுத்துக் கேடுபயக்கும் ஒன்றாகலின், அதை அளவோடு துய்க்க வேண்டு மென்று கூறினர். கழி காமம் கேடு பயக்கு மென்பதை,

> —நெடுங்காமம்
> முற்பயக்குஞ் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
> பிற்பயக்கும் பீழை பெரிது

என்னும் அடிகளில் அடிகள் உணர்த்தியது காண்க.

'நெடுங்காமம்' என்று கழிகாமத்தை உணர்த்தினார். இக்கழி காமத்தால் வருங் கேடாகவே கருமஞ் சிதைதல், கல்வி கெடுதல், தருமந் தாழ்வுபடல், இன்னலங்குன்றல் என்ற நான்கையுங் குறித்தார்.

'கருமஞ் சிதைதல்' என்றதால் கழிகாமத்திலேயே நாட்போக்கி, உலகிற் சிறந்த காரியங்களைச் செய்து மேம்படாது கழிதலைக் குறித்தார். 'கல்வி கெடுத' லாவது, அக்கழி பெருங் காமத்தால், கற்ற கல்வியையும் ஓம்பாது, அக்கல்விப்பயனும் பிற நல்லொழுக்கங்

களையும் கைவிடுதல். 'தருமந்தாழ்வு படல்' என்றதால், கழி பெருங்காமத்தால் தான் மேற்கொண்டிருந்த அற நெறிகளையும் விட்டுக், காமத்திலேயே அழுந்தப் பெறலை உணர்த்தினர். 'இன்னலங் குன்ற'லாவது, கழி பெருங்காமத்தால் தன் இளமையும், வலியும், அழகும் இழத்தல்.

மேலும் 'ஏரிளங் கொம்பனர்' என்று கூறியதும் உணரத்தக்கது. ஏர் என்பது அழகினையும், இளமை என்பது வயதால் குறைந்து இருத்தல் வேண்டுந் தன்மையையும், கொம்பு என்பது மென்மைத் தன்மையையும் உணர்த்தும்.

ஆண்களுக்கு வீரமும், பெண்களுக்கு அழகும் சிறத்தல் நோக்கி மனைவிக்கு அழகைக் குறித்தார்.

இவ் வழகின் மேம்பாட்டைத்,

தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை உடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்

என்று அடிகள் புலப்படுத்துவதையுங் காண்க.

தலைவனுக்குப் பதினாண்டிலும், தலைவிக்குப் பன்னீராண்டிலும் காமம் முகிழ்க்கு மாதலின், நான்காண்டுகள் தலைவி குறைந்திருத்தல் வேண்டி, இளமையைக் குறிப்பிட்டார்.

மென்மைத் தன்மை பெண்களின் இயற்கைக் குணம். அங்ஙனமன்றி, ஆடவர்க்குள்ள இயற்கைக் குணமாகிய வன்மைத் தன்மை பெண்கள் பால் காணப்படின், அவர்கள் ஆண் தன்மை யுடையோராய்ச் சிறந்து தோன்றுரென்க. இது குறித்தன்றே கணவனை வலிய கொழுக் கொம்பாகவும், மனைவியை

மென்மைத் தன்மை வாய்ந்த பூங்கொடியாகவும் ஆன்றோர் கூறுவது. மெல்லியலாரென்பதும் பெண் பாலாரையன்றோ? இனி அடிகள் மனைவிக்கு இன்றி யமையாத அகப்பண்பையும் உரைக்கின்றார்.

> கற்புடுத்(து) அன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
> நற்குண நற்செய்கை பூண்டாட்கு

என்ற விடத்தில் கற்பும், அன்பும், நாணும், நற்குண நற்செய்கைகளும் மனைவிக்கு வேண்டுமென்று குறித் தார். இக்குணங்களே இன்றியமையாப் பொருளா யும், விளக்கத்தைக் கொடுப்பனவாயும் ஆகுமென்பார், அவைகளை உடலோடு தொடர்புற்ற ஆடையாகவும், பூ சாந்தம் அணியாகவும் குறித்தார். இவைகளே அவளுக்கு ஆடையும் அணியும் ஆவன: மற்றை விலை யுயர்ந்த ஆடையும், பூவும், சாந்தும் பிற அணிகலன் களும் அணியாகா என்றும் உணர்த்தினர்.

இக் குணங்களுள் சிறந்தது கற்பாதலோடு, இஃதிலதாய வழி மற்றைக் குணங்களும் விளங்கா வாதலின், இதை முதலாவதாகக் கூறியதோடு, இதை அணியினும் சிறந்த ஆடையாகவே கூறினர்.

> மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
> அணியெல்லாம் ஆடையின் பின்

என்ற பழமொழித் தொடரையும் நோக்குக.

இனி, இல்லறத்திற்கு அன்பே உயிர்க் குணமாத லால், அதை இரண்டாவதாகக் கூறினர். வள்ளுவரும், இல்லற வியலில் முதல் குணமாக அன்புடைமையை வைத்து,

> அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
> வற்றல் மரந்தளிர்த் தற்று

என்று கூறினர்.

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு

என்று அன்பை வள்ளுவர் ஓர் உறுப்பாகவே கூறியதும் காண்க.

மூன்ருவதாகக் கூறிய நாண் என்பது, பெண்களுக்கு இன்றியமையாது இயற்கையாய் அமையத்தக்க குணமாகும். பெண்களுக்குரிய குணங்களான நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கனுள்ளும் நாணே முதன்மையாக வைத்து வழங்கப்பட்டிருப்பது காண்க. நாணில தாயவழி ஆண் தன்மையே மிகுந்து பெண்ணெனப்படாளென்க. அந்த நாணே கணவன் வழி அமைந்தொழுகச் செய்யும் குணமாம்.

இனி, நற்குண நற்செய்கை யென்பன, கணவனுக்கு ஏற்ப நல்லற நெறியில் அமைவதோடு அவனுக்கு உதவுதலாம். இந் நற்குண நற்செய்கையே அவனை உலகில் விளக்கமுறச் செய்தலின், இவற்றை அணியாகக் கூறினர்.

இனி, இல்லறத்து ஒருவன் கடிந் தொதுக்க வேண்டிய பெருந் தீக்குண மொன்றையும் அடிகள் கூறுகின்ருர். அது பிறன்மனை நயத்தல்.

திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறன்மனைக்கே பேடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்

என்று கூறுகின்றனர்.

இத்தகையோர், கரும்பை வாயிலிட்டு உண்பிப்பினும் உண்ணுது, வேப்பிலையை விரும்பி யுண்ணும்

ஒட்டகத்தை யொத்த விலங்கினங்களே' என்று கூறினார்[1]. திருவினும் நல்லாளாதலின் கரும்பு உவமையாயிற்று.

தன் மனையாளிடத்து நிறைந்த இன்பம் எய்த விருப்பதையும், பிறன்மனை நயத்தல் அற்ப இன்பமேயாதலையும் உணர்த்தியே திருமூலரும்,

ஆத்த மனையாள் அகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம்பழத்துக் கிடருற்ற வாறே

என்று கூறினர்.

பலா, உண்பதற்கு நிறைந்த கனியாய்ச் சுவை முதிர்ந்ததாய் இருப்பதையும், ஈச்சம்பழம் உண்பதற்கும் நிறைவாகாது சுவை குறைந்தும் இருப்பதோடு, முள் நிறைந்து இருப்பதையும் உணர்க.

ஆடவர் மாட்டுத் தோன்றும் மிகத் தீய குணத்தை எடுத்துக் கூறியது போலவே, தீய பெண்கள் மாட்டு உளதாம் கற்பின்மையின் கொடுமையையும் எடுத்துக் கூறினர் அடிகள்.

முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார்
நிறையும் நெடுநாணும் பேணார்—பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு.

---

[1]ஒட்டகம் அத்தன்மைத் தாவதை,

தள்ளரும் பாரந் தாங்கிய ஒட்டகம்
தெள்ளு தண்கரும்பு யாவையுந் தின்கில
உள்ள மென்னத்தம் வாயு முலந்தன
கள்ளுண் பார்களிற் கைப்பன தேடியே

என்ற கம்பராமாயணச் செய்யுளால் உணர்க.

அத்தீப் பெண்டிர் முறையுங் கருதாது தீவழியில் மிகுந்து சென்று, அதுவரை உயர்ந்து வந்த குடிபிறப்பையும் அழித்து, உலக இயற்கையும் நோக்காது நடத்தலின், 'முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார்' என்றார். அங்ஙனமாயது பெண்களின் உயிர்க்குணமான நிறையும் நாணும் இலவாய வழியாதலின், 'நிறையும் நெடு நாணும் பேணார்' என்றும் கூறினர். பெண் தன்மையே ஒழிந்து நிற்றலின், 'பிறிது மொரு பெற்றிமை பேதமைக் குண்டே' என்றனர். இத் தீயோரின், மிகக் கொடிய இத் தீச் செய்கையை வெறுத்துக் கூறுவார், 'பெரும்பாவம் கற்பின் மகளிர் பிறப்பு' என்றுங் கூறினர். தகாத ஒழுக்கத்தில் பற்றுவைத் தொழுகுவதே பெரும் பேதைமையன்றோ?

> பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
> கையல்ல தன்கட் செயல்

என்பதை நோக்குக.

௬. முற்றத் துறந்தோர் மூவகை நிலைகள்

இனி, அடிகளது துறவறத்தைப்பற்றிய கருத்தைக் காண்போம். அடிகள் உலகத்துப் பொருள்களை உள்ளவாறுணர்ந்து முற்றத் துறந்த முனிவராதற் கேற்பத், துறவறத்தை மேன்மையாகவே எடுத்துக் கூறுகிறார். அடிகள் உலகோர் நிலையைப்,

> பரபரப்பி னோடே பலபல செய்தாங்(கு)
> இரவுபகல் பாழுக் கிறைப்ப

என்று எடுத்துக் கூறி, ஐம்பொறிகளாலும் நுகரப் படும் உலக இன்பத்திலேயே கருத்தைச் செலுத்து

வோர், பேரின்ப வழியாம் துறவற நெறியை மறந் தோராய் விடுகின்றனர் என்பார்,

> சிற்றின்பம் சின்னீர தாயினும் அஃதுற்றார்
> மற்றின்பம் யாவையும் கைவிடப

என்று உணர்த்துகின்றனர். இதனுல் துறவு, வாழ்க் கைப் பயனை யடைவிக்கு மென்பதும், வீடடைதலே பேரின்பமாகுமென்பதும் உணர்த்தப்பட்டன வன்றோ ?

இனித், துறவோர் தன்மையை யுரைக்குங்கால், அவர் காமப் பகையைக் குறிக்கொண்டு காக்கவேண் டுங் கடப்பாட்டை அடிகள் சிறந்தெடுத்துரைக் கின்ருர்.

> பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்
> கண்ணுெடு நெஞ்சுறைப்ப நோக்குறார்—பண்ணுெடு
> பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
> விடில் புலப்பகையி னர்.

காமவின்பம் ஐந்திடங்களாலும் மனத்தகத்துப் புகுந்து இன்பஞ் செய்வதாகலின், அவ்வைந்திடங்களாலும் மனத்ாலுமே அக்காம வின்பத்தைக் கடிய வேண்டு மென்று கூறுகின்ருர். 'பெண்மை வியவார்' என்பது மனத்தின் செய்கை. 'பெயரும் எடுத்தோதார்' என் பது வாயின் செய்கை. 'கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார்' என்பது கண்ணின் செய்கை. 'பண் ணுெடு பாடல் செவி மடார்' என்பது செவியின் செய்கை. 'பண்ணுெடு பாடல்' என்பது பெண்கள் பாடலை என்க. 'பெயரும் எடுத்தோதார்' என்ற விடத்தும் 'கண்ணுெடு நெஞ்சுறைப்ப நோக்குறார்' என்ற விடத்தும் "பெண்ணின் பெயர்" என்றும்

"பெண்ணை நோக்குறா" என்றும் கொண்டது போலவே, "பெண்கள் பாடலைச் செவி மடார்" என்றே கொள்ளப்படும். பண்ணொடு பாடல் பிறந்த விடத்தால் துறவிகளுக்குப் பகையே யொழிய, பண்ணொடு பாடலே பகையன்று. பண்ணொடு பாடலை அடிகள் விரும்புவர் என்பது, அவர்,

> பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
> எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்......

என்று கலைமகளை வேண்டிச் சகலகலாவல்லி மாலையிற் கூறியது கொண்டு தெளியப்படும்.

இங்ஙனம் துறந்தோர் பெண்களோடு தொடர்பு ஒரு சிறிதும் இன்றி இருக்கக் கடவர் என்பதும், அத்தொடர்பு அவர்களது துறவொழுக்கத்தை நெறி தவறச் செய்யும் என்பதும் உணர்த்தவே, இவரையடுத்துத் தமிழ் நாட்டில் பெருந்துறவியாய் விளங்கிய சிவப்பிரகாசரும்,

> பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
> நிகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம்—நெகிழ்ச்சி
> பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
> எறும்பூரக் கற்குழியு மே

என்று கூறியதுங் காண்க. இக் காமப் பகையே துறவோரால் குறிக்கொண்டு காக்கப்படவேண்டுவது என்பார்,

> அனைத்துலகும்
> சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
> பல்காலும் காமப் பகை

என்று மற்றோரிடத்தும் கூறினர். இனி, ஐம்புல இன்பமாகிய இக்காம இன்பத்தைக் கடிந்ததற்கு அடுத்தபடியாக, நாவின்பம் கருதி உணவு கொள்ளாது

நல்லுணவைத் துறவு நிலைக்குத்தக உடல் நிலைப்பதற் கேற்பவே கொள்ளவேண்டு மென்று கூறுகிறார்.

உலகில் பலரும் நாவின்பம் கருதியே உணவு கொள்கின்றனர். உடல் நன்மையின் பொருட்டு ஆகும் பொருள்கள் எவை என்று ஆராய்ந்து உணவு கொள்வார் மிகச் சிலரே யாவர். நாவின்பங் கருது வார் உடற்கு ஊறு பாட்டைத் தருமென்பதையும் நோக்காது, நாவுக் கினிமை பயப்பதையே தேடிக் கொள்கின்றனர். என்னே மக்களின் அறியாமை! நாச்சுவையால் இழுக்கப்பட்டு உடல் நன்மையை மறக்கின்றனர்! பின் நோய்வந்த பொழுது, என் செய்தோம் என்செய்தோம் என்று வருந்துகின்றனர். மீண்டும், நோய் தீர்ந்த பின்னும், உடல் நன்மை கருதாராய் நாச்சுவை யொன்றையே கருதி உண்டு வருந்துவர். நாச்சுவை என்னும் அற்ப இன்பம் கருதிச், செயற்கரிய காரியங்களைச் செய்தற்குக் கருவியான இவ்வுடல் நன்மையைக் கருதா தொழி வது என்ன பேதைமை!

அத்துறவோர் எக்காலும் தம் தவ நெறியிலேயே முயல்வாராய், ஏதோ ஒரு கால் கடும்பசி வந்த விடத்து நாச்சுவை கருதாது, அக் கடும் பசியைத் தீர்த்தற் பொருட்டே, பித்தன் போற் சிறிது உணவு கொள்வர் என்று கூறுவர் அடிகள். பித்தன் எக்காலமும் தன் மனம் போனவாறு பல தொழிலி லும் ஈடுபடுவானுய், மிக்க கடும்பசி வந்த விடத் தன்றே உணவை விரும்புகின்றுன்.

மேலும், உணவில் அளவு கடந்த விருப்பம் வைத்தல் காமவின்பத்திற் கொண்டு செலுத்துவதாம்.

பெருந்தூக்கம் முதலிய சோம்பற் குணங்களும் பேருண்டியால் விளைவனவே. 'உண்ட களை தொண்டர்க்கு முண்டு' என்ற உலக மொழியும் இக்கருத்தையே தெரிவிப்பதன்றோ? உலகில் செல்வர் பலர் நடுப்பகலில் பேருண்டி கொண்டு உறங்கிக் காலத்தை வீணே கழிப்பதை நம்மில் பலர் அறியலாம். இத் தீமைகளையும் உடன் உணர்த்தி அடிகள்,

> துயிற்சுவையும் தூநல்லார் தோட்சுவையும் எல்லாம்
> அயிற்சுவையின் ஆகுவஎன் றெண்ணி—அயிற்சுவையும்
> பித்துணக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போல்
> மொத்துண மொய்ம்பி னவர்

என்று துறவோர் இயற்கையைக் கூறினர். மொத்துணுதல், புலன்களுக்கு அடிமைப்பட்டுத் துன்ப முறுவதை யுணர்த்தும்.

இங்ஙனம் உணவை வெறுத்த விடத்து, உடல் கொழுப்பற்று வேறுபட்டுத் தோன்றுவது இயற்கையே. வீட்டின்பத்திற் கொண்டுய்க்கும் துறவு நிலையை மேற்கொண்டதால் உடற் பயன் பெற்ற இவர், உடற் பொலிவை நோக்கார் என்க. உடற் பொலிவையே மிகுதியும் நோக்கியும், உடற்பயனாகிய வீட்டின்பத்தை நாடாது உடலின்பத்தையே நாடியும் வாழ்வோர் வாழ்க்கைப்பயன் பெறாத பேதையரன்றோ? உடற்பயன் பெற்ற இத் துறவோர் உடற் பொலிவை நோக்கார் என்பதை யுணர்த்தும் அடிகள்,

> அன்போ டருளுடைய ரேனும் உயிர்நிலைமற்(று)
> என்பியக்கம் கண்டும் புறந்தரார்—புன்புலால்
> பொய்க்குடில் ஓம்புவரோ போதத்தால் தாம்வேய்ந்த
> புக்கில் குடிபுகுது வார்

என்று கூறினர். அன்பும் அருளும் உடையராய இவர், தம் உடல் என்பெழுந்தியங்குமாறு ஆயினும், அதற்கு மனம் வருந்தார் என்று அவர் மன நிலையும் உடல் நிலையும் நன்கெடுத்துக் கூறினர். நிலையற்ற இவ் உடலைப் 'புன்புலால் பொய்க்குடில்' என்றும், அழியா வீட்டின்பத்தைப் 'போதத்தால் தாம்வேய்ந்த புக்கில்' என்றும் பொருத்தமாகக் கூறியமை காண்க. உடற்பயன் கொண்ட துறவோர் உடலைத் துறப்பதற்கும் வருந்தார் என்பதையும், உடற்பயன் அறியாது, உடலையே இன்பப் பொருளாகக் கொண்டு, அழியும் அவ் உடலின்பத்தின் பொருட்டே நாளை வீணே கழிக்கும் வீணர், அவ் உடலால் துன்பத்தையும் அடைதலோடு அதை இழப்பதற்கும் வருந்துவர் என்பதையும் உணர்த்துவாராய அடிகள் மற்ருேரிடத்துப்,

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடு தற்கு

என்று கூறினர்.

இக் கொள்கையையே மற்ருேரிடத்து,

ஐந்து
புலநெருங்கப் பொய்யொழிந் தாரும்............
.... அஞ்சார் முரண்மறலி
தும்பை முடிகு டினும்

என்றும் கூறினர்.

இனி, இத்துறவோர் தந்துறவால் எய்தும் பயன் மெய்யுணர்தலே யாகும். அழிதன் மாலையதாகிய இப் பொய் யுலகத்தையே பொருளாகக் கொள்வதால் துன்பமே வருவதால், அங்ஙனமாகாது மெய்யுணர்

தலே இன்பத்துக்குக் காரணமன்றோ? மெய்யே என்றும் நிலைத்து நிற்பதாய் நிலையான இன்பத்தை யும் கொடுக்கும். இம் மெய்யுணர்வால் பெறப்படும் இன்பத்தை அடிகள் கூறுவது மிக அழகாக அமைந்துளது.

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றுவதே இன்பம்
இறந்தவெலாம் துன்பமலா தில்.

கல்வியிற் சிறந்த கணவனுக்கும் கற்பிற் சிறந்த மனைவிக்கும் வாய்க்கப் பெற்ற முதல் மகனை உவமை யாகக் கூறுகின்றார். தலைமகனே பிள்ளையில்லாத காலத்து முதல்வனாகத் தோன்றியதாலும், அவனே பிதிரர் கடன் செய்யத் தகுந்தவனாதலாலும், அவ னைப் பெற்ற இன்பமே இல்லறத்துப் பெரிய இன்ப மாதலால், அவ்வின்பத்தை மெய்யுணர்வின்பத்துக்கு உவமை கூறினார். மகன் பெறாவிடத்து அவர்கள் கொண்ட இல்லற வாழ்க்கை பயனில்லாது ஒழிதல் போல, மெய்யுணர்வின்பம் இல்லாவிடத்தும் இவ னும் பயனின்றியே கழிந்தவனாவான் என்பதையும் உணர்த்தினார்.

இனி, அடிகள் துறவிகளின் மூவகை நிலைகளைச் சொல்கின்றார். அவற்றுள் முதலாவது, தம்மனத்தைப் பொறிகளின் வழிச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தி இறைவன்பாற் பற்ற வைத்தல். இங்ஙனம் செய்வார் பழி நாணும் இயல்பினராயும் இருக்க வேண்டு மென்று கூறுகின்றனர். பழி நாணும் இயல்பே யன்றோ, மனம் பொறிகளின் வழி அலையா வண்ணம்

தடுப்பது. பழிக்கு நாணு இயல்பு இருப்பின் பொறிகளின் வழி மனம் செல்லலைத் தடுத்தல் இயலாதன்றோ? ஆதலால், இப் பழிநாணலைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றார். இம் முதல் நிலையை அடிகள் கூறுமாறு பெரிதும் நயம்பட அமைந்திருக்கிறது.

காப்பே நிலையாப் பழிநாணல் நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து

என்பது அவர் கூறுமாறு.

மனம் புலன்வழிச் செல்லாமல் காப்பதை வாயில் நிலையாகக் கூறினார். பழிக்கு நாணலை அந்நிலையது கதவாகக் கூறினார். மனத்தை ஒருவழி நிறுத்தலைத் தாழக் கோலாகக் கூறினார். ஒருவழி நிறுத்தலாவது இறைவன்பாற் பற்றவைத்தல். வாயில் நிலையும் கதவும் உளவாய வழியே தாழிட்டு ஒரு வீட்டைப் பாதுகாத்தல் இயலுமாறு போல, பொறிவழி மனம் செல்லாமல் தடுத்தலும், பழிக்கு நாணலும் உளவாய வழியே, மனத்தை இறைவன்பாற் பற்றவைக்கும் தன்மை எய்துமென்று உணர்த்தினார்.

இனி இரண்டாவது நிலை, அங்ஙனம் மனத்தை இறைவன்பாற் பற்றவைப்பதோடு மற்றைச் செயலொழிந்து மெய்யுணர்தலாம். இதை யுணர்த்துமாறுங் காண்க:—

—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின்(று) ஒன்றுணர்ந்து
நிற்பாரே நின்றெறிச்சென் றார்.

உயிர்களால் பற்றப்படுவது கடவுள் ஒன்றேயாதலால் 'பற்றுவதே பற்றுவதே பற்றி' என்றார். (பொய்யாமை பொய்யாமை ஆற்றின் என் புழிப் போல)

முதல் பற்றுவதே என்பதற்குக் கடவுளையும், இரண்டாவது பற்றுவதே என்பதற்கு மனம்பதித்தலையும் கொள்ளலும் ஆம். மனம் பொறிவழிச் செல்லாமல் இறைவனை அழுந்தப் பற்றிய விடத்து மற்றைச்செயலொழிதல் இயல்பேயன்றோ? இங்ஙனம் உண்மையே இயற்கையாகவுடைய இறைவனை அழுந்தப் பற்றிய விடத்து மெய்யுணர்ச்சி தலைப்படுதலும் இயல்பேயன்றோ? இவரே வீட்டு வழியிற் சென்றவராவர் என்றுங் குறித்தார்.

இனி மூன்றும் நிலையாக, அங்ஙனம் மெய்யுணர்ந்தார் உலகியலினின்றும் நீங்கி அக உணர்வினராவர்: அங்ஙனம் அக உணர்வில் தெளிவாகத் தாமும் இறைவனும் ஒன்றுந் தன்மையைக் காண்பார்கள்: கண்ட அக்காட்சி நீங்கப் பெறுதோரே வீட்டையடைந்தவராவர் என்று கூறினர் அடிகள். இதையுணர்த்து மாற்றையுங் காண்க.

மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார் தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

அகக்கண் திறக்கப் பெற்று உலகியல் ஒழிதலின், 'தூங்குவார்' என்றார். காண்பது, இரண்டற்ற தன்மையைக் காண்பதாகும். ஒருகால் கண்டு பிறிதொரு கால் காட்சி மறையலாகாதென்பார், 'கனவு நனவாக' என்று கூறினர்.

ஆகவே, மனத்தைப் பொறிவழிச் செல்ல விடாமையும், பழிக்கு நாணலும், மனத்தை நிறுத்தலும் என்ற மூன்றையும் முதல் நிலையாகவும்,

இறைவனைப் பற்றுவதும், செயலொழிதலும், மெய்யுணர்தலும் ஆகிய மூன்றும் இரண்டாம் நிலையாகவும்,

உலகியலொழிந்து அகவுணர்ச்சி பெறுவதும், மனத்தகத்தே இரண்டறக் காண்பதும், கண்டது மாறுமலிருப்பதுமாகிய மூன்றும் மூன்றும் நிலையாக வும் வகுத்துக் கூறினர் துறவொழுக்கத்தில் தலை நின்று பயனெய்திய தூயோரான உரவோர்.

இம்மூவகை நிலையினையுமே பொறைநிலை, நினைவு, சமாதி என்று புலப்படுத்துக் கூறுவர் ஆன்றோர்.

i. மனத்தினை ஒருவழி நிறுப்பது பொறைநிலை

ii. நிறுத்திய அம்மனம் நிலைதிரி யாமல்
குறித்த பொருளொடு கொளுத்தல் நினைவே

iii. அங்கனம் குறித்த வாய்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி

என்று பண்டையோர் குறித்தமை காண்க.

ம். கல்வி இன்பமும் கற்றோர் கடமையும்

கல்வி இன்பம்

கல்வி, பயிலுந் தோறும் அறிவுக்கு இன்பத்தையே கொடுப்பதொன்றாகும். "ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" என்ற திருக்கோவை யாரடியும் இக்கல்வி இன்பத்தையே யன்றோ வெளிப் படுத்துகின்றது. கல்வி பயிலுங்கால் அறிவால் புதுப் புது உண்மைகளைக் காணுந்தோறும் அடையும்

இன்பத்துக்கு எல்லையும் உண்டோ? இத்தகைச் சிறந்த இன்பப் பொருளாம் கல்வியை யடையத், தொடக்கத்தில் சிறிது வருந்தியே கற்றல் வேண்டும். இது குறித்தே அடிகளும் இக்கல்வி இன்பத்தைக் குறித்துக் கூறுபவர், "தொடங்குங்காற் றுன்பமாய் **இன்பம்** பயக்கும்" என்று கூறினர். கல்வி தொடக்கக் கல்வியாளர்களுக்கு முதலில் துன்பங்கொடுப்பதன்றி, மற்றையோர்க்குப் பயிலுங்காலத்தும் இன்பங்கொடுப் பதேயாகும்.

அறிவால் நுகரத் தகும் இக் கல்வி இன்பத்தைக், காமவின்பத்தினும் சிறந்ததென் றெடுத்துக் கூறினர். அக்காமவின்பமோ முன் இன்பம்போற் றோன்றினும், பின் நிறைந்த துன்பத்தையே கொடுக்கும் இயல் பிற்று. கல்வியோவெனின் பயிலும்போதும் இன்பத் தைக் கொடுத்துப், பின்னும் அவன் வாழ்க்கையை உண்மை இன்ப வாழ்க்கையாகச் செய்கிறது.

கல்வி, இன்பத்தையே பயக்கும் என்பதை வலியுறுத்த, மேலும் அடிகள் "**கல்வியே கற்புடைப் பெண்டிர்**" என்றுங் கூறினர். உலகத்துப் பெண்டிர் காமவின்பத்தைக் கொடுப்ப, இக் கல்விப் பெண் என்றும் அழியா அறிவின்பத்தைக் கொடுக்கின்றாள். மேலும் அப்பெண் வாழ்க்கைத் துணையாயிருந்து அவனுக்கு அறிவுரை கூறியும், அவனுடைய இல்லற மாம் நல்லறக் காரியங்களுக்குத் துணை புரிந்தும் நிற்பது போல், கல்விப் பெண்ணும் வாழ்க்கைக்குப் பிரியாத் துணையாய் அமைந்து அறிவையுங் கொடுத்து அவனுடைய நல்லறக் காரியங்களுக்கும் வழிகாட்டிக் கொண்டு வருகிறாள். ஆகவே, என்றும் பிரியாது

இருந்து பழகப் பழக மேன்மேலும் இன்பத்தைக் கொடுக்கும், கல்வி இன்பமே இன்பம் என்று இன்பப் பொருளாகவே கல்வியைக் கூறிய முறை பெரிதும் போற்றத் தக்கது.

இக் கல்வியே சிறந்த இன்பத்தைக் கொடுக்கும் மனைவியாவாள் என்பதைக் கீழ்க்காணும் உவமையாலும் அடிகள் குறித்தவாறுங் காண்க.

"போக்கறு கல்வி புல(ம்)மிக்கார் பாலன்றி
மீக்கோள் நகையினர் வாய்ச்சேரா—தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்."

அழகே ஒரு வடிவெடுத்தாற் போன்ற பெண்ணை, ஆண்மையுடையோனே இன்பம் நுகர்வன் அன்றிப் பேடி இன்பம் நுகர நினைப்பின் முடியுமோ? இஃதே போன்று, கல்வி இன்பத்தை அறிவு மேம்பட்டார் அடைவரேயன்றி, நகைத்து வீண்பொழுது போக்கும் அறிவற்றோர் அடைவரோ? என்று கூறுகின்றனர்.

கல்வி, இன்பப் பொருளாவதென்பதை யுணர்த்துமாறு இதைவிட வேறும் வேண்டுமோ? கல்வி ஒருவனுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும் இன்பத்தைக் கொடுத்து, முடிவில் அழியா வீட்டின்பத்தையுங் கொடுப்பதன்றோ?

கல்வியின் முதற் பயன்

அறிவுரை வழங்கல்

கல்வியின் பயனாக அடிகள் சொல் வன்மை பெற வேண்டுமென்று கூறுகின்றனர். சொல்லுந் திற மறிந்த தூயோர் நூல்கள் பலவற்றைக் கற்பதால், கற்றோர்க்கு இயற்கையாகச் சொல் வன்மை உண்டாவதே.

சொல்வன்மை யுடையோரே இவ்வுலகில் சிறந்து தோன்றலை யாவரு மறிவர். சொல்வன்மை யுடையோர் அவ்வன்மையாலேயே தம்மைச் சூழ்ந்தோர் பலரையும் தம் வழிப் படுத்துவதோடு, தஞ் சொல் வன்மையால் யாவரும் தஞ் சொற்படி நடப்போராய்க் கண்டு தலைமையும் அடைகின்றனர். ஒரு நாட்டில் சிறந்த தலைவராய் விளங்குவோரும் தஞ் சொல் வன்மையாலன்றே நாட்டு மக்களைப் பிணித்துத் தம் சொல்வழி அவர்களைச் செலுத்துகின்றனர். இங்ஙனமெல்லாம் நாம் காண்டலின், சொல்வன்மையை விடச் சிறந்த செல்வமும் உலகில் உண்டோ? தம்மைச் சூழ்ந்தார் பலரும் தஞ்சொற் கேட்டு நடப்ப இருப்பாரையும் 'செல்வாக்குற்றவர்' என்று உலகம் சொல்வதும் இதுகருதி யன்றே?

ஆதலின், கல்வியால் பெற்ற இத்தகைச் சிறந்த சொல்வன்மையைச் சொல்ல வேண்டி, "சொல்வளம் மல்லல் வெறுக்கையாம்" என்று, சொல்லைச் செல்வமாகவே கூறினர் அடிகள்; சொல்வளம் பொருந்திய வழியே, ஏற்ற சொற்களை இடமறிந்து பேசும் வன்மை உண்டாதலின்.

ஒருவர் கல்வி, சொல்வன்மையாலேயே பிறர்க்கு விளங்கித் தோன்றலால், கல்வியோடு சொல் வன்மையும் பெற்றிருக்கும் தன்மையைப் 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்றும் கூறினர். நாற்றமே பூவின் பெருமையைப் பலருக்கும் அறிவித்தல் போல, இச் சொல் வன்மையும் கல்வியின் பெருமையை அறிவிக்கிறதன்றோ?

இச் சொல் வன்மையால் ஒருவன் கற்ருேரவை யுள்ளும் மேம்பட்டு விளங்கிப், பலருக்கும் அறிவுரை களை வழங்கல் வேண்டு மென்றும் கூறுவர் அடிகள். இதையே கல்வியின் முதற்பயனுக அடிகள் கூறுகின் ருர். கல்வி கற்பது சிறந்த உண்மைகளைத் தாம் உணர்ந்து நடப்பதோடு, பிறர்க்கும் உணர்த்திப் பிற மக்களையும் நல்வழிப் படுத்த வன்றே? இங்ஙனம் பிறர்க்கும் அறிவுரை வழங்காக்கால் கற்றதன் சிறந்த பயனில் தலைப்படாதவ ராகவே ஆவார். 'பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற' என்று மற்ருேரிடத்தும் இக் கருத்தையே தெரிவிக்கின்ருர் அடிகள்.

> தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்

என்ற பொய்யா மொழியும், தந்தையின் கடமை மைந்தனைக் கல்வி வல்லோனுக்க வேண்டுமென்பதை யும், அஃமைந்தன் தான் கற்ற கல்வியால் கற்ருேரவை யுள் அறிவுரை வழங்கிக், கல்விப் பயனையும் தலைமை யையும் அடைய வேண்டு மென்பதையு மன்ருே உணர்த்துகின்றது.

கல்வியின் தலையாய பயன் கற்ருேரவையுள் பலர்க்கும் அறிவுரை வழங்கலே என்பதும், அப்பய னெய்தா விடத்து அக்கல்வியால் பயனே இல்லை யென்பதும் உணர்த்தியே அடிகள் மேலும்,

> அவையஞ்சி மெய்விதிப்பார் கல்வி ....
> ....
> ....
> பூத்தலிற் பூவாமை நன்று

என்றும் கூறிப் போந்தனர்.

கல்வியின் இரண்டாவது பயன்

நூலியற்றல்

கல்வியின் மற்றொரு சிறந்த பயனாக அடிகள் கூறுவது, தாங்கற்ற கல்வியால் பெற்ற அரிய உண்மைகளைத், தாம் இறந்த பின்னும் நின்று நிலவுமாறு, நூல்வாயிலாக வெளியிட்டு மக்கட்குணர்த்தல் என்பதாம். இச் செய்கை அவர் கற்ற கல்வியின் பயனாய் அமைந்து மக்களுக்கு உதவுவதோடு, அவர் புகழையும் உலக முள்ளளவும் நிலைக்கச் செய்கிறது.

> தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று

என்பது பொய்யில் புலவன் பொருளுரை யன்றோ ?

இங்ஙனம் கற்றோன் ஒருவனால் இயற்றப் பெற்ற நூல், அவனுக்குப் பின்னும் விளங்கி, அவன் புகழையும் பரப்புதலால், கல்வியைக் கற்புடைப் பெண்டிராய்ப் பெற்ற ஒருவனுக்கு, 'நூல் ஒப்பற்ற புதல்வனாய் அமைகின்றது' என்று கூறினர் அடிகள்.

> கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
> செல்வப் புதல்வனே ஈர்ங்கவியா

என்பது அடிகள் கூறுமாறு. கவி யென்று கூறினராயினும், தனிக் கவியோடு பல கவிகளால் இயன்ற நூலுமன்றோ கொள்ளப்படும். இச் செய்யுள் நூலேயன்றி உரை நடையால் இயற்றப்பெற்ற உரை நடை நூலுங் கொள்ளப்படுவதேயாம். உலகில், ஒருவன் பெற்ற புதல்வன் அவனுக்குப் பின் எச்சமாய் நிற்பது போல, இந் நூலும் அவனுக்குப் பின் எச்சமாய் நிற்கின்றது. உடல் தொடர்பால் அம்மகன் நிற்க, அறிவின் தொடர்பால் இந் நூன்மகன் நிற்கின்றான். அம்மகன்

வறிதே யமைதலும், தன் தீ யொழுக்கத்தால் தன்னைப் பெற்றோனுக்குப் பழியைத் தேடலு முண்டு. இந் நூன்மகனோ வெனின், தன்னைத் தோற்றியோனுக்கு என்றும் புகழைக் கொடுத்து, மக்கட்கும் அறிவுரைகளை வழங்கி, நற்காரியமே புரிந்தொழுகுகின்றான்.

இங்ஙனம் கற்றோன், என்றும் இறவாது புகழ் பெருக நிற்கும் நூலாகிய மகனைத் தோற்று வித்தலால், கற்றோனைப் பிரமனினும் சிறந்தோனாகவும் கூறினர் அடிகள்.

> கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
> மலரவன் வண்தமிழோர்க்(கு) ஒவ்வான்—மலரவன்செய்
> வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
> மற்றிவர் செய்யு முடம்பு.

கக. உலகியல் ஆக்கும் உயர்வுடைச் செல்வம்

உலகியல் நடத்தற்குப் பொருளே இன்றியமையாததாதலின், அடிகள் பொருளின் மேம்பாட்டையும், அதை ஈட்டன் முறையையும், அதனாற் பயனெய்தும் முறையையும் விளக்கமாக எடுத்துக் கூறுகின்றார்.

> கைத்துடையான் காற்கீழ் ஒதுங்குங்கடன் ஞாலம்

என்று கூறி, செல்வமாஞ் சீரிய பொருளைப் பெற்றானையே உலகம் மதித்து, அவனை நாடி நிற்கும் என்று கூறுகின்றனர் அடிகள். உலக மக்கள் பொருளுடையானையே சுற்றித் திரிந்து தம் வாழ்நாட்கு வழி தேடுவது, உலகில் பெரிதும் காணப்படுவதன்றே. அச் செல்வர் உலோபியாய் இருப்பினும் பாரார் என்று கூறுகின்றார் அடிகள்.

இவறன்மை கண்டும் உடையாரை யாரும்
குறையிரந்தும் குற்றேவல் செய்ப

என்பீது அடிகள் கூறுமாறு. இதனுல் கற்ருேர் தாமும் பொருளுடையராய வழியே, அவர் கல்வி சிறந்து தோன்றுமென்றுங் கூறினர். இதற்கவர் எடுத்துக் கூறிய உவமை பெரிதும் நோக்கத்தக்கது.

மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்.

இனி, இத்தகைச் சிறந்த செல்வத்தை ஈட்டு மாற்றை அடிகள் கூறுவதோடு, உலகில் இப்பொருளை ஈட்டுதற்குச் சிலர் தவருனவழியில் முயல்வதையும் உணர்த்துகின்ருர். சிலர் தங்குலத்துக் கேலாதவழியில் பொருளீட்ட முயன்று குலப்பெருமைக்கே அழிவைத் தேடுகின்றனர். சிலர் பொய் கூறியும் உண்மை நெறிவிட்டும் பொருளீட்டுதல் ஒன்றிலேயே கருத்தாய் இருக்கின்றனர். அவர்கள் இன்புறப் பொருளீட்டித் துன்புறற் கேதுவான தீமையே விதைத்துக் கொள்கின்றனர். சிலர் பொருளீட்டுதல் வேண்டிய முயற்சியில் ஈடுபட்டு, அம்முயற்சியின் பொருட்டு, அதுவரை மேற்கொண்டிருந்த நற்சார்பு களையும் கைவிடுவர். இது மகனை வேண்டி நின்றவள் கணவனை இழந்த செயலன்ருே? சிலர் தம் உரிமை யெல்லாம் இழந்து பிறர்க்கு அடிமைப்பட்டேனும், பெரும் பொருள் ஈட்டலிலேயே கருத்தான்றி நிற்பர். இவர் பொருள் பெறுவதால் அடைவது இன்ப மாமோ? இவைகளை அடிகள் உணர்த்துமாறு காண்க.

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளும் திருவும் தவம்விற்(று)ஆங்(கு)
ஊனோம்பும் வாழ்வும் உரிமைவிற்(று) உண்பதூஉம்
தனோம்பிக் காத்தல் தலை.

பொருளாசை இத்தவறான வழிகளிலும் செலுத்தும் என்பதை யுணர்த்துவாராய், 'ஓம்பிக்காத்தல் தலை' என்று கூறி விழிப்பாக இருந்து காக்க வேண்டு மென்றுணர்த்தினர்.

இப்பொருளீட்டுவானுக்குச் சிறப்பாக ஒரு குணம் வேண்டுமென்று குறிப்பிடுகின்றார். அது அளவு கடந்த அவா நீத்த தன்மை. 'போதுமென்ற மனமே பொன் செயு மருந்'தன்றோ. பொருளின்மேல் அளவுகடந்த அவா, ஒருவனைத் தவறான வழிக்கே கொண்டுபோய் விடும். அவன் எவ்வளவு பொருள் ஈட்டினன் ஆயினும், அவ்வவா அவனுக்கு இன்பத்தை எய்துவிக்காது. அவனைத் துன்பத்திலும் அழிவிலுமே கொண்டு செலுத்தும். இதனாலேயே பொருளை ஈட்டலாகா வழியையும் ஈட்டும் வழியையும் கூறுதற்கு இடையே, இப்பேரவாவின் இயற்கையைப்,

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க்(கு) ஆக்கம் அரிதம்மா

என்று கூறி, அவனுக்கு அவ்வவா அழிவே தரும் என்று கூறினர். இதைக் குறித்து, மற்றோரிடத்தும் அடிகள்,

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க"

என்றும், பிறிதோரிடத்தில்,

"பெற்றது கொண்டு மனந்திருத்தி"

என்றும்வலியுறுத்திக் கூறிச் சென்றனர்.

இனி அடிகள் பொருளீட்டு மாற்றைக் கூறுவதை நோக்குவாம். அது,

> தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
> ஒத்த கடப்பாட்டில் தாளூன்றி—எய்த்தும்
> அறங்கடையில் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
> புறங்கடைய தாகும் பொருள்

என்பது. பொருளீட்ட வேண்டித் தனக்குக் கடமையாய் அமைந்த செயல்களில் முயற்சியைமேற்கொள்ள வேண்டுமென்று கூறுகிறார் அடிகள். கடமையாவது 'தன் நிலைக்கும் குடிக்கும் ஏற்ற செயலை அறவழியில் செய்து நிற்றல்' என்றுங் குறிப்பித்தார். தன் நிலையாவது தனக்குள்ள வலிமை, காலம், இடம், துணை முதலியவற்றின் நிலை. ஆகவே, "தன் நிலைக்கு ஏற்ற வகையிலும், தன் குடிக்குச் சிறப்புத்தரும் முறையிலும், அறவழியிலும், தன் கடமை குன்றாது முயற்சியை மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பித்தார். "புறங்கடையதாகும் பொருள்" என்று கூறி அவனிடத்தில் பொருள் தானே வந்தடையுமென்றும் உணர்த்தினார்.

> ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்க முடையா னுழை

என்று வள்ளுவரும் மொழிந்தனரன்றோ. பிறன் பொருள் விரும்பல் உலகத்துப் பலவிடத்துக்காணப் படலின், 'பிறன்பொருளும் வெஃகார்' என்று அதைத் தனியே குறிப்பித்தார். இங்ஙனம் பிறன் பொருளை விரும்பித் தமதாக்கும் செயலைத் தெளிவாக மற்றோரிடத்தும்,

> இடைதெரிந்(து) அச்சுறுத்து வஞ்சித்(து) எளியார்
> உடைமை கொண்(டு) ஏமாப்பர்

என்று குறித்தார். பிறன் பொருள் விரும்புவோர் தம்மின் எளியார்மாட்டு உள்ள செல்வத்தைக் கருதி, ஏற்றசமயம் பார்த்திருப்பதையும், அவர்களைத் தம் வலிமையால் அச்சுறுத்துவதையும், தெளிவாக உணர்த்தியவாறு காண்க.

இனிப், பொருளிட்டியோர் தக்க வழியில் பொருட்பயனடையு மாற்றையுங் குறிப்பிடுகின்றார்.

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல

என்று அடிகள் கூறுகின்றனர்.

மேற்கூறிய நன்முறையில் பொருளிட்டியோன் அப்பொருளால் தான் இன்புறுவதோடு, வறியார் பலருக்கும் கொடுக்கும் வள்ளலாய் வாழானாயின், அவன் செல்வ மற்றவனாய் இருத்தலே நல்லதென் றுணர்த்துகின்றார்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு

என்பது மெய்மொழி யன்றோ. ஆதலின் வள்ளன்மை யற்றோன், பொருட்பயன் இழந்து, பொருளிட்டலும் காத்தலும் என்ற செயலே புரிந்து வருந்துவோ னன்றோ?

பேதைமை என்ப(து) யாதெனில் ஏதங்கொண்(டு)
ஊதியம் போக விடல்

என்று கூறியாங்கு, அவன் பேதையேயாதலன்றி வேறுண்டோ? இதனால் அன்றோ அடிகள் மற்றோ ரிடத்தும்,

நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலின் பூவாமை நன்று

என்று கூறினர்.

ஈண்டுக் கூறிய நவையாவது,

"அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப்"

படும் குற்றம். இதை அடிகள் மற்றைய செய்யுளில் குறித்தார்.

இனிப் பொருட்பயன் கருதுமிடத்தும் உலகில் மூவகையார் இருக்கின்றனர் என்று அடிகள் குறித்தனர். ஒருவர் தாம் ஈட்டிய பொருள் உலகில் எவ்வுயிர்க்கும் பயன்படும்படி ஈந்து வாழ்பவர். ஒருவர் தாமும் தம்மைச் சேர்ந்தாரும் மட்டும் இன்புற்றிருக்கச் செலவு செய்து வாழ்பவர். மற்றையோர் தாமும் செல்வப் பயனையடையாது பிறர்க்குங் கொடாது பொருளிட்டல் காத்தல் என்ற இரு செயலுடையராய்த் துன்புற்று வீணே மடிவோர். இம் மூவர்க்கும் அடிகள் கூறும் உவமை முறையே பொதுமகளும், குலமகளும், கைம்மையோளும். பொதுமகள் பலர்க்கும் இன்பம் வழங்கலும், குலமகள் தன் நாயகனையே இன்புறுத்தலும், கைம்பெண் யார்க்கும் பயனின்றி வீணே கழிதலும் இயற்கையன்றே?

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே ஏனையோர் செல்வம்—கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போல் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்.

௬௨. அரசர்க் கொளிதரும் அருங்குணம் நான்கு

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்(கு) ஒளி

என்ற குறளில் வள்ளுவர் அரசனுக் கின்றியமையா

நான்கு குணங்களை வடித்தெடுத்துக் கூறினர். குடியோம்பல் அரசனது கடமையாயிற்று. செங்கோல் அவனது நேரிய மனப்பான்மையை யுணர்த்தும். அளியென்பது மக்களுக்கு உயிர்க்குணமாகி அன்பு செய்தலை யுணர்த்தி, அதன் வழித்தாகி முக மலர்ந்து இனியகூறி மக்களை யணைத்தலை யுணர்த்தும். கொடை என்பது அரசன் எப்பொருளையும் உடையா னுதற்கேற்ப, அப்பொருட் பயனுக வேண்டுவார்க்கு வேண்டியன கொடுக்குஞ் செய்கையை யுணர்த்துவது. இங்ஙனம், அரசன் தனது கடமையாகக் குடி யோம்பலையும், மனமொழி மெய்களின் தன்மையாகச் செங்கோல் அளி, கொடை என்பவற்றையுங் கொள்ளவேண்டுமென்று கூறினர் வள்ளுவர்.

இக் குறளின் விளக்கமாக இச் சிறந்த நான்கினை யுமே அடிகள் தம்நூலுள் எடுத்து உரைக்கின்றனர். குடியோம்பலைக் கூறுமிடத்துக்,

> கண்ணிற் சொலிச் செவியின் நோக்கும் இறைமாட்சி
> புண்ணியத்தின் பாலதே யாயினும்—தண்ணளியால்
> மன்பதை ஓம்பாதார்க் கென்னும் வயப்படைமற்(று)
> என்பயக்கும் ஆணல் லவர்க்கு

என்று கூறுகின்றார்.

அரசனது கடமையாகும் இது என்பதை ஓர் உவமை மூலம் வலியுறுத்துகின்றார். வில் வாள் முதலிய படைகள் ஆண்மை யோனிடத்தேயே பயன் பெற்று விளக்கமுறும். அவை ஆண்மையற்றவனிடம் இருப்பின், பயனற்றுக் கழிவதோடு அவனது இழி வையும் புலப்படுத்தி நிற்கின்றன. ஆண்மையுடை யோன் படையைக் கொண்டு மேம்பட்டு விளங்கல்,

அவனது கடைமையும் இயற்கையும் ஆதல் போல, அரசனது கடைமையும் இயற்கையும் குடியோம் பலே என்பதை விளங்க வைத்தார்.

மேலும், குடியோம்பாவழி இழிவடைந்து அவன் அரசனுந் தன்மையும் இல்லாதவனுகின்றுன் என்பது, இவ் வுவமையால் உணரக்கக் கிடக்கின்றது.

இனிச் செங்கோன்மையை விளக்குமாற்றை நோக்குவோம்.

ஒற்றிற் றெரியாச் சிறைப்புறத்து ஓர்துமெனப்
பொற்றேள் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
அறிவரிதென்(று) அஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினும் கேளாமை யன்று

என்பது அடிகள் கூறுமாறு.

செங்கோன்மையாவது செய்யப்படும் முறையி னது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது செவ் விய கோல் போறலின், செங்கோல் எனப்பட்டது. ஒரு பாற் கோடாது நடு நிற்றல் மனத்தின் கண்ணே யமைந்த குணமன்றே? இங்ஙனமாவதை வள்ளுவரும்,

கெடுவல் யான் என்பதறிக தன்னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்

என்று கூறியதால் உணர்க.

முறை செய்து கோல் கோடாது அரசு செய்ய நினையும் அரசன், நாட்டு நிகழ்ச்சிகளை ஒற்றர் மூலம் அறிதலோடு, தானே மாறுவேடம் பூண்டு நேர் சென்றும் அறிய வேண்டுமென்று கூறுகின்றனர் அடிகள். இதற்கு ஆண்மை வேண்டுமென்பார், "பொற்றேள் துணையாத் தெரிதந்தும்" என்று கூறினர். அங்ஙனம் நேரிற்கண்ட வழியும், தன்னறிவால்

நன்கு ஆராய்ந்து சீர்தூக்கியே குற்றத்தைத் துணிதல் வேண்டுமென்று கூறுவார், "குற்றம் அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை" என்று கூறினர். இக் கருத்தோட பிறர் சொன்னவற்றையும் அரசன் ஆராய்ந்தே மேற்கொள்ள வேண்டுமென்பதை அடிகள் மற்ருேரிடத்தும்,

ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு

என்று கூறினர்.

ஒற்றர்களால் செய்தியை யுணர்வதோடு தானே நேரிற் சென்று அறிந்தும், தான் பார்த்தவற்றையும் கூடத் தன்னறிவால் ஆராய்ந்தே, குற்றத்தைத் தீர்மானிக்க வேண்டியிருக்கக், கொடுங்கோல் அரசர் பலர் இதற்கு நேர்மாருக நடப்பதையும் அடிகள் மனங் கவன்று "சென்று முறையிடினும் கேளாமை யன்று" என்று கூறினர்.

இனி மன்னனுக்கு வேண்டப் படுவதாகிய, 'தண்ணளியால் இன்சொல் வழங்கி அணைத்தலே,' அடிகள் எதிர்மறை முகத்தால் கூறுகின்ருர். தண்ணளிக்கு மாருன கடுஞ் சொல் வழங்கும் கொடுமையைக் கூறித், தண்ணளியின் மேன்மையை உணர வைக்கின்ருர்.

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருள்
நின்று குறையிரப்ப நேர்பட்டான்—சென்ருெருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்து மலன்

என்று கூறினுர்.

"சென்றொருவன் ஆவன கூறின் எயிறலைப் பான்" என்பதால் தண்ணளிக்கு மாறான கொடு மையை எடுத்துக் கூறினர்.

இயற்கையாகவே அரசன், மக்கள் எல்லோரை யும் தண்ணளியோடு இன்சொல் வழங்கி அணைக்க வேண்டியிருக்க, ஒருவன் தேடிவந்து தன் குறையைக் கூறிக் கொண்டவிடத்தும், மனத்தில் ஈரமற்ற வன்னெஞ்சன், அவன் குறைகேட்டு இன்மொழி கூறி அவனை அணைக்காது, கொடுஞ்சொற் கூறுதலோடன் றிப் பற்கடித்தும் அச்ச முறுத்துகின்றான்.

இங்ஙனம் கொடுஞ்சொல் கூறி எயிறலைக்கும் அரசனது இத்தீக் குணத்துக்குத் தொடர்பாக முன் னிகழும் தீக்குணங்களையும் இதனோடு அடிகள் குறிப் பித்தார். இங்ஙனம் கடுஞ்சொல்கூறி எயிறலைப் போன் காட்சிக் கெளியனாவனோ? ஆகானன்றோ? அதைக் குறித்தே "நின்று குறையிரப்ப நேர்படான்" என்று அச்செருக்கிய குணத்தையும் இதோடு தொடர்பு படுத்திக் கூறினர்.

இவ்வாறே வள்ளுவரும்,

> "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்"

என்று இவ்விரண்டையும் தொடர்பு படுத்திக் கூறிய துங் காண்க. இன்சொற்குக் காரணமான அன்போடு கண்ணோட்டமும் தொடர்புடையதாகலின், அக் கண் ணோட்டமின்மையையும் உணர்த்துவார்,

"இன்று கொளற்பால நாளைக்கொளப்பொறான்" என்று கூறினர். கண்ணோட்டம் அன்போடு தொடர் புடையது என்பதை அடிகள்,

அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான்

என்ற அடிகளில் புலப்படுத்து மாற்றையுங் காண்க.

இனி, அரசனது கொடைக்குணத்தை மிக அழகிய முறையில் விளக்குகின்றார்.

"கண்ணேக்(கு) அரும்பா நகைமுகமே நாள்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வன்மை
பலமா நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு."

இச் செய்யுள் எல்லார்க்கும் பொருந்தப் பொது வகையாகக் கூறியதுபோற் காணப்படினும், இச் செய்யுளுக்கு முன்னும் பின்னும் தொடர்பாக அரசனைப்பற்றிய செய்திகளே யமைய, இது நடுவில் அமைந்திருப்பதால், இது அரசனைக் குறித்துக் கூறியதாகவே துணிதல்வேண்டும். ஆயினும், இக் குணம் மற்றோராலும் கைக்கொள்ளப்பட வேண்டிய சிறந்த குணமாதலின், பொது வகையாற் கூறியதுபோன்று கூறினர் என்க. அரசனுக்குக் கொடைக் குணம் வேண்டும் என்று சொல்லவந்தவர், அவனைக் கற்பக தருவாகவே கூறினர். அரசன் உலகத்து எப்பொருளையும் உடையோனாதலின், எப்பொருளையுங் கொடுக்குங் கற்பகதருவாகக் கூறப்பட்டான்.

கொடைக் குணம் அமைந்தவனிடம் இன்றியமையாமல் இருக்கவேண்டிய சிறந்த குணங்களையும் அடிகள் கூறினர். அவை, இன்னேக்கும், நகைமுகமும், இன்மொழியும் என்ற மூன்றுமாம். முற்கூறிய 'தண்ணளி' எக் காலத்தும் உள்ள ஒரு தனிக் குணமாக, ஈண்டுக் கூறிய 'இன்மொழி', கொடைக் குணத்துக்கு அங்கமா யமைவது என்க.

தம்மிடம் வந்து ஒரு பொருளை இரந்தாருக்குத், தம்மைக் கண்ட உடனே, அவர் துயரைத் துடைப்பன, தம்மாட்டு உண்டாம், இன்னேக்கும் நகைமுகமுமே யாகலின், முதன் முதலாக இவை இரண்டும் வேண்டும் என்று சொல்லப்பட்டன. அவற்றின்பின், அவர் கூறும் இன்மொழியே அவரது இயற்கையான கொடைக் குணத்தை யுணர்த்து மாதலின், இன்மொழியை மூன்ருவதாகக் குறித்தார். இவ்வின் மொழி இல்லாதவிடத்து, மேற்கொண்ட கொடையும் பயனுடைத் தன்றன்றே?

இன்னேக்கும், நகைமுகமும், இன்சொல்லும், கொடைக்குமுன் அமைய வேண்டுவன என்பது குறித்தன்ரே வள்ளுவரும்,

> முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானும்
> இன்சொ லினதே அறம்

என்று கூறினர். "ஈதல் அறம்" ஆதலின், இன் சொலினதே ஈதலாகிய அறம் என்று கொள்க.

இம் மூன்றும் இலவாய வழி, ஈதல் அறமாகாதென்க. இங்ஙனம், மனத்தோடும், இன்சொல்லோடும் தொடர்பு படாத ஈதல், போலியறமேயா மென்க. உண்மையான செயல் நன் மனத்தோடும், நற் சொல்லோடும் தொடர்புபட்டே இருக்குமன்ரே? வள்ளுவர், 'முகமலர்ச்சியை' முன்னும் 'இன்னேக்கத்தை'ப் பின்னும் வைத்தது செய்யுளாதலின் என்க. முகத்தின் கண்ணே நுண் பொருளாதலின், இன்னேக்கம் நிகழ்ந்தே முகமலர்ச்சி நிகழுமென்க.

இதை யுணர்த்தவே அடிகள், இன்னுரைக்கத்தை அரும்பாகவும், நகை முகத்தை மலராகவுங் கூறினர். 'இன் சொலினதே அறம்' என்று கூறியாங்கு, இன் மொழியும் கொடையும் ஒரு நிகரனவாகலின், இன் மொழியைக் காயாகவும், கொடையை அக்காயே கனிந்த விடத்தாம் கனியாகவுங் கூறினர்.

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்(து)
இன்சொல னாகப் பெறின்

என்ற குறட்பாவால் இன்சொல்லை ஈதலினும் உயர் வாகக் கூறியது, 'காயின்றிப் பழம் இல்லாத தன் மைபோல', இன்சொலின்றி ஈதல் இல்லையாதலின், அம் முதன்மை நோக்கி என்க. கொடுஞ் சொல் பொருந்த ஈவோர், அறவழி நிற்போரன்றித், தம் பெருமை கருதிக் காரியம் செய்யும் கீழோர் அன்றோ?

இங்ஙனம் கொடை அளி செங்கோலைக்கொண்டு குடியோம்பும் அரசன், இடுக்கண் பல வரினும் அவற்றை மேற்கொண்டு, நன்மை புரிதலிலேயே கருத்தாய் இருக்கவேண்டு மென்றும், வேண்டுவ தாயின் உயிரையுந் துறத்தற் கஞ்சாமை வேண்டு மென்றும் கூறுவர் அடிகள்.

சாவஞ்சாமை

அடிகள் இறத்தற்கஞ்சா இயல்பைச் சிறந்ததோர் மாட் டமைவதொரு சிறந்த குணமாகத் தம் நூலுள் உணர்த்துகின்றார். இதற்கஞ்சுவோர் அழியும் உடலில் அளவு கடந்த பற்று உடையோரே ஆவர். உடலில் அளவுகடந்த பற்றுடையார், தம் உடற் பற்றால், உட லோம்பும் வாழ்க்கைக்கே தம் நாளைக் கழித்துச்,

செயற்கருஞ் செயல்களைச் செய்யா தொழிவர். மற்று, வீரஞ் சிறந்த அரசரும் மேலோரும் செயற்கருஞ் செயலில் ஈடுபடுவாராய், இவ்வுடல் அழிவையுங் கருதாது முயன்று, புகழ்பெற்று விளங்குவர். உடற் பற்றுடையார், உணவு தேடுதற்கே நாளைக் கழித்து வீணே யொழிவதையும், உயிர்க்கஞ்சாது முயல்வோர் அருஞ் செயல்களைச் செய்து புகழ் அடைதலையும் நாம் உலகிற் பலவிடத்துங் காணலாம். உயிர்க்கஞ்சாதோ ராக அடிகள் சிலரைக் கூறுகின்றார். அவர், தமை யடைந்தார் துயர் துடைப்போர், மானமோம்புவோர், வீரம் வேண்டுவோர். இவர்தம் இம் முக்குணமும், அரசனுக்கு இன்றியமையாது உரியனவென்று கருதி, அரசியல் கூறுகிறவிடத்து இவற்றை உணர்த்துகிறார்.

இம் முக்குணமும் பொருந்திய, உயிர்க்கஞ்சா இவ்வரசனோடொத்து, உயிர்க்கஞ்சாதோராக மற்றிரு வரையும் உடன் குறிக்கின்றார் அடிகள். அவர்கள் கணவனை இழந்த கற்புடைப் பெண்டிரும், ஐம்புலங் கடிந்த துறவோருமாவர்.

> "களைகணுத் தம்மடைந்தார்க்(கு) உற்றுழியும் மற்றோர்
> வினைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய(து)
> ஊனுடம் பென்று புகழுடம்(பு) ஓம்புதற்கே
> தானுடம் பட்டார்கள் தாம்.

இதில், அழியக்கூடிய உடலால் அழியாத புகழைத் தேடிக்கொள்வோரே மேலோர் என்று குறித்தார்.

> "தம்முடை ஆற்றலும் மானமும் தோற்றுத்தம்
> இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக—பின்னர்ச்
> சிறுவரை யாயினும் மன்ற தமக்காங்கு
> இறுவரை இல்லை எனின்.

இதில், உடல் ஒருதலையாக அழிவையே உடையது என்றும், ஆதலால் அவ்வுடலிடத்து மிகுந்த பற்று வைத்துத் தமக்கு இழிவைத் தேடலாகாதென்றும் குறித்தார்.

கலனழிந்த கற்புடைப் பெண்டிரும் ஐந்து
புலனுருங்கப் பொய்யொழிந் தாரும்—கொலைஞாட்பில்
மொய்ம்புடை வீரரும் அஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூ டினும்

இதில், மனம் உயர்ந்த நெறியிற் பொருந்தியோர் உடலழிவை ஒரு பொருட்டாகக் கருதார் என்று குறித்தார்.

கஅ. அடிகள் அருங் கருத்து.

நல்லோர் துன்புறல்

இனி மக்கள் ஐயுறத் தக்க சில பொருள்களைப் பற்றி அடிகள் தெளிவாகத் தம் கருத்தை உரைக்கின்றமை உணரத்தக்கன. உலகில் நல்லார் துன்புறுவதும், அல்லோர் செல்வத்தோடு வாழ்ந்து சிறந்து இருப்பதும் காணக்காண நம் மனத்தில் ஒருவகை மயக்கம் உண்டாகின்றது. இதற்கு அடிகள் கூறும் தெளிவுரை பின்வருமாறு :—

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன்.

கடவுள்கொள்கையுடையோர் செய்த தீமைகள் விரைவில் அழியுமாறு, உடனுக்குடன் துன்பத்தைக் கொடுத்து அவரை நன்னெறியில் உய்க்கின்றான்

இறைவன். இனிக், கடவுள்கொள்கையற்ற மூடர், தம் மனம்போனவாறு நடந்து, செல்வமே உயிர் என அவற்றையே தேடி நுகர்ந்து, பிறர்க்குத் தீமையே புரிந்து தீமையில் மிகுத்தலால், அவரை உடனுக்குடன் திருத்தல் பயனின்றாய் முடியுமாதலின், அவர் தம் தீவினை மேன்மேலும் மிகுந்து போய வழி, ஒரே வழியாக மறுமையிலோ மற்றும்பல பிறப்புக்களிலோ தண்டிப்பன் இறைவன். இறைவனின் இச்செயலுக்கு எடுத்துக் காட்டாகத் "தந்தைதம் மனத்துக்கினிய புதல்வர்க்கன்றோ பலகாலும் பயனுடை மொழிகளைக் கடிந்தும் கூறுவர்" என்று கூறுகின்றார். நன்மக்களை அவ்வப்போது திருத்துவதும் தீயமக்களை அவ்வப்பொழுது திருத்துவது பயனின்றாய்ப் போவதால், அவர் மனம் போனவாறே விட்டு முடிவில் பெரும் துன்பத்துக்காளானபொழுது திருத்துவதும் தக்கனவன்றே?

தீயோர் செல்வம்

இனித் தீயோர் செல்வத்தைக் குறித்து அடிகள கூறுவது :—

தீய செயல்செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன ஆகாவாம் நாஇன் புறநக்கிக்
கொல்லும் கவயமாப் போல்.

தீயோர் செல்வத்தால் மகிழ்ந்திருப்பதுபோல் காண்கின்றோம். ஆயினும் அத்தீயோர் செல்வம் எவ்வளவுக்கெவ்வளவு மிகுந்திருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அச் செல்வம் மகிழ்ச்சியைக் கொடுப்பதுபோற்றோன்றினும் தீமையே மிகுவிக்கின்றது. ஏனெனில்,

தீயோனாதலின், அவன் மேன்மேலும் பொருளை ஈட்டலும் தீய வழியிலேயாம். இங்ஙனம் தீய வழியில் பொருள் ஈட்டியோன் நல்வழியில் செலவிடுவானோ? செல்வச் செருக்காலும் தீய குணத்தாலும் பல தீமைகளையும் புரிந்து தீய காரியத்துக்கே பொருளைச் செலவிடுவன். எவ்வளவுக் கெவ்வளவு பொருள் மிகுந்து இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு செல்வச் செருக்கும் தீச் செயலும் மிகுந்து நிற்கும். ஆதலின் அச்செல்வம் மகிழ்ச்சியைக் கொடுப்பது போற் றன்றி, அவனுக்கு நிறைந்த தீமையையே மேன் மேலும் வளர்க்கிறது. இதற்கோர் உவமையும் அடிகள் அமைத்தனர். காட்டுப்பசு என்னுமொரு வகைப் பசுவின் தன்மையைக் கூறுகின்றார். இது தன்னோடு ஒத்த பிற விலங்குகளை நாவினால் நக்கும். இங்ஙனம் நக்குதல் அவ்விலங்குகட்கு மிகுந்த இன்பத்தினைக் கொடுக்கும். அவ்விலங்குகள் அவ்வின்பத்திலேயே ஈடுபட்டு மெய்ம் மறந்து நிற்க, இக்காட்டுப் பசு மேன்மேலும் இனிமையாகவே நக்கி, அவ்விலங்கு உருக்குலையுமாறு கொன்றுவிடும். இக்காட்டுப்பசுவினைப் போன்றதே தீயோர் செல்வமென்று கூறுகின்றார்.

நல்லோர் இயல்பு.

உலகில் மக்கள் சிலரை நல்லோரென்றும் சிலரைத் தீயோரென்றும் கூறுதல், அவரவரிடத்துக் காணப்படும் குணம் நோக்கியன்றே? நல்லோர் எனப்படுவோர் ஒருவகைத் தீக்குணச் சார்பும் இல்லா திருத்தலே சிறப்பு.

இது குறித்தே அடிகளும்,

நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே(று) அறப்பசித்தும் தின்னவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்

என்று கூறினர்.

ஆயினும் நல்லோரெனப் படுவோர் எல்லாரும் எல்லா நற்குணங்களும் உடையராயே இருத்தல் வேண்டும் என்றும், அங்ஙனமில்லாதோர் தீயரே என்றும் மதித்து விடுதல் கூடாது என்றும் அடிகள் நமக்கு வற்புறுத்துக் கூறுகின்றனர்.

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கிழல்லர்—முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி உள்உடைவார்
தீய செயினும் சில.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கேற்ப, நற்குணம் மிகுந்திருப்பின் நல்லோரென்றும், தீக்குணம் மிகுந்திருப்பின் தீயோரென்றும் கொள்ளலே வேண்டும். மக்களாய்ப் பிறந்தோரிடத்துக் குணமும் குற்றமும் காணப்படல், இயல்பே. மக்கள் பல பிறப்புக்களில் உழன்று உழன்று குற்றம் தேயப் பெற்றுக் குணம் பெருகி மேன்மையுறுவர். ஆதலின் தீக்குணம் ஒன்று காணப்படினும், அவரைத் தீயோரென்று ஒதுக்கும் குணம் மக்கட் கூட்டத்தினிடையே காணப்பட்டால், அம்மக்கட் கூட்டம் நன்னெறி நோக்கிச் செல்வது ஒருநாளு மில்லை.

மேலும் நல்லோர் சில தீமை புரியுமாறு ஏற்பட்டதாயினும், அப்போது அவர் மன நிலையை அடிகள் நன்கெடுத்துக் கூறினர். அவரது மனத்தின் தன்மையை வெளிப்படுத்துவார், "ஊழ் வலியுன்னிப் பழி நாணி உள் உடைவார்" என்று கூறினர். அந்நல்லோர் பல நல்லியல்பு வாய்க்கப் பெற்றவராயிருந்தும், வழுவியதற்குக் காரணம் அவரது தீ ஊழேயாகக் கொள்க என்று குறிப்பித்தார் அடிகள். தாம் நல்லற நெறியுடையரா யிருந்தும் மறந்து வழுவியதற்குக் காரணமாகத், தம் தீயூழையே அவர்களும் கருதுகின்றார்கள்: கருதியதோடு செய்த பழிக்கு நாணுகின்றார்கள்: நாணி மனமுடைகின்றார்கள். இங்ஙன மாவோர் மறுமுறையும் தீமைசெய்வரோ? இங்ஙனம் அவர் அமைய, உலகில் பலர் அவரது பல நல்லியல்புகளையும் கூறிக் கூறி, நாத் தழும்பேறி யிருக்கின்றனர். ஆதலின், இத்தகையோர் ஒரு சமயம் தீய செய நேரினும், அவரைத் தீயோரென்று அறியாமையால் ஒதுக்காமல், நல்லோரென்றே கொண்டு பயனடைக என்று மக்கட்கு நற்பயனடையுமாற்றையுங் காட்டினார் அடிகள்.

இங்ஙனமே, துறவோர் இயற்கை கூறுகின்ற இடத்தும், துறவோர் தம் நிலையில் தவறலாகாதென்று உணர்த்துபவர்,

> மெலியார் விழினும் ஒருவாற்றான் உய்ப
> வலியார்மற் றென்றனும் உய்யார்—நிலைதப்பி
> நொய்ய சழக்கென விழாவாம் விழினும்
> உய்யுமால் உய்யா பிற

என்று துறவறம் பூண்ட பெரியோர் வழுவின் எப்பயனுமற்றுக் கெட்டேயொழிவர் என்று கூறி, மனத்தை

இறைவனேடியையவித் தொழுகுவோராய் மிக மேலாந் தன்மை எய்தியோர், இவ்வுடற்றொடர்பால் துறவறத்திற்குப்பொருந்தாத ஒரோ ஒரு இயையாத செய்கையுடையோராய்க் காணப்படினும், அது பழித்தற்கிடமாகாதென்றும் உணர்த்துகின்றார்.

இசையாத போலினும் மேலோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால்—பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கம் காண்பாரை ஒப்பவே
ஊனோம்பி ஊன்தின் பவர்.

இதற்கவர் கூறிய ஒப்புமையும் சிந்தித்தற்குரியது. மனம் இறைவனிடத்தே பொருந்தப்பெற்ற துறவோர் இசையாதன ஒரோ வழிச் செய்யின், அவர் உலகம் இன்புற வேண்டிப் பசுவைக் கொன்று வேள்வி செய்வோரை ஒப்பர் என்றும், மற்றையோர் இசையாதன செய்யின், அவர் தம் உடல் வளர்த்தற்குப் பிற உயிர்களைக் கொன்று ஊன் தின்போரையொப்பரென்றுங் கூறினர். வேள்வி செய்வோர், உலகம் இன்புறவேண்டுமென்னும் பெருமனம் படைத்தாராதல் போல, இத்துறவோர் தம்மனத்தை இறைவன் பால் ஒன்றவைத்தொழுகும் பெருமைசால் பண்பினரன்றோ? ஆதலின் மனம் உயர்ந்தவிடத்தே பற்றி நிற்க, இவ்வுடற்றொடர்பால் இசையாத ஒரேவழிச் செய்யின், மனத்தின் உயர்வை நோக்க உடற்றொடர்பாம் இச்செய்கை இலதாய் முடியுமன்றோ? இனி, மற்றையோர் இசையாதன செய்யின் அது கொடுமனச் செய்கையன்றே? அவர் உயிர்க்கொலைபுரியும் வன்கணாளரையொப்பாவதும் விளக்கமன்றே? ஆகவே இத்துறவோர் பெருமையினையும்

உணர்ந்து மதித்து நற்பயன்பெறுக என்று மக்கட்கு அறிவுறுத்தினர்.

இனி, உயிர்க்கொலை புரிந்து வேள்வி இயற்றி நன்மையை எதிர்பார்த்தலை விட்டு, உயிர்க்கொலை புரியாது எவ்வுயிரிடத்தும் தண்ணருள் தாங்கி ஒழுகுவது மிகச் சிறந்ததாதல் போல, இசையாதன துறந்தோர் மாட்டுத்தோன்ருத தன்மை சிறந்ததென்றுங் குறிப்பித்தவாரும்.

> அவிசொரிந்(து) ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணுமை நன்று

அன்ரே? இங்ஙனம் சொல்லக்கிடக்குமாறு உவமை அமைத்த திறம் பெரிதும் வியத்தற்குரியது.

இங்ஙனமெல்லாம் மக்களியற்கையால் ஒரோவழி மேலோர் வழுவினும், அறிவுடையோர் அதைப் பொருட்டாகக் கொள்ளாது, அவரைச் சார்ந்து பயனுறுவர். இதுவே செய்யத்தக்கது என்பதை யுணர்த்தியன்ரே,

> சிறியர் கெட்டாலும் சிறியரே சிறியர்மற்(று)
> அல்லாதார் கெட்டாலங் கென்னகும்—சிறிய
> பொன்னின் குடமுடைந்தால் பொன்னகும் என்னகும்
> மண்ணின் குடமுடைந்தக் கால்

என்று ஔவையாரும் அருளினர்.

ஊழும் முயற்சியும்

விதியெனபது மக்கள் பலராலும் பலகாலும் பேசப்படுவது. விதியின் வழி எதுவும் நடைபெறுகிற தென்பது, பலரும் கொள்ளும் உண்மையே. எக்காரியமும் விதியின் வழியே இயலும் என்பதையே அடிகளும் உணர்த்துவாராய்க், "கற்பன ஊழற்ருர்"

என்ற விடத்தும் கற்பதற்கும் ஊழே வேண்டுமென்று குறித்தார். பின்னும் ஓரிடத்தில்,

> நல்லவை செய்யத் தொடங்கினும் நோவுமே
> அல்லன அல்லவற்றிற் கொண்டுய்க்கும் .(அல்லன=தீயூழ்)

என்று கூறி, தீய ஊழ் தீமையிலேயே கொண்டு செலுத்தும் என்றும் உணர்த்தினர்.

இங்ஙனம், விதியின் வழியே எல்லாம் நடைபெற்றாலும், அவ்விதியையே நினைந்து முயற்சியை நெகிழ விடுதல் உலகில் பலருடைய இயற்கையாய் இருக்கின்றது. உடல் வருத்தங் கருதி முயற்சியை இழந்திருப்பதற்கு, விதியைக் காரணமாக்குவர். விதியிருப்பினும் முயற்சியின்றி ஒரு காரியமும் நடவாது. எளிமையான முயற்சியால் நலம் பயக்கும் காரியங்களை விதியை நினைந்து வாளாவிடுவரோ? ஆதலின் எத்தகைக் காரியத்திலும் முயற்சியில் சிறிதும் குறைதலாகாது. வருத்தந் தரதக்க காரியங்களில் முயலாது, ஊழ்வழி நடக்குமென்று சொல்வோர்க்கு அடிகள் கூறுவது,

> முயலாது வைத்து முயற்றின்மை யாலே
> உயலாகா ஊழ்த்திறத்த என்னார்—மயலாயும்
> ஊற்றம் இறுவிளக்கம் ஊழுண்மை காண்டும்என்று
> ஏற்றார் எறிகான் முகத்து

என்பது.

மயக்கம் மேற்கொண்டோரும், மறைவு இல்லாத விளக்கை, வீசுகின்ற காற்றெதிரில் கையாலேனும் மறையாமல் ஏற்றார். அங்ஙனமாக, ஒருவன் எவ்வித முயற்சியும் செய்யாது, ஊழ்வழி நடக்குங் கருமங்கள் நடந்தே தீரும் என்று வறிதே இருத்தல் தகுமோ? ஒருவன் முயற்சி செய்தேயன்றோ பயனை எதிர் நோக்கல் வேண்டும்.

இனி, அடிகள் நிலையான பயன் தரத்தக்க வழியில் முயலல் வேண்டுமென்றுங் கூறுகின்றனர்.

பெரும்பாலான மக்கள் தமக்கும் தம்மனைவி மக்களுக்குமாக உணவு தேடியுண்டும், செல்வம் ஈட்டி இன்புற்றும், வேறொரு செயலுமறியாராய், விலங்கினங்கள் போன்று உடலுக்கே யுழைத்து வீணே காலங்கழிப்பர். இவர்கள் உடலோம்புதற்குத் தானும் கருத்துடன் வருந்தி முயலார்: உடல் நலங் கருதாது நாவின்பங் கருதி உண்டு, மனம் போனவாறெல்லாம் ஐம்பொறி இன்பம் நுகர்வதால், உடலுக்கு ஊறு தேடிக்கொள்வர்: உலகில் விலங்கினங்களினின்றும் மக்களை வேறுபடுத்தும் சிறந்த அறிவைத் தானும் பெருக்க முயன்று, கல்லாராய், மக்கள் வாழ்க்கைப் பயனையடையாராய், அவ்விலங்கினங்களையே யொப்பர்: மற்றும் பொருளீட்டுதற் கண் மட்டும் அவாமிக்குடையராய், அதை ஈட்டற்கே நாளைக்கழிப்பர்; தீய வழியிலும் அதை ஈட்டமுற்படுவர். நல்லுடலும் நல்லறிவும் இல்லாமல் பொருளை மட்டும் ஈட்டின், அதனால் நல்வழியில் நின்றும் செயற்கருங் காரியங்களைச் செய்தும் சிறந்த பயனையடைதல் இயலுமோ? அப்பொருள் தீச்செயலுக்குங் காரணமாய், அவர்களுக்குத் தீமையையும் மிகுவிக்கும்.

மற்றறிவுடையாரோவெனின், நாவின்பங் கருதாது உடல் நலங்கருதி உணவுண்டும், பொறிகளில் மனம் சென்ற வழி விடாமல் தம்மறிவால் தடுத்து நன்னெறியிற் செலுத்தி நேரிய முறையில் இன்புற்றும், தம்முடலோம்பற் கண் கருத்தாய் முயல்வர். "உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பது திருமூலர் திருவாக்கன்றோ?

மேலும் மக்கட்கு அறிவே சிறந்ததென்பதை யுணர்ந்து, முயன்று கற்று, அறிவை மேன்மேலும் பெருக்கி அறிவின் மேம்பட்டோராவர்: உலகியலுக்கு இன்றியமையாததான பொருளையும் நெறியறிந்து ஈட்டுவர். இங்ஙனம் உடல்வலி அறிவுவலி பொருள் வலியைப் பெற்றோரேயன்றோ, நன்னெறியில் நின்றும், செயற்கருஞ் செயல்களைச் செய்தும், புகழ் மேம்பட்டவராய், மறுமைக்கும் நன்மை தேடிக்கொண்டவராவர்.

இங்ஙனம் உடலோம்பலிலும் அறிவை வளர்த்தலிலும் பொருளை ஈட்டுவதிலும் முயலும்போது, அவற்றைக் கருதியவளவு அடைய இயலாவிட்டாலும், மேலும் மேலும் முயல்வதே அறிவுடையோன் கடமையாகும். இங்ஙனமாகாமல், நிலையான பயன் தரத்தக்க வகையில் முயலும் இம்முயற்சிக்கு அஞ்சி, எளியகாரியங்களையே மேற்கொண்டு, உண்டுறங்கி இன்புற்றுக் காலங்கழித்துத், தமக்கின்பந் தேடிக் கொள்வாராய் நினைந்து துன்பமே மிகுவித்துக் கொள்வோர் பேதையரன்றோ? நிலைத்த பயன் தரத்தக்க மேற்கூறிய நன்முயற்சிகளில் ஈடுபட்டோர், ஒருகால் காரியம் நினைத்தவளவு கைகூடாராயினும், அவரை அறிவுடையோர் இகழார்.

> "பொறிஇன்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
> ஆள்வினை இன்மை பழி"

என்பது பொய்யாமொழியன்றோ?

ஆகவே, நிலைத்தபயனுடைய காரியங்கள் முயற்சியால் முற்றுப்பெருமற்போயினும், மேலும் மேலும் முயலுதலே அறிவுடையோர் செயலாம். விதியை

நினைந்து நிலைத்த பயனைக் கைவிடுதல் அறிவற்ற மடவோர் செயலாம். முயன்ருல், கைகூடா போன்றிருந்தன கைகூடுதலும் கூடும். இதுபற்றியே அடிகள்,

"உறுநி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப—இறும்உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் நீதன்ருல் அல்லனபோல்
அவனவும் உண்டு சில"

என்று கூறினர்.

இறக்குந் தருவாயிலிருக்கும் உயிர் பிழைக்க வேண்டி, மருந்து கொடுத்தலே செய்யத்தக்கது என்று ஈண்டுக் கூறியது கடைப்பிடித்தற்குரியது. ஒரு சிலர் தாம் நோய் கொண்ட காலத்துங்கூட அந்நோயைத் தீர்த்தற்கு முயன்று வழிகாணுமல், எல்லாம் விதிவழி நடக்குமென் றமைகின்றனர். பொருளைச் செலவிடற்கும், வருந்தி வழி வகைகளை நாடற்கும் மனமிலராய் இங்ஙனம் கூறுவோர் சிலர். என்னே இவர்களின் அறியாமை!

இனி, முயன்ருல் ஊழையும் விலக்கலாமென்றும் அடிகள் கூறுவர்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர்"

என்பது வள்ளுவர் வாய்மொழியன்ருே?

இதற்கு அடிகள் ஒரு சான்றுங் கூறுகின்றனர். மார்க்கண்டன் பதினறு வயதே பெற்று வைத்திருந்தும், தான் தளரா முயற்சியோடு இறைவனை அன்பாற்பிணித்தமையால், என்றும் பதினருய்ப் பெற்றனன் என்றனர்.

"உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி"

என்றது காண்க.

ஊழின் வழி யாவும் நடக்குமென்று கூறிய அடிகள், ஊழையும் முயன்றால் வெல்லலாம் என்று கூறி, அதற்கோர் எடுத்துக் காட்டும் கூறினர். இவை முரண்பட்டனபோற் றோன்றினும் இவையே உலகியற்கையாம். இவற்றுள் ஒன்றே கொள்ளற் குரியதென்று கூறின், அது பொருத்தமாவதின்மை யறியப்படும். "ஊழின் வழி யாவும் நடக்கு" மென்பதே உறுதி என்று கொள்வோம். அங்ஙனமாயின், உலகில் யாரும் முயற்சி மேற்கொள்ளல் வேண்டுவதன்று. "ஊழை முயன்றால் வெல்லலாம்" என்பதே உறுதியென்று கொள்ளின், நாம் எடுத்த கருமம் கைகூடாவிடினும் முயன்றுகொண்டே செல்லல் வேண்டும். இங்ஙனம் பலகால் முயன்றும் காரியம் கை கூடாது போதலும் உண்டு. மனங் குன்றாது மேலும் மேலும் தம்மால் இயன்ற முறையெல்லாம் முயன்றாலும், காரியங் கைகூடாவிடத்து மனம் முறிந்தேபோகும். ஆதலின், ஊழ் உண்மையாதலை உணர்ந்து, அவ்வுண்மை யுணர்ச்சியால் மனம் தெளியப் பெற்று, மனம் அமைந்தவனாய், மீண்டும் மனவலி பெற்று முயற்சியில் தலைப்படுதலே இயற்கையாம்.

ஆதலின், ஊழ் முயற்சி என்ற இரண்டு சக்கரங்களைப் பெற்றே உலக வாழ்க்கை நடைபெறுகிறதென்றுணர்க. ஆதலின் இரண்டும் ஒத்த வலியுடையன வென்று கொள்க. ஒத்தவலியுடையவாயினும், நாம்

ஒன்றைப் பற்றும் பொழுது அதுவே வலியுடைய தாகும். இங்ஙனம் ஊழ் முயற்சி என்ற இரண்டுள் ஒன்றை இகழாது, இரண்டையும் தனித்தனி வலிமை யுடையன என்று பற்றிச் சென்றுலே வாழ்க்கையில் முன்னேறிச் செல்லலாம். இதுவே அடிகள் கருத் தாதல் தெளிக.

அரசகாரியம் பார்த்தல்

கல்வி அறிவால் மேம்பட்டோர் அரசனிடத்து அடிமைப் படாமல் அரசனுக்கும் தலைமையெய்த வேண்டுமென்பதும், மற்றைய மக்கள் அரசனைச் சார்ந்து மேன்மையடைய வேண்டுமென்பதும் அடி கள் கருத்து.

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங்(கு) உவப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புறத்தது பூஞை புறங்கடைய
கந்துகோல் பூட்கைக் களிறு

என்றும்,

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலம் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை யெல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்

என்றும் இருவகையோர்க்கும் உரைத்தனர் அடிகள்.

௧௪. நூற் பயன்

அடிகள் தம் நூற் பயனைக் கடைசியாக ஒரு செய்யுளில் முடித்துக் கூறி, மக்கள் கடமையையும் வாழ்க்கைப் பயனையும் தெளிய வடித்துணர்த்து கின்றார்.

கல்வியே மக்களை விலங்குணர்ச்சியினின்றும் நீக்கி, மக்களுணர்சியை வளர்த்து, மக்களை உண்மை மக்களாகவே ஆக்குந் தன்மை யுடைத்தாதலால், முதலில் கற்றல் வேண்டுமென்று கூறினர்.

> விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்.

இனிப் பல நூல்களையும், தம் அறிவொடு தொடர்பு படாது கிளிபோன்று கற்று, 'நாம் பல நூல்களையுங் கற்று விட்டோம்' என்று அமையாது, கற்றவற்றைத் தம்மறிவால் ஆறிந்துணர வேண்டும். அல்லாக்கால் கற்றும் பயனின்றாம். இங்ஙனம் கற்றாலே அறிவு வளர்ச்சியுற்று மேன்மையடைவர். ஆகவே, கற்றவற்றை உணர்ந்து அறிவு மேம்பட்டு அறிவுடையராய்த் திகழவேண்டும் என்பதிரண்டாவது.

> அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்.

இனி, இங்ஙனம் கற்றறிந்தவர் தம்மறிவுடைமையால் செருக்கித் திரியின் அறிவிற்குறைந்தாரென் பதையே காட்டும். அறிவின் பரப்பை யுணர்ந்தவர், தம்மறிவு, முழுதையும் நோக்க மிகச் சிறிதாயிருத்தலின், செருக்குவரோ? ஆதலின், கற்றறிந்தவர் அடக்கமுடையராதல் வேண்டும். இவ்வடக்கம் என்னும் குணமிருந்தாலே, அது அவரை நன்மையிற் செலுத்தும். ஆகவே இதை மூன்றாவதாகக் கூறினர்.

> கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
> அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

என்றபடி அடக்க முடையானிடம் பல அறங்களும் தாமே சென்றடையுமன்றோ?

இனிக், கற்றறிந்தடங்கியோர், கல்வியின் பயனுய்த் தீமையை யொழித்தலையும், நன்மையைக் கொள்ளலையும் கடைப்பிடித்தல் வேண்டுமென்று கூறுகிறுர். நன்மை கொளற்கு முன் தீமை யொழித்தல் நிகழ வேண்டுதலின், அதை முற்கூறுகிறுர். ஆகவே அறவழி நிற்றலைக் கூறினுர். அறவழியே ஒருவனுக்கு இன்பத்தைக் கொடுப்பதும், மறநெறி தீமையைப் பயப்பதும் உறுதியன்றே? ஆகவே இவற்றை நான்கு, ஐந்தாவதாகக் கூறினர்.

தன்னைத்தான் காதல னயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை

என்பன காண்க.

இனி, மறநெறி கடிந்து அறநெறி நின்ருராயினும் துன்பம் நீங்கி இன்பமடைதற்குப், பெற்றதுகொண்டு மனம் நிறைந்து அமைய வேண்டு மென்று கூறுகிறுர். மற்று, அவாவைப் பெருக்கிக் கொண்டே சென்ருல், அதற்கு முடிவு காண்கிலராய், அழிதற் றன்மையவாகிய இவ்வுலகப் பொருளிடத்தே அழுந்தித் துன்பத்தையே யடைவர். ஆகவே இதை ஆருவதாகக் கூறினுர்.

இன்பம் இடையரு(து) ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்

என்ற உரையையும் நோக்குக.

இனி, அறநெறி நின்று உலகப் பொருளிடத்து அவாவை விரிக்காது நின்றவர், அழியா முடிவிலின்பத்தைத் தரவல்ல இறைவனிடத்தே பற்றுவைக்க

வேண்டுமென்று கூறுகின்ருர். நிறைந்த இன்பத்தை யடைய விரும்புபவர், உண்மை அறிவின்ப வடிவின ஞன இறைவனிடத்தே பற்று வைத்தாலன்றே அதையடையலாம். அங்ஙனமாகாது, உலகப்பொரு ளிடத்தே மிகுதியும் அழுந்தப் பெறுதல் துன்பத் துக்கே காரணமாம். ஆகவே இதை ஏழாவதாகக் கூறினுர்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

அன்றே?

இங்ஙனம் இறைவனிடத்தே அழுந்தப் பெற் ருேர், நாளடைவில் பிற தொழில் ஒழியப் பெறுவர் என்று கூறுகின்ருர். மனமும் அறிவும் இன்பவடி வினஞன இறைவனிடத்தே அழுந்தப் பெற்றனவாத லின், வேறு செயலுண்டாதற்கும் வழியுண்டோ? ஆகவே இந் நிலையை எட்டாவதாகக் கூறினர்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்று கூறப்படுவதுங் காண்க.

இங்ஙனம் இறைவனிடத்துப் பற்று வைத்து மற்றைச் செயலொழிய நின்ற விடத்து, அன்பே உருவினனுய அவ் இறைவன், தன்மாட்டு அன்பு செய்வார்க்கு அருளுவனுதலின், அவனருளால் மெய் யுணர்ச்சியும் தலைப்படுவர். ஆகவே இந் நிலையை ஒன்பதாவதாகக் கூறினுர்.

கற்(று)ஈண்(டு) மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்(று)ஈண்டு வாரா நெறி

என்று மக்கள், கற்றல் முதலாம் பலவகை நிலையில் நின்று, முடிவில் மெய்ப்பொருள் உணர்ந்தவராய், வீட்டு நெறியை எய்துவர் என்று வள்ளுவரும் குறித்தமை காண்க.

> கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
> பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
> பற்றுவதே பற்றிப் பணியற நின்(று) ஒன்றுணர்ந்து
> நிற்பாரே நீள்நெறிச்சென் றார்

என்ற செய்யுளால், கற்றல், அறிதல், அடங்கல், தீமையொழித்தல், நன்றாற்றல், அவாவடக்கல், இறைவனிடத்துப் பற்று வைத்தல், செயலொழிதல், மெய்யுணர்தல் என்ற இவையே, மக்கள் கைக்கொண்டு உய்திபெறுதற்குக் **குமரகுருபரர் காட்டிய வழியாம்** என்றுணர்க.

கரு. அடிகள் சொல்லும் செயலும்

> சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்

என்பது மெய்ம்மொழியாகும்.

அடிகள் தம்நூலுள் சொன்ன அறிவுரைகளுக்குத் தாமே எடுத்துக்காட்டாய் அமைவது பெரிதும் கருதத்தக்கது.

அடிகள் உலகத்துப் பொருள்களை உள்ளவாறுணர்ந்து முற்றத்துறந்த முனிவராதற் கேற்பத், தம் நூலின் முதற் செய்யுளாகிய கடவுள் வாழ்த்துச்செய்யுளிலேயே, துறவறத்தோர்தம் சிறந்த கொள்கையாகிய பொருள் நிலையாமையை உணர்த்தி, மக்கள் மனத்தில் அறம் வளரவேண்டி, அம்மனத்தைப் பண்படுத்துகின்றார்.

நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இங்கு, இளமை, செல்வம், உடல் என்பனவற்றின் நிலையாமை உணர்த்தப்பட்டன.

ஈண்டு, "என்னே வழுத்தாதது எம்பிரான் மன்று" என்று தில்லைக்கூத்தனை யுணர்த்தியது கருதத் தக்கது. காண முத்தி தரும் இறைவன் தில்லைக் கூத்தனன்றோ? அதனால் குறித்தனர் என்று கொள்ளல் ஏற்புடைத்து. பிறக்க முத்திதரும் தலமும் இறக்க முத்திதரும் தலமும் உளவாயினும், பிறத்தலும் இறத்தலும் நம் செயலாவன அன்மையின் காணமுத்தி தரும் தலத்துள்ள இறைவனைக் குறித்தார். அடிகள் திருவாரூர் சென்று தியாகேசனைத் துதித்ததும், தில்லைக் கூத்தனைக் கண்டு மகிழ்ந்ததும், காசியில் விசுவேசனை வணங்கி வழிபட்டு அங்கேயே உடலை நீத்ததும் நோக்கத் தக்கன. அடிகள்,

சொல்வளம் மல்லல் வெறுக்கையாம்

என்று கூறியதற்கேற்பத், தாம் சிறந்த சொற்செல்வத்தைப் பெற்றிருந்தனர் என்பது, அவர் இயற்றிய செய்யுட்களின் சொல்லமைப்பாலும் பொருட் சிறப்பாலும் நன்கு உணரப்படும். இந் நீதி நூலின் செய்யுட்களின் சொல்வளமும் பொருட் சிறப்பும் முன்கூறிய இடங்களிலும், பின்வருவனவற்றிலும் விளங்கிக் கிடப்பதைக் காண்க. மேலும், சொல்வன்மை வாய்ந்த அடிகள் காசியில் உறைந்தபோது நல்லோரவையுள் பல விரிவுரைகள் வழங்கித், தாம்

கல்வியில் தலைமை யெய்தி நின்றதன்மை விளங்க விருந்தனர். கற்றோர், அவையுள் அறிவுரை வழங்குந் தன்மையினராதல் வேண்டும் என்பதை

> அவையஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வியும் ....
> பூத்தலிற் பூவாமை நன்று

என்ற விடத்து உணர்த்தினரன்றோ?

அடிகள், தாம் கல்வியிற் சிறந்து, சொல்வன்மை பெற்று, நல்லோரவையுள் அறிவுரை வழங்கி மேம் பட்டதோடு, உலகில் என்றும் நின்று நிலவத்தக்கன வாய் இந் நீதிநூலோடு, இறைவனைப் புகழ்ந்து வணங் குவாராய்ப் பல நூல்களையும் செய்து உலகோர்க்கு உதவி மேம்பட்டனர். கற்றோர் இங்ஙனம் நூல் செய்தல் கடன் என்பதை,

> கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
> செல்வப் புதல்வனே ஈர்ங்கவியா

என்றவிடத்துக் குறித்தனரன்றோ?

அடிகள், தாம் கற்றுச் சிறந்ததோ டமையாது, பொருள் கொண்டு, காசியில் சிறந்த அறங்களைச் செய்து சிறந்திருந்தனர். கல்விக்கும், கற்றோனுக்கும் பொருள் சிறப்பைத் தரும் என்பதை,

> எத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
> இனைத்துணையும் சீர்ப்பா டிலவாம்

என்று கூறியதால் உணர்ந்தோமன்றோ?

அடிகள், அரசராலும் நன்கு மதிக்கப்பெற்று நண்பராகக் கொள்ளப்பட்ட பெருமையினர். மதுரையில் திருமலைநாயகருக்கு நண்பராயொழுகி, அவர் முன்னிலையிலேயே, தாம் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை யரங்கேற்றியமையும், காசியில்

மகமதிய மன்னனால் நன்கு மதிக்கப்பெற்று, அவனிடம் இடம்பெற்றுக் கொண்டு மடம் சமைத்ததும், அங்கு இருந்துகொண்டு மதுரை அரசர் மூலம் பொருள் பெற்றுச் சிறந்த அறங்களைச் செய்துகொண்டு இருந்ததும், இவர் அரசராலும் போற்றப்படும் பெருந்தகையினராயிருந்தனர் என்பதைப் புலப்படுத்தும். இங்ஙனம் அரசரே இவர் பெருமையுணர்ந்து நண்பு பாராட்டினரன்றி, இவரே அரசர் தொடர்பை விரும்பினரல்லர்.

வேத்தவை காவார் மிகன் மக்கள்

என்று அடிகள் அருளியது காண்க. அடிகள் தாம் செய்த சகலகலாவல்லி மாலையிலும்,

மண்கண்ட வெண்குடைக் கிழாக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்

என்று 'அரசரும் பணியும் பெருமையை' நாமகள்பால் வேண்டினர். அடிகள்,

.... அறவோர்க்கு
அடிகளே தெய்வம்

என்று கூறியாங்குத், தம்மை யாட்கொண்ட, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதினத்து நான்காவது ஞான ஆசிரியராக விளங்கித், தமக்கு ஞானநெறி காட்டிய தலைவரை இறைவனாகவே கொண்டு ஆட்பட்டொழுகினர். அவரை இறைவனாகவே கொண்டு, பண்டார மும்மணிக்கோவை யென்றதொரு நூல் இயற்றி அவர் திருவடியிற்சாத்தி மகிழ்ந்து, அவர் அருள்பெற்றொழுகித் துறவறநெறியில் மேம்பட்டு வாழ்க்கைப்பயனெய்தினர்.

கசூ. அடிகள் எடுத்தாண்ட பிறநூற் கருத்துக்கள்

அடிகள் குறட்பாக்களிலிருந்து சிறந்த உவமை முதலியவற்றைத் தம் நாலுள் எடுத்தமைத்திருக்கின் றனர்.

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு

என்பது குறள். 'ஆண்மையுடையோனுக்கே வாள் பயன்படும்' என்பது ஈண்டுக்கூறிய உவமை. இவ்வுவமை,

கண்ணிற் சொலிச்செவியின் நோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே ஆயினும்—தன்னளியால்
மன்மதை ஓம்பாதார்க் கென்னும் வயப்படைமற்(று)
என்பயக்கும் ஆணல் லவர்க்கு

என்ற இச் செய்யுளில் அமைந்திருத்தல் காண்க. ஆண்மையற்றோன் கொண்ட வாள் அவனது திறமை யின்மையை எல்லோர்க்குங் காட்டி, அவனை இழிவு படுத்தல் போல், குடியோம்பா அரசனுக்கும் அவ்வரச செல்வம் அவனது திறமையின்மையைக் காட்டி, அவனை இழிவுபடுத்தும். மேலும், அவ்வாள் அவ னுக்கே கேட்டைத் தருதலும் உண்டு. அஃதே போல் குடியோம்பா அரசனது அரச செல்வமும் அவனுக்கே கேட்டையுந்தரும்.

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு

என்ற குறட்பாவில் ஒறுத்தற்றொழில் கொண்டு குடி களைப் பொருள் வேண்டும் அரசனுக்கு உவமையாக, ஆறலைக்குமிடத்து வேல் கொண்டு நின்ற வேடனைக் கூறினர். இக் கருத்தையே,

> இன்று கொள்ளற்பால நாளைக் கொளப் பொருள்
> நின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவன்
> ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
> வேடலன் வேந்து மலன்

என்ற செய்யுளில் அமைத்தார் அடிகள்.

அவ்வரசன் வேடனை யொப்பானெனக் கூறுது, 'அவன் வேடனுமல்லன் வேந்தனுமல்லன்' என்று அவனது இழிதகைமையை நன்கு புலப்படுத்திக் கூறினர். அச்சுறுத்தலோடு வலிந்து பொருள் பறிக்கும் குணமிருந்தும், அவன் நாட்டிலிருத்தலின் வேடலன் என்றும், அரசனுந் தன்மைக்கேற்ப அடைந்தோரை ஆதரிக்கும் குணமின்மையின் வேந்தலன் என்றும் கூறி, அவனது இழிதகைமையை நன்கு வலியுறுத்தினர்.

> கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிருந் தொழும்

என்ற குறட்பாவின் போக்கும்,

> எவ்வினையரேனும் இணைவிழைச்(சு) ஒன்று இல்லெனின்
> தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்

என்ற அடிகள் வாக்கும் ஒத்தனவேயன்றோ? அடிகள் திருக்குறள் கருத்துக்களையேயன்றிப் பிறநூற் கருத்துக்களையும் தம் நூலுள் பொன்னேபோற் போற்றி ஆண்டிருக்கின்றனர். எடுத்துக் காட்டாகத்,

தம்முடை ஆற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினும் மன்ற தமக்காய்(கு)
இறுவரை இல்லை யெனின்

என்பது,

மான அருங்கல நீக்கி இரவென்னும்
ஈன இளிவினால் வாழ்வேன்மன்—ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்

என்னும் நாலடிச் செய்யுளின் கருத்தையும் அமைப்பையுமே கொண்டெழுந்த தன்றோ?

வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்

என்ற நாலடிச் செய்யுளின் கருத்தை,

.... மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடு தற்கு

என்று கூறித், தம் நூலுள் அமைத்தமை காண்க.

இனிப், ப்ழமொழி என்னும் நூலினின்றும் சில வருமாறு:—

நல்லா ரொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் பல்பொறிய
செங்கட் புலியே(று) அறப்பசித்தும் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்

என்ற செய்யுள்

ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி

என்ற பழமொழி நூலின் பழமொழியும், கருத்தும் அப்படியே அமைந்ததன்றோ?

மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின்

என்ற பழமொழி யடிகளையே யுட்கொண்டு,

கற்புடுத்து அன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு

என்று, உடுத்து என்ற ஆடைக்கேற்ற வினையையும், முடித்து என்ற மாலைக்கேற்ற வினையையும், மெய்ப் பூசி என்ற சாந்திற் கேற்ற வினையையும் கூறி, அன்பாகிய பூமாலையும், நாணுகிய சாந்தமும், நற்குண நற் செய்கையாகிய மணி பொன்னும், கற்பாகிய ஆடை யின் பின்னதே என்று உய்த்துணர வைத்தது பெரிதும் உணரத்தக்கது.

கஎ. உவமை

அடிகள் உவமையை ஆளுந்தன்மையை நோக்குவாம். அடிகள் சில பொருள்களுக்கு உவமை கூறுங் கால், ஒரே முதற் பொருளிலிருந்து உவமைப் பொருள் களை எடுத்துக் கூறுகின்றனர். தம் நூலின் முதற் செய்யுளிலேயே உருவக அணியில் இத்தன்மை யமைந்திருத்தலைக் காண்க. உவமை ஒன்றே பல வகை அணியாகத் தோற்றமளித்தலின், சிறந்த உவமைத் தன்மையே குறிக்கொண்டு அணிகளைக் காண்டலும் ஏற்புடைத்தன்றே?

நீரில்குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத(து) எம்பிரான் மன்று.

இச் செய்யுளில் இளமைக்கும், செல்வத்திற்கும், உடலுக்கும் உவமையாக நீரினின்றெழுந்த குமிழியையும், அந்நீரிலேயே எழும் அலையையும், அந்நீரிலேயே எழுதப்படும் எழுத்தையும் கூறி இருப்பதைக் காண்க.

இனி மற்ருென்று வருமாறு :—

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே ஏனையோர் செல்வம்—கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போல் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்.

இச் செய்யுளில் தமர் பிறர் என்று பாராது எல்லோருக்கும் பொருளை வழங்கும் தலையாயோர் செல்வத்துக்குப் பொது மகளும், தமர்க்கே வழங்கும் இடையாயார் செல்வத்துக்குக் குலமகளும், தமர் பிறர் எவர்க்கும் வழங்காத கடையாயார் செல்வத்துக்குக் கைம்மை மகளுமாக, மூன்றிடத்தும் ஒரே வகையாகப் பெண்ணினத்தினின்றே உவமை கூறினர்.

இனி மற்ருென்று வருமாறு :—

இடைதெரிந்(து) அச்சுறுத்து வஞ்சித்(து) எளியார்
உடைமைகொண்(டு) ஏமாப்பார் செல்வம்—மடநல்லார்
பொம்மன் முலைபோல் பருத்திடினும் மற்றவர்
நுண்ணிடைபோல் தேய்ந்து விடும்.

ஈண்டு 'எளியோரைப் பயமுறுத்தி வஞ்சித்து அவர் பொருளைத் தமதாகக் கொள்கின்ருேருடைய செல்வம், பெண்கள் முலைபோல் மிகுந்து தோன்றினும், அப்பெண்களின் இடையே போல் விரைவில் மெலிந்துவிடும்' என்று பெண் என்ற ஒரு பொருளிலேயே இரு உவமைப் பொருளையும் எடுத்துக் கூறினர்.

அடிகள் தம் நூலுள் பல இடங்களில் உவமையாக, உலகியல் ஒழுக்கத்தையே எடுத்துக் கூறுகின்றனர். அவை, உவமையாக அமைதலோடு, சிறந்த ஒழுகலாற்றையும் வலியுறுத்துவனவாயமைந்து, மக்கட்குச் சிறந்த கருத்துக்களை யுணர்த்துகின்றன. அவற்றுட் சிலவற்றைக் காண்போம்.

—நெடுங்காமம்

1. "முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
 பிற்பயக்கும் பீழை பெரிது"

2. .... கடும்பகல்
 'ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
 தீதென்று நீப்பரி தால்'

3. .... மனைத்தக்காள்
 மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
 பூண்ட புலப்படா போல்

4. கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினுள்
 பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்

உலகில் இல்லறம் மேற் கொள்வோரே பலராகலின், அவ்வில்லறத்துறை நிற்போர்க்கான சிறந்த அறிவுரைகளே ஈண்டு உவமையாக அமைத்திருத்தல் காண்க. காமவின்பத்தினும் கல்வி இன்பம் சால மிகுந்த தென்றும், அவையில் பேசப்புகுந்து மறதியால் சொல்லிழந்து நிற்போன் கல்வி, ஏதிலான்பாற் கண்ட இல்லினும் பொல்லாதென்றும் கூறப்படுகின்றன. இவ்விடங்களில் உவமேய உவமானங்களுள் அமைந்த வேறுபாட்டை எடுத்துக் குறிப்பித்தார். மற்றைய இரண்டு உவமைகளுள் ஒத்த தன்மை கூறப்படுகின்றன.

ஆன்றோர் பேரின்பத்திற்கு உவமை கூறுமிடத்து, உலகத்தில் எவ்வின்பத்திலும் சிறந்ததான, கண்டு கேட்டு உண்டுயிர்த் துற்றறியும் காமவின்பத்தையே எடுத்துக் கூறுவார்: அதுவே மக்கள் பலர்க்கும் விளங்குமாதலின். மாணிக்கவாசகர் கோவை செய்ததும் பேரின்பத்துக்கு உவமையாக மக்கள் உணருமாறு சிற்றின்பத்தை யுணர்த்தியதாகவன்றோ அமைகின்றது. இச்சிற்றின்பந்தானும் பேரின்பத்தை நோக்கமிகமிகச் சிறிதெனப்பட்டாலும், உலகில் இல்லற மென்னும் நல்லறம் இனிது நடைபெறுதற்கோர் உறுகாரணமாய் நிற்றலை நோக்க இழித்திடப்படாது. அதனாலன்றோ தெய்வப் புலவரான வள்ளுவரும், தம் நூலுள் காமத்துப்பாலை நுதலியதும். அறம் பொருள் இன்பம் வீடென்ற நான் குறுதிப்பொருளுள் இன்பமும் ஒன்றன்றோ? இது கருதியன்றே அடிகளும் இன்பந் துய்த்தலின் இயல்பைக்,

கருமம் சிதையாமே கல்வி கெடாமே
தருமமும் தாழ்வு படாமே—பெரிதும்தம்
இன்னலமும் குன்றுமே ஏரிளங் கொம்பனார்
நன்னலம் துய்த்தல் நலம்

என்று கூறினர். மற்றுக் கழிகாமமே இழித்திடப்படுமென்க. இது கருதி அடிகள்,

.... நெடுங்காமம்
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பிழை பெரிது

என்று கூறினர். கழிகாமத்தை நெடுங்காம மென்று குறித்தார்.

ஆதலின், இச் சிறந்த காம இன்பத்தைப் பல விடங்களிலும் உவமையாகக் கூறிச் செல்கின்றனர்.

"கல்வியை அறிவுடையோரே உணர்ந்து இன்புற்று மேலும் கல்வியில் மேலோராவர். அறிவிலான் சிறந்த கல்வி கைவரப் பெருன்" என்றுணர்த்துகின்ற இடத்தில் உவமையாக,

ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்

என்று கூறினர்.

செல்வர் தம் வலியால் எளியோர் செல்வத்தைத் தமதாக்கித் தஞ்செல்வத்தைப் பெருக்கினுல் அச் செல்வம்,

—மட நல்லார்
பொம்மென் முலேபோற் பருத்திடினும் மற்றவர்
நுண்ணிடைபோல் தேய்ந்து விடும்

என்று கூறினர். இன்பம்பெற அடையத் தொடங்கிய செல்வத்திற்குச் சிறந்த உவமையாயிற்று.

தமரென்றும் பிறரென்றும் பாராது எல்லோர்க்கும் வரையாது கொடுக்கும் வள்ளல்களில் செல்வத்திற்குப் பொது மகளேயும், தமர்க்கே பொருளேக் கொடுத்து வாழும் ஏனேர் செல்வத்திற்குக் குல மகளேயும், எவர்க்குங் கொடுக்காது வாழும் உலோபிகளின் செல்வத்துக்குக் கைம்பெண்ணேயும் உவமை கூறினர்.

பொதுமகளே போல்வ தலேயாயர் செல்வம்
குலமகளே ஏனேயோர் செல்வம்—கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போல் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்

செல்வத்தால் பிறரை இன்புறுத்தி வாழ்தற்கு இதனி னும் சிறந்த உவமை யுண்டோ?

பொருவின் சிறப்பும் இழிவும்

இனி, உவமை கூறுமிடத்துச் சிறந்த பொருளுக் குக் கூறப்படும் உவமை சிறப்புடைப் பொருளாயே யிருத்தலும், இழிந்த பொருளுக்குக் கூறப்படும் உவமை இழிந்ததாயே யிருத்தலும், சிறந்து தோன்றி உவமை இலக்கணமாயமையும். இங்ஙனம் அமைத் திருத்தலையுங் காண்போம்.

> வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
> காத்தது கொண்டாங் குவப்பெய்தார்—மாத்தகைய
> அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
> கந்துகோல் பூட்கைக் களிறு.

இச்செய்யுளில் அரசவை காவாத மேன்மக்களுக்கு அரண்மனை வெளியே கட்டப்பட்டிருக்கும் யானையும், அரசவை காக்கும் மற்றையோர்க்கு அந்தப்புரத்து உறையும் பூனையுமாக, உயர்ந்தோர்க்கு உயர்ந்ததும் மற்றையோர்க்கு இழிந்ததுமான உவமை அமைத் திருத்தல் காண்க. மற்றோரிடத்தும்,

> —கவிழ்மதத்த
> கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்தும்
> அம்மாண் பினவே அமைச்சு

என்று கூறி, அமைச்சனால் இடித்துரைக்கப் படு வோன் எல்லோர்க்கும் இறைவனான அரசனாதலின், அவனுக்குத் தக சிறந்த யானையையே உவமை யாக வமைத்தனர்.

மற்றோரிடத்து, அரசன் தன் செல்வம் பலர்க்கும் பயன்பட வாழவேண்டு மென்று கூறவந்தவர்,

வாங்குங் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறு—ஆங்கதுகொண்(டு)
ஊரும் எறும்(பு)இங்(கு) ஒருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று

என்று அரசனுக்கு யானையையே உவமையாகவமைத்தனர்.

இனி, மேலும் இழிந்த பொருட்கு உவமை கூறுவதைக் காண்போம்.

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங்(கு)ஓடிப் பரக்கும்—கழிமுடைப்
புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்கும் சேயார் முகத்து.

இச் செய்யுளில் துறவோர் மறைவாகக் கூடா ஒழுக்கத்தைக் கைக்கொண்டனராயின், அவரது அவ்விழி செயல் மறைவாகச் செய்யப் பட்டதாயினும், அது உலகெங்கும் அறியப்பட்டுவிடும் என்பதற்கு உவமையாகப், புலால் மறைவாக மூடிவைக்கப் பட்டிருப்பினும், அது தன் நாற்றத்தால் பலராலும் அறியப்பட்டுவிடும் என்று, இழிந்த பொருளையே கூறி உணர்த்தியது உணரத்தக்கது.

கூஅ. சொல்லாட்சி

இனி அடிகள் ஏற்ற சொல்லை ஏற்றவிடத்து ஆண்டு, பொருளைத் தெளிவாகவும் அழுத்தமாவும் உணர்த்தும் சொல்லாற்றல் படைத்தவர்.

நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத(து)எம்பிரான் மன்று.

இச் செய்யுளில் 'நமரங்காள்' என்ற சொல்லாட்சி கருதற்குரியது. இச்செய்யுளில் அடிகள் மக்கள் கடைப்பிடிக்கத் தக்க தலையாய கடமையை அறிவுறுத்துகின்றார். அம்மக்கள், தாம்சொல்லும் அறிவுரையில் பற்றுடையராய் அதை ஏற்க வேண்டியும், அவர் மாட்டுத் தாம் அன்புடையராய் அவர் ஆக்கத்திற்கான வழிகூறுதலை அவர் அறியவேண்டியும், அன்பு தோன்றத், தம்மோடு அவர்களையும் உளப்படுத்தி 'நமரங்காள்' (நம்மவர்களே) என்று விளித்துத், தாம் சொல்லக் கருதிய அறிவுரையைக் கூறத் தொடங்கியது உணரத்தக்கது.

இனி மற்றொன்று :—

முற்றும் உணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க.

ஈண்டுக் களியற்க என்ற சொல் கருதத்தக்கது. 'எல்லாம் கற்று விட்டோ' மென்று செருக்குக் கொண்டு திரிதல் சிலர்க் கியல்பாதலின், அங்ஙனம் செருக்கற்க என்று கூறவந்தவர், 'களியற்க' என்ற சொல்லை இட்டுரைத்தனர். எல்லாம் கற்றுவிட்டோமென்ற எண்ணம் அவர் மனத்தில் நிறைந்து, அவரைத் தம் உண்மை நிலை மறக்கச் செய்து, பிற கற்றோர்தம் பெருமையையும் மதியாமற் செய்து, தம்மைத் தாமே உயர்த்திக் கூறிக்கொள்ளவுஞ் செய்து, தம்மை அறிவுடையோர் பலரும் இகழ்ந்து ஒதுக்குமாறு தாழ்வு படவும் செய்கிறது. இச்செய்கை, கள்ளுண்டோன், தன்னிலையு முணராது, பிறர் நிலையு முணராது, தான் மிகவும் வலியுள்ளோனாக நினைத்துப் பிதற்றி, அறிவுடையோர் பலரும் இகழ்ந்து ஒதுக்குமாறு தாழ்வுபடும் செய்கையை ஒத்திருக்கின்றதன்றோ ?

'களியற்க' என்பது, 'மகிழற்க' என்று பொருள் படுமாயினும், 'களி' என்னும் சொல், 'கள்ளுண்டு களித் தலை'யே தொடக்கத்தில் குறித்துப், பின்னரே 'மன நிறைந்த மகிழ்ச்சியை' யுணர்த்திற்று. ஆதலின், 'செருக்கற்க' என்று கூறுமல், மேற்கூறிய பொருளை எல்லாம் உள்ளடக்கிக் 'களியற்க' என்று கூறினர்.

'களி' என்ற சொல்லால் இக்கருத்தையே கொண்டு மற்றோரிடத்தும் ஆண்டிருக்கின்றனர். அது வருமாறு:—

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுல் தாழ்வார்க்கு—அணியது
இளையாள் முயக்கெனினும்.........

ஈண்டு அரசசெல்வத்தில் மயங்கி இருக்கின்ற அரச ரைத், 'தணிவில் களிப்பினுல் தாழ்வார்' என்று குறித்தி ருக்கின்றூர். ஈண்டும் அரசசெல்வம் அவரைக் கள் ளுண்டு களித்தோர் போல் ஐம்பொறியும் தொழி லொழியச் செய்த தென்றுணர்த்தினூர்.

இனி மற்றொன்று:—

"கண்ணிற் சொலி செவியின் நோக்கும் இறைமாட்சி"

ஈண்டுக் கண்ணிற்கு வாயின் வினையாகிய சொல்ல லையும், செவிக்குக் கண்ணின் வினையாகிய நோக்கலை யும் இயைத்து, முரண்படத் தோன்றச் செய்து சிறந்த பொருள்களை உணர்த்தினூர். 'கண்ணிற் சொலி' என் றதால், தன்கட்குறிப்பால் பணியாளர்களை ஏவல் கொள்வதைக் குறித்தார். 'செவியின் நோக்கி' என் றதால், ஒற்றர்களை வைத்தாண்டு நாட்டுச் செய்தியறி யும் தன்மையை உணர்த்தினூர். மேலும் இங்ஙனம் கூறியதால், வாயினுல் வெளியிட்டுக்கூறுவது போன்று

மிகவுந் தெளிவாகக் கண்ணுற் குறிப்பிப்போன் என்பதும், தானே நேரிற்கண்டுணர்ந்தாற்போன்று பெரிதும் நம்பிக்கையான ஒற்றர்களை வைப்ப தோடு, ஒரு பொருளையே பலமுறை பல ஒற்றர்களால் ஆராய்ந்து தெளிவன் என்பதும் பெறப்பட்டன.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

இச்செய்யுளில் 'பூத்தல்' 'பூவாமை' என்ற சொற் களை அமைத்தது கருதத்தக்கது. அவைக்கு அஞ்சு வோராய்ப் பேசப்புகுந்து பேசமாட்டது நிற்போர் கல்வியும், அவைக்கு அஞ்சாமல் பேசும் கல்லாதார் வெற்றுரையும், ஈயாதார் செல்வமும், வறியோரின் இனிய குணங்களும் 'பூத்தலிற் பூவாமை நன்'றென்று கூறினர். பூத்தலாவது வெளிப்பட்டுத் தோன்றல். வெளிப்பட்டுத் தோன்றிய வழி இழிவாகிய தீய (நாற் றமே) எங்கும் பரத்தலால், பூவாமல் அரும்பாகவே அடங்கி இருக்க என்று குறித்தார். ஆகவே பூத்தல் பூவாமை என்ற சொல்லால் (நறுநாற்றமன்றித் தீ) நாற்றம் வெளிப்படுந்தன்மையும், அரும்பு போன்று அடங்கி யிருத்தல்வேண்டும் தன்மையும் பெறப்படு கின்றனவன்றோ? வேறெந்தச் சொல்லமைப்பினும் இப்பொருள்கள் தெளிவாகப் புலப்படாமையறிக?

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையின் ஏக்கழுத்த மிக்குடைய—மாகொல்
பகைமுகத்த வெள்வேலான் பார்வையிற் றிட்டும்
நகைமுகத்த நன்கு மதிப்பு

இச்செய்யுளில் அரசனால் நன்கு மதிக்கப்படுந் தன்மையைப், 'பார்வையிற்றீட்டும் நகைமுகத்த நன்கு மதிப்பு' என்று கூறினர். 'பார்வையிற் றீட்டுதல்' என்று அவ்வவர்க்குத் தக கண்ணோக்கம் செய்தலை யுணர்த்தியமை காண்க. கண்ணோக்கத்தின் தகுதிக் கேற்பவே மதிப்பின் குறைவும் நிறைவும் என்பது, 'தீட்டுதல்' என்ற சொல்லால் உணரப்படும்.

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

இச்செய்யுளில் கூறிய இவ்வுபாயத்தை மறவாது மனத்தகத்தே கொண்டு எக்காலத்தும் அங்ஙனம் நடத்தலிற் றவரலாகா தென்று குறிப்பார் 'நோற்பது' என்ற சொல்லை இட்டுரைத்தார். மேலும் பிறர் புகழைத் 'தூற்ற' வேண்டுமென்று குறித்துத், (தூற்றப்படும்பொருள் பலவிடங்களிலும்பரவுதல்போலப்,) பிறர்புகழைப்'பலரிடத்தும் பரப்பவேண்டு'மென்றார். தீயோர் பிறர் பழி தூற்றலை விரும்பிச் செய்தல்போல, இவனும் பிறர் புகழ் கூறுதலை விரும்பிச் செய்ய வேண்டுமென்றும் குறித்தார்.

இனி, அடிகள் சொற்களை நயம்பட அமைத்தலையுங் காண்க.

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி.

ஈண்டுத் 'தின்று, குடித்த' என்ற சொல்லமைதியை நோக்குக.

இனி அடிகள், சொல்லக் கருதிய மக்களின் செயல், நம் கண் முன் தோன்றுமாறு, தக்க சொற்களை இட்டுரைத்தலைக் கீழ்க்காணும் அடிகளிற் காண்க.

1. புறம்நட்டு அகம்வேர்பார் நச்சுப் பகைமை
2. கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடன்ஞாலம்
3. விழலர், விளிவுஉன்னி வெய்து உயிர்ப்பர் மெய்ப்- [பயன் கொண்டார்
   சுவியார் சுமைபோடு தற்கு
4. மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் [கொல்வான்போல்
   கைவிதிர்த்(து) அஞ்சப் படும்
5. அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வி
6. நெடும்பகல் கற்ற அவையத்(து) உதவாது
   உடைந்துளார் உட்குவருங் கல்வி
7. ஊழ்வலி உன்னிப் பழிநாணி உள்உடைவார்
   தீய செயினும் சில
8. புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும்
   சென்றுதைக்கும் சேயார் முகத்து.

கக. சொல்லுந் திறம்.

அடிகள் மனங் கொள்ளுமாறு வலியுறுத்திக் கூற லில் வல்லவர் என்பதற்கு எடுத்துக் காட்டாகச் சில செய்யுளைக் கீழே காண்போம்.

1 ஒற்றிற் றெரியாச் சிறைப்புறத்து ஓர்துமெனப்
  பொற்றேள் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
  அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
  முறையிடினும் கேளாமை யன்று.

ஈண்டு உடன்பாட்டு முகத்தாற் கூறியதையே எதிர்மறை முகத்தானுங் கூறி வலியுறுத்தியவாறு காண்க.

2. ஈகை யரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓ ஓ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனல் வாய்ப்பூட் டிடப்படின்மற்(று)
ஆஆ இவரென்செய் வார்.

தீவினைக் கொல்லனால் வாய்ப்பூட் டிடப்பட்டிருத்தலால், அவர் மேல் குற்றமில்லை யென்று சொல்வார் போல், அவரது கொடுந் தீக் குணத்தை யுணர்த்தியவாறு காண்க.

3. தம்முடை ஆற்றலும் மானமுந் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினும் மன்ற தமக்காங்(கு)
இறுவரை இல்லை எனின்.

மானம் கெட்டவிடத்து, உயிர்வாழ்தல் தக்கதன்று என்று கூறவந்தவர், உயிர்வாழலாம் என்று கூறுவார் போன்று கூறி, இறப்பு இல்லையாயின் என்று இறுதியில் கூறி முடித்தது அவரது சொல் வன்மையை யுணர்த்தும்.

உ௰. புகழ்வது போலப் பழித்தல்

அடிகள் புகழ்வது போலப் பழித்துக்கூறும் வஞ்சப் புகழ்ச்சியமையச் செய்யுள் இயற்றி மனங்கொளுமாறு பொருள்களைக் கூறுவர். அவை வருமாறு:—

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

ஒருவர் கற்றவழி நில்லாராயினும், தம் சொல்லள வினாலேயே, தம்மைப் பெரியோராகத், தம்மால் கற்பிக் கப்படுவோர் மதிக்குமாறு, தந்திரமாக நடந்துகோட

லின், இதுவே பெரியதொரு திறமையாம் என்று கூறி யமை காண்க.

> பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
> தமக்குப் பயன்வே றுடையார்—திறப்படூஉம்
> தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
> கோவினை வேலை கொளல்.

'யமதண்டனை யடைவார்' என்பதைத் 'தம்மைத் தண்டிக்கச் செய்து யமனை வேலைவாங்குவர்' என்று கூறியமை காண்க.

உக. செய்யுள் அமைப்பு.

அடிகள் கொண்டு கூட்டுதல் முதலியன இன்றி, ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளுமாறு, செப்ப லோசை சிறக்க வெண்பா அமைக்குந் திறத்தினர். எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் காண்போம்:—

1. ஒற்றிற் றெரியாச் சிறைப்புறத்து ஓர்துமெனப்
 பொற்றேள் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
 அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை ; சென்று
 முறைபிடினும் கேளாமை யன்று.
2. இகழின் இகழ்ந்(து)-ஆங்(கு) இறைமகன் ஒன்று
 புகழினும் ஒக்கப் புகழ்ப—இகன்மன்னன்
 சீர்வழிப் பட்டதே மன்பதைமற்; றென்செய்யும்
 நீர்வழிப் பட்ட புணை.
3. முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார்
 நிறையும் நெடுநாணும் பேணர்—பிறிதுமொரு
 பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவம்
 கற்பின் மகளிர் பிறப்பு.

இவ்வெண்பாக்களில், சிறப்பாகக் கடை இரண் டடிகள் பேச்சு முறையிலேயே அமைந்திருத்தல் காண்க.

Publication No. 423

KUMARAGURUPARAR
KATTIYA VAZHI

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,
Tirunelveli :: & :: Madras.

Price Rs. 1-4-0